ஜூன் 2019

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

Vol.2, Issue 1 | Annual Subscription ` 420


Rotary



# சென்னையில் 2019–20 மாவட்ட தலைவர்கள் சந்திப்பு



*சில DGEக்கள்*



ரஷீதா பகத்

*இடதிலிருந்து:* RIDE *பரத் பாண்டியா,* PRID *சேகர் மேத்தா மற்றும்* PRIP *கல்யாண் பானர்ஜீ.*



ஜெய்ப்ரீ

*இடதிலிருந்து:* DGEs *சிவநாராயண ராவ், சமீர் ஹரியாணி, இராஜேந்திர பாம்ரே, கிரிஷ் மசுர்கர்,* BN *ரமேஷ், அஜய் அகர்வால், பீனா தேசாய், மோகன் சந்திரவாக்கர்,* RID C *பாஸ்கர்,* RIDEs *பரத் பாண்டியா, கமல் சங்வி மற்றும்* DGE *ஜீதேந்திர திங்ரா.*

# உள்ளே


**12** **தொடர்ந்து எனது தேடலை விரிவுபடுத்துகிறது ரோட்டரி: பரத் பாண்ட்யா**

RIDE பரத் பாண்டியா தனது ரோட்டரி பயணத்தை நினைவு கூர்ந்து இனிவரும் காலத்திற்கான தனது இலக்கினைப் பகிர்ந்துகொண்டார்.

**22** **இயக்குநர் என்ற முறையில் நிர்வாகி என்பதை விட துணை புரிவது தான் என் பணி: கமல் சங்வி**

RIDE கமல் சங்வி தன்னை ஒரு சேவை மனப்பான்மை கொண்ட மனிதனாக எப்படி மாற்றியது என்பதை விளக்குகிறார்.

**34** **ரோட்டரியின் எதிர்காலத் திட்டம்: மார்க் மலோனி**

மலோனி ரோட்டரியில் தான் பார்க்க விரும்பும் மாற்றங்களையும் விவரிக்கிறார்.

**38** **கர்நாடக மாநிலம் பைலக்குப்பே என்ற திபெத் உலகம்!**

பைலகுப்பேயில் நம்ட்ரோலிங் மடாலயத்தைச் சுற்றி திபெத்தியர்களுக்கான ஒரு பகுதி உள்ளது.

**42** **கிறிஸ் சித்தலே, தட்டம்மை ஒழிப்பு போராளி, மறைந்தார்!**

தட்டம்மை மற்றும் போலியோ நோய்களை ஒழிப்பதில் RC மெட்ராஸ் சங்கத்தின் முதுபெரும் ரொட்டேரியனை கௌரவிக்கும் கட்டுரை.

**48** **ரோட்டரியின் சுகாதாரத் திட்டத்தை செயல்படுத்த தொண்டர்களுக்கு பயிற்சி**

WinS தொடர் கருத்தரங்குகள் பள்ளிகளில் சிறந்த சுத்தம் சுகாதாரத்தைக் கடைபிடிப்பது குறித்து நடந்தது.

**54** **மன அழுத்தத்தின் விஷப்பல்லை உடைப்போம்!**

மன அழுத்தம் ஏற்படுவதற்கான காரணங்களைப் புரிய வைக்கும் கட்டுரை.

**60** **மணிப்புரி: தேவதையின் நாட்டியம்**

மணிப்புரி நடனத்தின் பெருமைக்குரியவர்கள் மணிப்பூரில் உள்ள அதிகாரமிக்க பாரம்பரிய குழுவான மெய்தீஸ்.



















அட்டை படம்: புதிய RI இயக்குநர்கள் பரத் பாண்ட்யா மற்றும் கமல் சங்வி.

படம்: ரஷிதா பகத்

## ரோட்டரியின் குறைபாடுகளையும் எடுத்துரைக்கவும்

*சங்கங்களின் நிகழ்வுகளை மட்டும் குறிப்பிடுவதில்லை ரொட்டேரியன்களின் கருத்துக்களையும் சேர்த்து தான் தருகிறீர்கள். ஆனால், அந்த கட்டுரைகள் ரோட்டரியின் நன்மைகளை மட்டும் தான் எடுத்துக் காண்பிக்கிறது. மிக அற்புதமான இயக்கம் என்றாலும் ரோட்டரியின் குறைபாடுகளையும் எடுத்துக் காட்டுவது அவசியம். கடந்த 20 ஆண்டுகளில் நான் சில பெரிய மாற்றங்களை பார்த்துள்ளேன், வேலைக்கு பதிலாக பணத்தை கொண்டாடுவதையும் பார்க்கிறேன். களம் இறங்கி வேலை செய்பவர்களுக்கு பதிலாக பெரும் தொகை வழங்குபவர்கள் பாராட்டப்படுகிறார்கள்.*

*தலைநகரங்களைத் தவிர, சின்ன நகரங்களில் உள்ள ரொட்டேரியன்கள் மிகவும் அற்புதமானத் திட்டங்களை புகைப்படங்கள் ஏதுமின்றி செய்கிறார்கள். ஆனால் இப்போதெல்லாம் சில உறுப்பினர்கள் முகஸ்துதிக்காகவும் DG களிடமிருந்து ஆதாயங்கள் பெற செய்யும்காரியங்கள் ரோட்டரியின் கலாச் சாரமான “எல்லோரும் சமம்” என்பதற்கு எதிராக செல்கிறது. தேர்தல் வழிமுறையும் குழப்பம் நிறைந்ததாக உள்ளது; சில சமயம் ஒரு பரிந்துரைக் குழு உள்ளது, சில சமயம் அவர்கள் பிரச்சாரம் செய்யவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.*




*ஒரு மாவட்ட நிகழ்ச்சியில் வேட்பாளர்கள் தங்களின் திட்டத்தை கூறுவதற்கு சில நிமிடங்கள் வழங்கப்பட்டதை நான் கண்டேன். ஆனால் இப்போது எனக்கு பிரச் சாரம் செய்வதற்கு அனுமதி இல்லை என்கிறார்கள். அப்படியானால் ஒரு ரொட்டேரியனால் தனது தகுதியை வாக்காளர்களிடம் எப்படி தெரிவிக்க முடியும்.*

Y K *கபூர்,* RC *பஞ்சஷீலா பார்க்* — RID 3011

### பிரமாண்டமான உள்ளடக்கம்

மே மாத இதழ் அட்டைப் படத்தில் RIPE மார்க் மலோனி மற்றும் கே அவர்களின் புகைபடங்களுடன் மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது, மேலும் மலோனியுடன் ஆசிரியரின் பேட்டி மதிப்பு மிகுந்ததாகவும், ரோட்டரியை மிக உயரத்திற்கு எடுத்துச் செல்லக்கூடிய பல விலை மதிப்பற்ற யோசனைகளையும் கொண்டிருந்தது. “நமது மகத்தான ஜனநாயக நடைமுறைகளை நாம் கொண்டாடுவோம்” என்ற தலையங்கம் தகவல் மிகுந்ததாகவும் சிந்தனையை தூண்டுவதாகவும் இருந்தது.

தலைவர் பேரி ராஸினின் இளைஞர்களுக்கு உந்துசக்தி கொடுப்பது என்ற செய்தி மிகவும் அருமையாக இருந்தது மற்றும் RID C பாஸ்கரின் தீபக் மற்றும் ராஜுவின் கதை மிக சுவாரசிய மாகவும் சமூகத்தில் ஏழைகள் எதிர்கொள்ளும் கஷ்டங்களைப் பிரதிபலிப் பதாகவும் இருந்தது. உடல்நிலை காரணமாக RIPN பதவியிலிருந்து சுஷீல் குப்தா ராஜினாமா செய்ததை வாசிக்க வேதனையாக இருந்தது. அவரின் உடல்நிலை நலம் பெற வாழ்த்து கிறேன். RID C பாஸ்கர் பற்றிய சந்தோஷமான ரொட்டேரியன் முதல் பரபரப்பான மனிதன் வரை என்ற அவரின் பயணம் மிகவும் அற்புதமாகவும், மேலும் அவர் செய்த சேவைகள் மிகவும் போற்ற தகுந்ததாகவும் இருந்தது. PRIP KR ரவீந்திரன் RI, DGகளின் செலவுகளுக்கு 11 மில்லியன் டாலர் செலவு செய்கிறது என்று கூறியது; நமக்கு ஒரு புதிய செய்தியாகும்.

ஷீலா நம்பியாரின் உண்பதில் கவனம், நமது சாப்பாட்டு முறையை மாற்றிக்கொள்ள மிகவும் பயனுள்ளதாக இருந்தது. வண்ணமயமான இஸ்தான்புல்லில் உள்ள துருக்கிய கபாப் புகைப்படங்கள் மற்றும் 31 ஆண்டுகளாக பெண்களைக் கொண்டாடும் ரோட்டரி போன்ற எல்லா கட்டுரைகளும் மிகவும் சுவாரசியமாக இருந்தது. இப்படிப்பட்ட கவர்ச்சிகரமான இதழை வெளியிட்டதற்காக ஆசிரியர் குழுவிற்கு வாழ்த்துக்கள்

M T பிலிப்
RC திருவனந்தபுரம் சப்அர்பன் — RID 3211

RIPE மலோனி மற்றும் கே-யின் அட்டைப்படம் மற்றும் சிகாகோவில் உள்ள பால் ஹாரிஸ் வீட்டிற்கு பவேலா மற்றும் ரவிசங்கரின் விஜயம் மிகவும் அருமை. மெலோனியுடன் ரஷீதாவின் நேர்காணல் மற்றும் 31 ஆண்டுகளாக பெண்களை கொண்டாடும் ரோட்டரி என்னும் ஜெயஸ்ரீயின் அறிக்கை மிக சிறப்பாக இருந்தது.

ஏப்ரல் மாத வெளி யீட்டில் கூட பல உத்வேகம் கொண்ட கட்டுரைகள் இருந்தது, அதில் பெண்களைப் போற்றுவது என்ற இதழாசிரியரின் கட்டுரை, RI தலைவர் பேரி ராஸின் அவர்களின் தாய் சேய் பராமரிப்பு, ரோட்டரியை தொட்டு செல்லும் ஒரு இயக்கம் ஆக்க வேண்டாம், கடினமான நேரத்தில் அமைதியை காப்பது மற்றும் மலோனி 6 மில்லியன் டாலர் மதிப்புள்ள திட்டங்களை கொல்கத்தாவில் நிறை வேற்றியது ஆகியவை அடங்கும்.

டேனியல் சிட்டிலாப்பில்லி
RC கலூர் — RID 3201

RID C பாஸ்கர் அவர்களின் சந்தோஷமான ரொட்டேரியனிலிருந்து பரபரப்பான மனிதனான

பயணம் என்ற உங்கள் கட்டுரை நன்றாக இருந்தது. திஷாவில் PRIP KR ரவீந்திரனின் பேட்டியும் அறியாமையை நீக்குவதாக இருந்தது.

சம்பத்குமார், RC கோயம்புத்தூர் எலைட் — D 3201

RID C பாஸ்கர் அவர்களின் சந்தோஷமான ரொட்டேரியனில் இருந்து பரபரப்பான மனிதனான பயணக் கதை என்பது ஒரு உண்மையான ரொட்டேரியனின் பிரதிபலிப்பாகும். PRIP K R ரவீந்திரன் DGகளுக்கு வழங்கப்படும் சலுகைகளுக்கு செலவாகும் தொகைக்கான ஒரு அபாய மணியை எழுப்பியுள்ளார்.

நன் நாராயணன், RC மதுரை வெஸ்ட் — RID 3000

### RID மேஜையில் இருந்து ஒரு நல்ல செய்தி

உத்திரப்பிரதேசத்தில் ஆண்கள் போல் உடை அணிந்து பெண்கள் வேலைக்கு செல்வதற்கு தடையாக இருந்த சமூக தடுப்புகளை தாண்டி முடி திருத்தும் கடையில் பணி புரியும் ஜோதி மற்றும் நேஹா ஆகியோரை பாராட்டுவதில் RID C பாஸ்கர் அவர்களுடன் நாமும் கைகோர்க்கிறோம்.

உடல் நிலை காரணமாக 2020–21 ஆம் ஆண்டுக்கான RIPN பதவியிலிருந்து சுசீல் குப்தா அவர்களின் ராஜினாமா ரொட்டேரியன்களுக்கு ஒரு அதிர்ச்சியான செய்தி. அவர் உடல் நலம் நன்றாக நாம் பிரார்த்திக்கலாம். மடகாஸ்கரில் உள்ள RID 3080 மற்றும் 3070வில் 3500 நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்த 19 மருத்துவர்களை கொண்ட குழு செய்த சிறந்த வேலையை கண்டு மகிழ்கிறேன்.

S முனியாண்டி, RC திண்டுக்கல் போர்ட் — RID 3000

To revert to
**English or Hindi**
version please mail to us at
*rotarynews@rosaonline.org.*

பிற்படுத்தப்பட்ட பல குழந்தைகளின் முகத்தில் சிரிப்பை வரவழைத்த RID 3181 DG P ரோகிநாத் மற்றும் அவருடைய மாவட்டத்தில் உள்ள சங்கங்கள் மற்றும் அதன் தலைவர்கள் கர்நாடகாவில் ஏற்றுக்கொண்ட அங்கன்வாடி திட்டத்தை பற்றி படித்து மகிழ்ச்சியடைந்தேன். அதனுடன் போடப்பட்டிருந்த புகைப்படம் அந்த கதைக்கு மேலும் மதிப்பை கூட்டியது.

RI மற்றும் TRF இடையிலான வித்தியாசத்தை கூறிய கட்டுரை, கருத்து மிகுந்ததாகவும் புதிதாக ரோட்டரியில் சேர்பவர்களுக்கு விளக்கம் அளிக்கக் கூடியதாகவும் இருந்தது. கேரளா வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடு கட்டுவதற்காக வெள்ள நிவாரண நிதி ஒன்றை அமைத்தது மனதை கனக்க வைத்தது. தாய்ப்பால் வங்கி மற்றும் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை முகாம் போன்றவற்றுடன் அமராவதி ரோட்டரி திட்டங்களை RIPE மார்க் மலோனி பார்வையிட்டதை மிக அழகாக விவரித்து இருந்தார்கள்.

Dr N இன்பமணி
RC விருதுநகர் —RID 3212

ஏப்ரல் இதழில் RID 3181 னின் DG P ரோகிநாத் அவர்களின் தலைமையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டங்கள் போற்றப்பட வேண்டியவை.

நவீன் R கர்க்
RC சுனம் — RID 3090

DG P ரோகிநாத் மற்றும் RC மைசூர் மிட்டவுன் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் அங்கன்வாடி திட்டத்திற்காக வாழ்த்துக்கள். RC கொல்கத்தா மகாநகர் நிறைவேற்றிய RIPE மார்க் மலோனி செயலாக்கிய 40 கோடி திட்டத்தைப் பற்றிய கட்டுரை மிக சுவாரசியமாக இருந்தது.

Dr P சங்கீத்குமார், RC சேலம் கிராண்ட் — RID 2982

ரைட் டு கோ என்ற தானேவின் சுகாதார அறப்போர் என்ற RC தானே ஹில்ஸ் சங்கத்தின் கட்டுரைக்காக, ஜெயஸ்ரீ அவர்களுக்கு நன்றி. RC கொல்கத்தா மாநகரின் மாபெரும் திட்டத்தினால் 1,50,000 மக்கள் பயன்பெறுவார்கள் என்பது அருமையான ஒன்று. இப்படிப்பட்ட 40 கோடி மதிப்பிலான ஆறு உலகளாவிய மானியத் திட்டங்களை நிறைவேற்றிய TRFக்கும் இந்தப் பெருமை சேரும். ரோட்டரி நியூஸ் மூலம் PRID மெஹ்தா மற்றும் RC கொல்கத்தா மகாநகர் பயனாளிகளை எப்படி அடையாளம் கண்டு கொண்டார்கள் என்பது பற்றிய விபரங்களை பகிரும்படி கேட்டுக் கொள்கிறேன். இதன் மூலம் மகாராஷ்டிராவிலும் இது போன்ற மகத்தான திட்டத்தை செய்யலாம்.

அத்துல் பிடே
RC தானே ஹில்ஸ் — RID 3142

ஏப்ரல் மாத இதழில் RIPE மார்க் மலோனி கொல்கத்தாவில் துவங்கிய மாபெரும் திட்டம்; RI மற்றும் TRFக்கு இடையேயான சிறு கருத்து வேறுபாடுகளை ஒரு அருமையான கட்டுரை. அங்கன்வாடிகளை சீரமைப்பது ஒரு மாபெரும் நடவடிக்கையாகும், RID 3291ன் கீழ் ஹவுராவில் உள்ள 20 வங்காள பள்ளிகளில் WinS துவங்கப்பட்டது ஒரு சக்திவாய்ந்த திட்டமாகும். தாய் சேய் நலம் பற்றிய RI தலைவர் பேரி ராஸின் அவர்களின் கட்டுரை மற்றும் RID C பாஸ்கர் அவர்களின் தாய் மற்றும் பிறந்த குழந்தை சுகாதாரம் மற்றும் பராமரிப்பு பற்றிய கட்டுரையும் நமது நினைவலைகளை மேலும் சிறப்பானதாக்கியுள்ளது.

சௌமித்ரா சக்ரபர்த்தி
RC டோலிகுன்கு — RID 3291

*உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்: rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com*

## Governors Council


| | | |
|---|---|---|
| RI Dist 2981 | DG | S Piraiyon |
| RI Dist 2982 | DG | Nirmal Prakash A |
| RI Dist 3000 | DG | RVN Kannan |
| RI Dist 3011 | DG | Vinay Bhatia |
| RI Dist 3012 | DG | Subhash Jain |
| RI Dist 3020 | DG | Guddati Viswanadh |
| RI Dist 3030 | DG | Rajiv Sharma |
| RI Dist 3040 | DG | Gustad Anklesaria |
| RI Dist 3053 | DG | Priyesh Bhandari |
| RI Dist 3054 | DG | Neeraj Sogani |
| RI Dist 3060 | DG | Pinky Patel |
| RI Dist 3070 | DG | Barjesh Singhal |
| RI Dist 3080 | DG | Praveen Chander Goyal |
| RI Dist 3090 | DG | Dr Vishwa Bandhu Dixit |
| RI Dist 3100 | DG | Deepak Jain |
| RI Dist 3110 | DG | Arun Kumar Jain |
| RI Dist 3120 | DG | Stuti Agrawal |
| RI Dist 3131 | DG | Dr Shailesh Palekar |
| RI Dist 3132 | DG | Vishnu S Mondhe |
| RI Dist 3141 | DG | Shashi Sharma |
| RI Dist 3142 | DG | Dr Ashes Ganguly |
| RI Dist 3150 | DG | Ramesh Vangala |
| RI Dist 3160 | DG | Konidala Muni Girish |
| RI Dist 3170 | DG | Ravikiran Janradan Kulkarni |
| RI Dist 3181 | DG | Rohinath P |
| RI Dist 3182 | DG | Abhinandan A Shetty |
| RI Dist 3190 | DG | Suresh Hari S |
| RI Dist 3201 | DG | A Venkatachalapathy |
| RI Dist 3202 | DG | Dr E K Ummer |
| RI Dist 3211 | DG | E K Luke |
| RI Dist 3212 | DG | K Raja Gopalan |
| RI Dist 3231 | DG | C R Chandra Bob |
| RI Dist 3232 | DG | Babu Peram |
| RI Dist 3240 | DG | Dr Sayantan Gupta |
| RI Dist 3250 | DG | Kumar Prasad Sinha |
| RI Dist 3261 | DG | Nikhilesh M Trivedi |
| RI Dist 3262 | DG | Bhabani Prasad Chowdhury |
| RI Dist 3291 | DG | Mukul Sinha |


## Board of Permanent Trustees & Executive Committee


| | | |
|---|---|---|
| PRIP | Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP | Kalyan Banerjee | RI Dist 3060 |
| RIPN | Sushil Gupta | RI Dist 3011 |
| PRID | Sudarshan Agarwal | RI Dist 3011 |
| PRID | Panduranga Setty | RI Dist 3190 |
| PRID | Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID | Yash Pal Das | RI Dist 3080 |
| PRID | Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID | P T Prabhakar | RI Dist 3232 |
| PRID | Dr Manoj D Desai | RI Dist 3060 |
| RID | C Basker | RI Dist 3000 |
| TRF Trustee | Gulam A Vahanvaty | RI Dist 3141 |
| RIDE | Dr Bharat Pandya | RI Dist 3141 |
| RIDE | Kamal Sanghvi | RI Dist 3250 |


### Executive Committee Members (2018–19)


| | |
|---|---|
| DG Rajiv Sharma<br>Chair – Governors Council | RI Dist 3030 |
| DG Pinky Patel<br>Secretary – Governors Council | RI Dist 3060 |
| DG Subhash Jain<br>Secretary – Executive Committee | RI Dist 3012 |
| DG A Venkatachalapathy<br>Treasurer – Executive Committee | RI Dist 3201 |
| DG Shashi Sharma<br>Member – Advisory Committee | RI Dist 3141 |


## ROTARY NEWS / ROTARY SAMACHAR


**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan


## Send all correspondence and subscriptions to


ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers, 34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India. Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website : www.rotarynewsonline.org



Printed by P T Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by P T Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.



The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.



# சுந்தராவைப் பள்ளிக்கு அனுப்புவோம்!

ரோட்டரி ஆண்டு முடியும் நிலையில், ரோட்டரி சங்கங்கள், மாவட்ட அளவிலான அமைப்புகளில் புதிதாகப் பொறுப்பேற்கும் நிர்வாகிகளுக்கு வழி விடும் வகையில் தலைவர்கள், நிர்வாகிகள் பதவிகளை நிறைவு செய்கிறார்கள். அனைத்து நிலைகளிலும் நிறைவேற்றப்பட்ட பணிகள் குறித்து கணக்கிடுவதற்கு இது சரியான தருணமாகும். ரோட்டரியின் மேலிடத் தலைமைகள் தொடர்ந்து வலியுறுத்தி வருவதைப் போல் ரோட்டரி இயக்கத்தின் உண்மையான செயல்பாடு ரோட்டரி சங்கத்தின் நிலையில் தான் அமைந்துள்ளது. ரோட்டரி சங்கத் தலைவர், மாவட்ட ஆளுநர், RI இயக்குநர் மற்றும் தலைவர் ஆகியோரது வெற்றி அவர்கள் சார்ந்த ரோட்டரி சங்கத்தினர் தங்களது சங்கங்கள் நிலையில் ஆற்றிய பணிகளின் அடிப்படையில் தான் மதிப்பிடப்படும். சமுதாயத்தில் மக்களின் வாழ்க்கையில் மாற்றம் நேரும் வகையில் செயல்படுத்திய திட்டங்கள் மூலமாகவே ரோட்டரி போன்ற சேவை நிறுவனத்தின் உள்ளார்ந்த தகுதி உண்மையில் மதிப்பிடப்படும்.

RI பதவி பொறுப்பேற்கும் பரத் பாண்ட்யா, கமல் சங்வி ஆகியோரிடம் ரோட்டரிப் பணிகள் குறித்து ரோட்டரி நியூஸ் (Rotary News) இதழ் நேர்காணல் இடம்பெற்றுள்ளது. இவர்கள் தலைமை பதவியை அதிகாரமுள்ள பதவிகளாகக் கருதாமல், பொறுப்புகள் கொண்ட பதவிகளாகக் கருதுகிறார்கள் என்ற ஒற்றைத் தகவல் அந்த நேர்காணல்கள் மூலம் தெரிய வருகிறது. அத்துடன், நலிந்தோர்க்கு சேவை புரிவதற்கும் ஏழைகளின் முகங்களில் மகிழ்ச்சி ஏற்படுத்தவும் அரிய வாய்ப்புகளை ரோட்டரி அளித்துள்ளதை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறார்கள்.

ஏழை, எளியவர்களுக்கு உதவுவதற்கு இந்தியா இன்றைக்கு பரவலான வாய்ப்புகளை அளித்துள்ளது. குடிநீர்த் தட்டுப் பாடு முதல் வேளாண்மையை பாதிக்கும் கடும் வறட்சி வரையில், வேலைவாய்ப்பு இல்லாத ஏராளமானோர், உதவியை எதிர்ப்பார்க்கும் பல லட்ச இந்தியர்களுக்கு உதவ வாய்ப்புகள் பல உள்ளன.

ஏழைகள், எளியவர்களுக்கு உதவ அரசின் நலத் திட்டங்கள் உள்ளன. அத்திட்டங்களின் பலன்களை அவர்கள் அனுபவிப்பது பிரம்ம பிரயத்தனமாக இருக்கிறது.

இந்த இடத்தில் ரோட்டரி போன்ற தொண்டு நிறுவனங்கள் உண்மையான மாற்றத்தைச் செயல்படுத்த இயலும். போலியோ ஒழிப்புத் திட்டமோ, தற்போது உடல் நலத் திட்டம், எழுத்தறிவுத் திட்டமோ அரசுடன் ரோட்டரி சங்கத்தினர் இணைந்து பணியாற்றுகிறார்கள். அரசின் நலத் திட்டங்கள் மக்களைச் சென்றடைய ரோட்டரியின் உதவி பெரிதும் கை கொடுக்கிறது.

புதிய அரசு மத்தியில் உருவாகிறது. நாட்டின் பொருளாதார, வளர்ச்சி, வருவாய்ப் பிரிவினர், வாழ்வாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துவதில் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கு மதிப்பு மிக்க கூட்டாளியாகும் இன்னொரு வாய்ப்பு ரோட்டரிக்குக் கிடைத்துள்ளது. அதை இவான்ஸ்டனில் உள்ள ரோட்டரி தலைமையகமும் இந்தியாவின் ரோட்டரி தலைமையகமும் பெரிதாக மதிக்கின்றன.


எழுத்தறிவுத் திட்டத்தில் மிகுந்த ஈடுபாடு காட்டிய இன்னர்வீல் சங்க முன்னாள் ஆளுநரும் பரத் பாண்ட்யாவின் மனைவியுமான டாக்டர் மாதவியின் சேவையே சாட்சியாகும்.

மாதவி, சுவையான சம்பவம் ஒன்றை கூறினார். நல்ல உடை அணிந்து சிறுவர்கள் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தனர். அவர்களை சுந்தரா என்ற சிறுமி பார்த்துக் கொண்டிருந்தாள். அவளிடம் அந்தச் சிறுவர்கள், “சுந்தரா, பள்ளிக்கூடத்துக்கு ஏன் வருவதில்லை?” என்று கேட்டனர். அதற்கு அவள், “என்னிடம் சீருடை, பை, பென்சில், காலணி, எதுவும் கிடையாதே, எப்படி செல்வது?” என்றாள். அதற்கு சிறுவர்கள், “ரோட்டரி, இன்னர் வீல் சங்கத்தினர் பள்ளிக்கு நிறைய உதவிகளை வழங்கி, சேவை புரிந்துள்ளனர், கவலைப்படாதே, அவர்கள் எல்லாம் அளிப்பார்கள்” என்று கூறியுள்ளனர். அதையடுத்து சுந்தரா பள்ளியில் சேர்ந்தாள். அவள் பள்ளிக்கூடத்தில் நுழைந்தபோது, மற்றவர்கள் எல்லாம் அவளைக் கட்டியணைத்து வரவேற்றனர். அது ஓர் அழகான நிகழ்வு என்றார்.

அதைப் போல் மும்பைக்கு 120 கி.மீ. தொலைவில் உள்ள ஆச்ரம் சாலாவில் சிறுவர்கள் சிறந்த ஓட்டப் பந்தய வீரர்கள். ஆனால், அவர்கள் ஷூக்கள் வாங்குவதற்கு சக்தி இல்லாததால், வெறும் காலில் ஓடினர். அதையடுத்து இன்னர்வீல் சங்கத்தினர் அவர்களுக்கு விளையாட்டுக்கான ஷூக்கள், ஓட்டப் பந்தயத்துக்குப் பயிற்சி அளிக்கும் வல்லுநர் ஆகியவற்றுக்கு ஏற்பாடு என்றார் மாதவி. உடன் இருந்த பரத் பாண்ட்யா, இவை போன்றவை எங்களைத் தொடர்ந்து இயக்குகின்றன என்று பெருமையுடன் குறிப்பிட்டார்.



ரஷீதா பகத்



# ரோட்டரியின் எல்லையில்லா வாய்ப்புகள்

BE THE INSPIRATION

அன்பார்ந்த ரொட்டேரியன்களே,

சென்ற ஆண்டு ஜூலையில் RI தலைவராக பொறுப்பேற்றது முதல் நான் கண்ட காட்சிகள், சந்தித்த மனிதர்கள் எல்லாவற்றையும் பற்றி மனதில் அசைபோட்டுப் பார்க்கிறேன். வாழ்க்கைகளை மேம்படுத்துவதில் ரோட்டரியின் ஆற்றல் அபாரமானது, இணையற்றது என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. நான் முதன்முதலில் ரொட்டேரியனாக ஆனபோது, நம்மால் இந்தளவுக்குத் தாக்கம் ஏற்படுத்த முடியுமா என்பதை என்னால் கனவில்கூட எண்ணியிருக்க முடியாது.

பாகிஸ்தானில் சந்தித்த ரொட்டேரியன்கள் பற்றி என் ஞாபகத்துக்கு வருகிறது, அவர்கள் கோகோ கோலாவுடன் கைகோர்த்து கராச்சியின் சில பகுதிகளில் துப்புரவு வசதியை மேம்படுத்தித் தந்தனர், அதே வேளை போலியோ ஒழிப்பு நடவடிக்கைகளுக்கும் ஆதரவு அளித்தனர். போர்டோ ரிகா ரொட்டேரியன்கள் பற்றி என் ஞாபகத்துக்கு வருகிறது, அவர்கள் மரியா சூறாவளியில் பாதிக்கப்பட்ட சமூகங்களின் வாழ்வை புனர்நிர்மாணம் செய்ய உதவிக் கொண்டிருக்கின்றனர். ஜெர்மன் ரோட்டராக்டர்கள் பற்றி என் ஞாபகத்துக்கு வருகிறது, நமது பூமிக்கு இன்றியமையாத மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் தேனீக்களை அழிவிலிருந்து காப்பாற்றப் பாடுபடுகின்றனர். செயல்வீரர்கள்-புதுமை படைக்கும் இளைஞர்கள் என்று கௌவுரவிக்கப்பட்ட ஆறு ரொட்டேரியன்கள் மற்றும் ரோட்டராக்டர்கள் பற்றி என் ஞாபகத்துக்கு வருகிறது, அவர்கள் நவம்பர் மாதம் கென்யாவின் நெய்ரோபியில் ஐக்கிய நாடுகள் சபையால் ரோட்டரி தினத்தன்று, கடும் சவால்களுக்கு முகங்கொடுத்து புதுத் தீர்வுகளை உருவாக்கிய சாதனைக்காக இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர்.

நான் சான் டீகோவில் மேடையேறி உங்களை நோக்கி, ‘உங்கள் சங்கங்களுக்கும் சமூகங்களுக்கும் உலகுக்கும் உத்வேகமூட்டும் சக்தியாக விளங்குங்கள்’ என்று பேசியது ஏதோ நேற்றுத்தான் நடந்தது போல இருக்கிறது. அதற்கு நீங்கள் காட்டிய உற்சாகம் இருக்கிறதே, அது எனக்கே உத்வேகமூட்டும் சக்தியாக விளங்கியது. நீங்கள் புதிய ரோட்டராக்ட் சங்கங்களை உருவாக்க உதவுவதன் மூலமும், உங்கள் சமூகங்களில் நடைபெறும் ரோட்டரி நிகழ்ச்சிகள் மற்றும் திட்டப்பணிகளில் ரோட்டராக்டர்களைச் சேர்த்துக்கொள்வதன் மூலமும் ரோட்டராக்டர்களை நமது வருங்காலத் தலைவர்களாக உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். போலியோ ஒழிப்புக்கான உங்கள் கடுமையான உழைப்பு பாராட்டத்தக்கது, உலக போலியோ ஒழிப்பு தினத்துக்காக 100க்கும் மேற்பட்ட நாடுகளில் நடைபெற்ற 4,200 நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டீர்கள். இதேபோன்று, உங்கள் சமூகங்களிலும் உலகிலும் நீடித்த மாற்றத்தைக் கொண்டு வரக்கூடிய புரட்சிகரமான திட்டப் பணிகளை மேற்கொண்டு வருகிறீர்கள்.

இந்த ஆண்டு, சமாதானத்தை வளர்ப்பதற்கான ரோட்டரியின் அரும்பணியும் பலன் தந்துள்ளதை கண்டு மகிழ்கிறேன். நமது சமாதான மையங்களில் பயிலும் 98 ரோட்டரி சமாதானத் தூதுவர்கள் விரைவில் பட்டம் பெறுவார்கள், அவர்கள் 1,200க்கும் மேற்பட்ட இன்ன பிறருடன் இணைந்து, தீர்வுகளை எதிர் நோக்கி நிற்கும் பிரச்சனைகளுக்கு சமரசம் காண்பதில் தங்கள் திறமைகளை வழங்கிப் பங்களிப்பார்கள். இந்த மாதம் நானும் எஸ்தரும் ஜெர்மனியின் ஹேம்பர்க் நகரத்துக்கு பயணமாகிறோம், அங்கே சகல இனங்கள், தேசங்கள், மதங்கள் மற்றும் அரசியல் பின்னணிகளையும் சார்ந்த பிரமுகர்களின் மாநாட்டில் கலந்து கொண்டு, அனைத்து உலக மக்களின் வாழ்வையும் மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப் போகிறோம்.

நாம் தொண்டாற்றும் சமூகங்களுக்கும், ஏன் ரொட்டேரியன்களுக்கும் கூட ரோட்டரி ஆற்றும் பங்களிப்பை நினைக்கும்போது, ரோட்டரியின் இலட்சியம் மற்றும் பணி குறித்து என் உள்ளத்தில் மென்மேலும் ஆழ்ந்த நேசமும் நன்மதிப்பும் ததும்புகிறது.

எஸ்தரும் நானும் வீடுதிரும்ப வேண்டிய காலம் வந்துவிட்டது. நாங்கள் அங்கே செல்லும்போது எங்கள் தீவைச் சுற்றியுள்ள பிரமாண்டமான கடலைக் காண்பேன், அது ரோட்டரியின் எல்லையில்லா வாய்ப்புகளை எனக்கு நினைவூட்டும், அந்திக்கு அப்பால் உங்களோடு சேர்ந்து அங்கே மிதந்து செல்லும் நாளை எதிர்பார்க்கிறேன்.

**பேரி ராஸின்**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்



# மிகப் பெரிய நன்றி!

அன்புள்ள ரோட்டரி உறுப்பினர்களே,

பவுத்த பாரம்பரியத்தில் வழி நடத்துபவர், படகோட்டி, மேய்ப்பன் என மூன்று வகை தலைமைகள் உண்டு. வழிநடத்துபவர் முன்னிலையில் இருந்து வழிகாட்டி அழைத்துச் செல்வார். அபாயங்களை எதிர்கொள்வார். பிறருக்கு முன்னுதாரணமாக இருப்பார். படகோட்டி போன்றவர் வழியில் ஏற்ற இறக்கங்களின் போது பிறரை அரவணைத்து அக்கறையோடு அழைத்துச் செல்வார். மேய்ப்பர் என்பவர் அனைவரும் தனது பார்வையில் இருக்கும்படி கவனித்து, தன்னுடன் பாதுகாப்பாக அழைத்துச் செல்வார். ரோட்டரியில் மூன்று வகையான கருணைமிக்க தலைவர்களைக் கண்டிருக்கிறேன். சிக்கல் இல்லாத, மகிழ்ச்சி நிறைந்த உலகுக்காக உழைக்கும் அவர்களது ஆர்வம் அனைத்து தரப்பினரிடமும் உள்ள பொதுவான அம்சமாகும்.

இயக்குநர் பொறுப்பில் மொத்தம் 24 மாதத்தில் 23 மாத காலத்தைப் பூர்த்தி செய்துவிட்டேன். கிரிக்கெட்டில் சொல்வதைப் போல் இது தான் எனது கடைசி “ஓவர்”. இயக்குநர் என்ற வகையில் மேற்சொன்ன மூன்று வகையான தலைவர்களுடன் இணைந்து ரோட்டரியில் வெற்றிகரமாகப் பணியாற்றியிருப்பது எனது அதிர்ஷ்டம்.

நம்பிக்கையை தரும் செயல்களைப் புரிந்து கொள்வதன் மூலம் தலைவர்கள் தங்கள் மீது மற்றவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையை மேலும் மேலும் உயர்த்துகிறார்கள். நேர்மையுடன் பணியாற்றினால், நமது எண்ணங்கள், உணர்வுகள், சொற்கள், செயல்கள் எல்லாம் சீராகத் தொடரும்.

ஒரு முறை சில மாணவர்கள் ஒரு துறவியைச் சந்தித்தனர். அப்போது, அவர்களது தேர்வு முடிவுகள் குறித்துக் கேட்டார். அவர்களும் பதிலளித்தனர். அந்தத் துறவி, நீங்கள் இயற்பியலில் 90 மதிப்பெண், வேதியியலில் 60 மதிப்பெண், கணிதத்தில் 20 மதிப்பெண் பெற்றால் நீங்கள் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களாக ஆவீர்களா? என்று கேட்டார். அதற்கு மாணவர்கள், இல்லை முடியாது என்று பதிலளித்தனர். “ஏன்? என்று அத்துறவி கேட்டார்.

மாணவர்கள், தேர்வு விதிகளின்படி அனைத்துப் பாடங்களிலும் உரிய மதிப்பெண் பெற்றால்தான் தேர்ச்சி பெற இயலும் என்று கூறினர். துறவி புன்னகைத்தவாறு, அதைப் போலத்தான் உங்களது செயல்கள் 90 மதிப்பெண் பெறும் வகையில் இருக்கின்றன. பேச்சு, வார்த்தைகளில் 60 மதிப்பெண் பெறும் நிலையில் இருக்கிறீர்கள். ஆனால், எண்ணங்களில் மிகவும் பலவீனமாக அதாவது 20 மதிப்பெண் மட்டுமே பெறும் நிலையில் இருக்கிறீர்கள் என்றால், கடவுள் நடத்தும் தேர்வில் வெற்றி பெற்றவர்களாகக் கருதப்படுவீர்களா? என்று கேட்டு எப்படி எல்லாப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்றால்தான் நீங்கள் தேர்ச்சி பெறுவீர்களோ அதே போலத்தான் எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றிலும் நன்றாக இருந்தால் தான் கடவுளின் தேர்வில் வெற்றி பெற்றதாக அர்த்தம். அதுதான் திரிகர்ண சுத்தி என்று விளக்கினார்.

இயக்குநர் பொறுப்பில் இருந்த 23 மாதங்களில் ரோட்டரி இலக்கை அடைவதற்கான எனது பார்வை மேலும் மெருகூட்டப்பட்டது.

தலைமைப் பண்புகளின் நுணுக்கங்களையும் மதிப்பீட்டையும் நான் சந்தித்த ஒவ்வொரு ரோட்டரி உறுப்பினரிடமிருந்தும் கற்றுக் கொள்ள சிறந்த வாய்ப்பு கிடைத்தது. தலைமைப் பண்பு என்பது வெறும் தலைமை தாங்குவது மட்டும் அல்ல. அடுத்த தலைமுறையை உருவாக்குவது, ரோட்டரிப் பணிகளின் விழுமியங்களை மேம்படுத்துவது ஆகியவையும் ஆகும். RI அமைப்பின் அனைத்து மூத்த தலைவர்கள், போர்டில் உள்ள எனது சகாக்கள், TRF அறங்காவலர்கள், பெருந்தன்மையான நல்லுள்ளங்கள், RI தெற்காசிய அலுவலகம் ஆகியவற்றின் பணியாளர்கள், ரோட்டரி நியூஸ் இதழின் செய்தி ஆசிரியர், பணியாளர்கள், மண்டல தலைவர்கள், முன்னாள், இந்நாள் தலைவர்கள், வருங்கால RI அலுவலர்கள், உரிய பங்களிப்பு செலுத்தி, முழு மனத்தோடு ஒத்துழைத்த அனைத்து ரோட்டேரியன்கள், நான் செல்லுமிடங்களில் எல்லாம் என் மீது அன்பு செலுத்தியவர்கள், எனது பணிகளை நிறைவேற்ற உதவியவர்கள் ஆகிய அனைத்து தரப்பினருக்கும் நானும் என் மனைவி மாலாவும் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அனைவரும் நல்ல ஆரோக்கியம் வளம், மகிழ்ச்சி பெற வாழ்த்துகிறேன்.

C பாஸ்கர்
இயக்குநர், ரோட்டரி இன்டர்நேஷனல்.

# Organisation Development Consultants

WE ADD VALUE TO YOUR EFFORTS
Estd. 22-02-2002

## Hyderabad

Visit us at : www.odchyd.com

**Mr P Seshadri**
**Management Consultant**

### Introduces New Services for Micro, Small & Medium Level Enterprises & Start up's on

# ORGANISATION DEVELOPMENT

## - Building Sustainable Organisations

Services could be availed as per need and maturity of the organisation

### BASIC Package
**(3 Months)**
**Professional Fees : Rs 2 Lakhs**

Streamlining Systems / Processes in the organisation to meet business requirements

Organisation Development Plan to be provided for one year w.r.t the following aspects based on assessments

- Customer Focus
- Leadership
- Engagement of People
- Process Approach
- Improvements
- Evidence based Decision Making
- Relationship Management

### SUPREME Package
**(6 Months)**
**Professional Fees : Rs 5 Lakhs**
**(Includes BASIC Package Services)**

Business Excellence Assessments w.r.t

- Leadership
- Strategy Development & Deployment
- People Management
- Resources & Infrastructure Management
- Process Management
- Customers Results
- People Results
- Social Results
- Business Results

Formulating Blue Print for Change Management within the organisation for one year and training assistance in initiating implementation of changes

### PREMIUM Package
**(12 Months)**
**Professional Fees : Rs 9 Lakhs**
**(Includes BASIC & SUPREME Package Services)**

Establishing Integrated Management Systems (based on best practices) with 100+ Key Performance Indicators with focus on organisations :

- Economic Performance
- Environmental Performance
- Social Performance

Preparation of Business Sustainability Report which is useful for accessing finance , global work contracts and improving sustainability initiatives of the organisation.

## Professional Profile of Mr. P Seshadri



A qualified Production & Industrial engineer with management specialisation in Industrial Management from Nagpur University has industrial and consulting experience of more than 28 years in the domains of HRD, TQM and OD with Corporates, MSME's and Start-up's.

Practicing as Management Consultant since 2002, he has evolved his core competencies in three areas which include – Developing Management Systems, Facilitating Business Excellence Practices and Establishing Sustainability Reports for Industries and Institutions.

Active with professional / industrial bodies and social organisations, he has held leadership positions in several of such organisation like QCFI, NIPM, ISTD, IMCI, HDCF, FAPCCI, CII, BNI and Rotary International. His current passion as qualified faculty from Rotary Leadership Institute is strengthening Rotary Movement using several initiatives in Clubs, Communities and Corporates.

**Contact:**

98490 82520

pseshadri29@gmail.com

# RI தலைவராக ஹோல்கர் நாக் பரிந்துரை



ஜெர்மனியின் ஹெர்ஸோக்டம் லான்பர்க்-மோல்ன் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர் ஹோல்கர் நாக் (Holger Knaack) 2020–21ம் ஆண்டுக்கான RI தலைவர் பதவிக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளார். இந்தப் பொறுப்புப்புக்கு ஏற்கெனவே பரிந்துரைக்கப்பட்ட சுஷீல் குப்தா உடல்நிலை காரணமாக விலகியதை அடுத்து அந்த இடத்திற்கு நாக் பெயரை அதற்கான குழு பரிந்துரைத்துள்ளது.

புதிதாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஹோல்கர் நாக், ரோட்டரியின் உறுப்பினர் பலத்தை உயர்த்த வேண்டும் என்றார். அத்துடன் ரோட்டராக்ட் இளைஞர்களை ரோட்டரி அமைப்புக்குள் கொண்டு வரவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

செயல்படும் மக்கள் (People of Action) பிரசாரத்தின் மீது தனக்கு மிகுந்த நம்பிக்கை இருப்பதாகக் கூறிய அவர், அதுதான் பொது மக்களிடையே ரோட்டரியின் விழிப்புணர்வை ஏற்படுத்தும். பல வேறுபட்ட இடங்கள், கலாசாரங்களை மதிக்கும் நிலையில் நமது இலக்கு குறித்த தோற்றத்தை இந்தப் பிரசாரம் எடுத்துரைக்கும் என்றார்.

1992ம் ஆண்டு முதல் ரோட்டரியின் உறுப்பினராக இருக்கும் ஹோல்கர் நாக், ரோட்டரியின் பொருளாளர், இயக்குநர், பல்வேறு கமிட்டிகளின் உறுப்பினர்-தலைவர் மற்றும் நெறியாளர், சட்டக் கவுன்சிலுக்குப் பிரதிநிதி, மண்டல ஒருங்கிணைப்பாளர், தலைமைப் பயிற்றுநர், மாவட்ட ஆளுநர் எனப் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

மேலும், அறக்கட்டளை மற்றும் அதன் பெரும் கொடையாளர் ஆலோசகர் ஆகிய பொறுப்பையும் வகிப்பவர். தற்போது ஜெர்மனி ஹாம்பர்க் நகரில் நடைபெறும் 2019ம் ஆண்டுக்கான ரோட்டரி சர்வதேச மாநாட்டின் விருந்தோம்பல் அமைப்புக் குழுவில் (Host Organisation Committee) இணைத் தலைவராகவும் இருக்கிறார்.

நாக் KG என்ற ரியல் எஸ்டேட் நிறுவனத்தின் முதன்மைச் செயல் அலுவலராக (CEO) உள்ள ஹோல்கர் நாக் (Holger Knaack), அவரது மனைவி சூசேன் (Susanne), ஆகியோர் TRFக்கு மிகப் பெரிய தொகை அளித்த நன்கொடையாளர்கள் ஆவர். பிக்வெஸ்ட் சொசைட்டியின் (Bequest Society) உறுப்பினர்களாக இருவரும் உள்ளனர்.

# சுஷீல் குப்தாவின் செய்தி



அன்புள்ள ரோட்டரி நண்பர்களே,

RI அமைப்பின் தலைவராகப் பரிந்துரைக்கப்பட்ட பின்னர் திடீரென்று ஏற்பட்ட உடல்நிலை காரணமாக அதை ஏற்காமல், விலகிவிட்டேன் என்பதை அறிவீர்கள். மீண்டும் ஒரு சக இந்தியர் RI அமைப்பில் பொறுப்பேற்க இருக்கிறார் என்று இந்திய ரோட்டரி அமைப்பினர் பெரிதும் மகிழ்ச்சியும் மன நிறைவும் கொண்டிருப்பீர்கள். இந்நிலையில் எனது முடிவு உங்கள் அனைவருக்கும் ஏமாற்றம் அளித் திருக்கும் என்று நிச்சயம் தெரியும்.

இது எளிதில் எடுத்த முடிவல்ல. என் மனசாட்சியும் நான் கடைப்பிடிக்கும் ரோட்டரி விழுமியங்களும் இப்பதவியைத் துறக்கும் முடிவுக்குத் தள்ளின. ரோட்டரி உலகத்திற்கு முழுமையாக நான் பணியாற்றுவதற்கு என் உடல்நிலை இடம் தராது என்பது எனக்கு தெரியும்.

எனினும் ரோட்டரியில் எனது பணியைத் தொடர்வேன் என்றும் ஏழைகள், நலிந்தோர் மேம்படுவதற்கு என்னால் இயன்ற வரையில் தொண்டு புரிவேன் என்றும் உறுதி அளிக்கிறேன். நீங்கள் மனம் தளர வேண்டாம் என்று வேண்டுகிறேன். ரோட்டரி உலகில் இந்திய ரோட்டரி அமைப்புகளுக்கு நல்ல மரியாதை இருக்கிறது என்பதை நான் நன்கு அறிவேன். விரைவில் இன்னொரு இந்தியர் ரோட்டரி உலகத்தில் தலைமை ஏற்பார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

உங்களது செய்திகளையும் நான் நலம் பெற வேண்டும் என்ற உங்களது பிரார்த்தனைகளும் எனக்கு தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. அது எனக்கு மிகுந்த உற்சாகம் அளிக்கிறது. பிரார்த்தனையின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ள எனக்கு உங்களது பிரார்த்தனைகள் அற்புதம் செய்யும் என உறுதியாக இருக்கிறேன்.

# தொடர்ந்து எனது தேடலை விரிவுபடுத்துகிறது ரோட்டரி:

# பரத் பாண்ட்யா

ரஷீதா பகத்

ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநராகப் பொறுப்பேற்கிறார் பரத் பாண்ட்யா. ஆனால், தனக்குப் பதவி அதிகாரம் கிடைக்கிறதே என்று அலட்டிக் கொள்ளாமல், அடக்கமாகவே இருப்பது அவரது சிறப்பு. ஆழந்து கற்றவர், அதே சமயம் அமைதியாகப் பேசுபவர். ஏராளமாக நூல்கள் படிக்கும்போது, அவற்றில் இடம்பெற்றுள்ள அரிய மொழிகளைக் குறிப்பெடுத்துக் கொள்வார். தான் உரையாற்றும்போது அந்த மேற்கோள்களைச் சரியாகப் பயன்படுத்தி பார்வையாளர்களை அசத்திவிடுவார். அவை கூகுள் தளத்திலிருந்து தேடி எடுக்கப்படுவை அல்ல.

பாண்ட்யாவையும் அவரது மனைவி மாதவியையும் அவர்கள் வசிக்கும் மும்பை போரிவல்லியில் சந்தித்தேன். அவர்கள் இருவரும் மருத்துவர்கள். அவர்களது வீட்டின் உள் அலங்காரம் எளிமையாகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் அமைக்கப்பட்டிருந்தது. இந்த மருத்துவ தம்பதியினர் தங்களது அடுக்குமாடி வீட்டின் இதர தளங்களில் மருத்துவமனையை அமைத்துள்ளனர்.

*மருத்துவம் செய்யாவிட்டாலும் எனக்கு நிதிப் பிரச்சினை இல்லை. ஆனால், எனது நோயாளிகளுக்குப் பாதிப்பு ஏற்படும்.*



RIDE *பரத் பாண்டியா அவர் மனைவி மாதவியுடன்.*

அவரைச் சந்தித்தபோது, ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர் பதவி மூத்த ரோட்டேரியன்களுக்கு ஏன் மயக்கத்தை ஏற்படுத்துகிறது? என்ற கேள்வியுடன் நேர்காணலைத் தொடங்கினேன். அந்தப் பதவி வசீகரிப்பதாக இருந்தாலும், சுழன்று சுழன்று வேலை செய்ய வேண்டும், ஊர் ஊராகத் திரிய வேண்டும். அப்படியிருக்க அப்பதவியை ஏற்க விரும்புகிறார்கள்?

இந்தக் கேள்விக்குப் பதிலளித்த பாண்ட்யா, எங்களது தொழிலில், குறிப்பாக மருத்துவப் பணியின்போது, ஏதாவது நற்பணி புரியும் வாய்ப்பைப் பெறுகிறேன் என்று கூறினார். பல நோயாளிகளுக்கு இலவசமாகச் சிகிச்சை தருகிறார். இன்னும் பல நோயாளிகளிடம் குறைந்த கட்டணமே வசூலிக்கிறார். மன்னிக்கவும், இவை குறித்த விவரங்களையெல்லாம் சொல்ல முடியாது என்று தன்னை தரும சங்கடத்தில் ஆழ்த்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

எனினும், இந்தப் பதவியில் இருந்தபடி பல்வேறு வகைப்பட்ட துறைகளில் உரிய பங்களிப்பைச் செலுத்தும் வாய்ப்பைப் பெற்றுள்ளேன். நான் ரொட்டேரியனாகத் தொடர்வதற்குக் காரணம் தனது விடியலை விரிவுபடுத்துகிறது. ஜெர்மனி நாட்டு முன்னாள் தலைவர் (Chancellor) கொனார்டு அடனேர் (Konrad Adenauer), நாம் அனைவரும் ஒரே வானத்தின் கீழே தான் இருக்கிறோம். ஆனால், அனைவரும் ஒரே இலக்கை எட்டுவதில்லை. எனது இலக்கை ரோட்டரி விரிவுபடுத்துகிறது என்றார் அவர்.

ரோட்டரி தலைமையை ஏற்பதற்கு முன் கூட்டத்தில் முன்பெல்லாம் ஐந்து வார்த்தை பேசுவதற்குள் தொடை நடுங்குவேன். ஆனால், எழுதி வைத்துத்தான் படிப்பேன். தொடை நடுங்குவேன் என்று கூறிய அவர்,



*நண்பர்கள் எனக்கு அபார நினைவாற்றல் என்று பாராட்டுவார்கள். எதுவும் எளிதாகக் கிடைத்துவிடுவதில்லை. கடினமாக உழைக்க வேண்டும். எழுதிய உரைகளையும் மேற்கோள்களையும் கொண்ட குறிப்புகள் நிறைய என் வீட்டு அலமாரியில் உள்ளன.*

ரோட்டரி சங்கத் தலைவரான பின் மேடையில் பேசும்போது, எழுதி வைத்துப் படித்து பேசக் கூடாது என்று முடிவெடுத்தேன். நண்பர்கள் எனக்கு அபார நினைவாற்றல் என்று பாராட்டுவார்கள். எதுவும் எளிதாகக் கிடைத்துவிடுவதில்லை. கடினமாக உழைக்க வேண்டும். எழுதிய உரைகளையும் மேற்கோள்களையும் கொண்ட குறிப்புகள் நிறைய என் வீட்டு அலமாரியில் உள்ளன என்றார்.

ஆழ்ந்து படித்த இயக்குநர் என்று அவரை வருணித்தால், கூச்சத்துடன் அதை ஒதுக்கிவிடும் பரத் பாண்ட்யா, எந்தப் புத்தகத்தையாவது படிக்கும்போது, என்னை ஏதாவது வாசகம் கவர்ந்துவிட்டால், உடனே அந்தப் பக்கத்தைக் குறித்துக் கொள்வேன். முடிந்தால், அந்த வரிகளின் கீழ் கோடுபோட்டு வைப்பேன். தேவைப்படும்போது, அதை எழுதி வைத்துக் கொள்வேன் என்கிறார். முன்பு போல் அவர் இப்போது எழுதி வைத்துப் பேசு வதில்லை. பார்வையாளர்களை வசீகரிக்க ஏதாவது குட்டிக் கதைகளைப் பொருத்தமாகப் பேசுவேன் என்றார்.

சிக்கலான கேள்விகளைத் தவிர்த்துவிடும் பரத் பாண்ட்யா, பல ரொட்டேரியன்கள் இது குறித்து வியப்பதாகக் கூறினார். அவரிடம், ஒரே ஒரு முறை நீங்கலாக ஒவ்வொரு முறையும் இந்தியாவிலிருந்து ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்புக்கு இயக்குநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்த முறை இருவர். இயக்குநர்கள் ஆகும் நீங்களும் கமல் சங்வியும்

# பாண்ட்யா குறித்து சில பார்வைகள்...



RIDE பரத் பாண்டியா மற்றும் மாதவி, RIPE மார்க் மலோனி மற்றும் கேய்யுடன் 2007ல் நடந்த மாவட்ட மாநாட்டில்.

**மதம்:** எங்கள் குடும்பத்தில் மாதவிக்கு மத ஈடுபாடு உண்டு. எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனால், கடவுள் மறுப்பாளன் அல்ல. கோவிலுக்கெல்லாம் போவேன். ஆனால் போயே தீர வேண்டும் என்றெல்லாம் கிடையாது. அறிவியலையும் யதார்த்தமானவையும் அதிகம் நம்புகிறேன். பூஜைகளிலும் நான் பங்கேற்பேன்.

**பிடித்த உணவு:** நான் சைவ உணவு சாப்பிடுகிறவன். பொதுவாக இந்திய உணவு, குறிப்பாக குஜராத்தி உணவு பிடிக்கும். பருப்பு, ரசம் பிடிக்கும். வெளிநாடு சென்றால் சீன உணவு வகைகள் உண்பேன்.

**சமைப்பது:** தேநீர், காபி தயாரிப்பது!

**இசை:** இந்திப் படப் பாடல்கள், மேற்கத்திய இசை விரும்புவேன். அபா இசை எனக்குப் பிடித்தமானது.

**திரைப்படங்கள்:** காமெடி, அதிரடி, திகில் படங்களை விரும்புவேன். ஏற்கெனவே தினசரி வாழ்க்கையில் அழுத்தம் இருப்பதால், சோகப்படம், அழுகைப் படங்களைப் பார்க்கமாட்டேன்.

**ஓய்வு:** ஓய்வு நேரத்தில் நான் செய்வது புத்தக வாசிப்பு தான். நாவல், கதைகள், மர்மக் கதைகள், சீரியஸ் புத்தகங்களைப் பொருத்தவரையில், தலைமைப் பண்பு குறித்த புத்தகங்களை வாசிப்பேன்.

**பிடித்த எழுத்தாளர்:** நாவல்களில் (PG Wodehouse) நாவல்கள் பிடிக்கும். அலிஸ்டர் மக்ளீனின் அனைத்து நாவல்ரகளையும் படித்திருக்கிறேன்.

**உடற்பயிற்சி:** நான் பயிற்சி செய்ய வேண்டும். மாதவி அடிக்கடி வலியுறுத்துகிறாள். காலையில் 6 மணிக்கே எழுந்துவிடுகிறேன். 7.45 மணிக்கு வேலைகளைத் தொடங்கிவிடுகிறேன். தினமும் 30 நிமிடம் டிரெட்மில் இயந்திரத்தில் பயிற்சி செய்கிறேன். இதனிடையில் வீட்டுக்குள்ளேயே நிறைய நடக்கிறேன். இவையெல்லாம் நிறை பலன் தருகின்றன.

**இளைஞர்கள்:** இளம் ரோட்டரி அமைப்பான ரோட்டராக்ட் உறுப்பனர்கள், 35 வயதுக்கு உட்பட்டவர்கள் மீது கவனம் செலுத்தும் நாம் 45 முதல் 60 வயது வரையிலானவர்கள் மீதும் கவனத்தைக் கைவிடக் கூடாது. அவர்கள்தான் சமூகத்திற்குத் திருப்பிச் செலுத்தக் கூடியவர்கள். அவர்கள் நல்ல நிலையில் இருப்பவர்கள். நேரமும் ஒதுக்க முடியும். அவர்களை ஒதுக்காமல் இரு தரப்பினரையும் இணைத்து செயல்படவேண்டும்.

**ரோட்டரியில் பெண்கள்:** பெண்களை ரோட்டரியில் இணைப்பது ஒழுக்கத்தைக் கொண்டுவருவதாகும். அவர்களுக்குப் பல பணிகள் உண்டு. அதனால், கூட்டத்தை எப்போது தொடங்க வேண்டும், எப்போது முடிக்க வேண்டும் என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியும். பெண்கள் இருக்கும்போது, வேண்டத் தகாத கருத்துரைகள் கட்டுப்படும். பெண்கள் கடுமையாக உழைப்பார்கள். ஆண்களை விட பெண்கள் அதிகம் உறுதியுடன் செயல்படுவார்கள் என்று கூறுவேன்.

**இந்தியாவில் ரோட்டரி:** நமது உலகில் ஏராளமான தேர்தல் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. அதில் இரு அம்சங்கள் உண்டு. நமது ஜனநாயக அமைப்பு. பலர் பதவிகளை நாடுவர். விருப்பம் ஆசை எல்லாம் தவறல்ல. ஆனால், அவற்றை எப்படிக் கையாள்கிறீர்கள் என்பது தான் முக்கியம். உடன்படா கருத்து என்ன என்பதை அறிவதற்கு உடன்பட்டால், பல பிரச்சினைகள் காணாமல் போகும். ஒரு கட்டத்தில் இன்னொரு சமயம் வரும் என்று இணக்கத்துடன் கூற வேண்டியிருக்கும். ஆனால், இந்திய ரோட்டேரியன்கள் அற்புதமான சேவைத் திட்டங்களைச் செய்கிறார்கள்.

**ரோட்டரியில் தற்சோதனை:** பதவி, பொறுப்பில் இருக்கும்போது பிரபலமாக இருப்பது ரோட்டரியில் ஒரு பிரச்சினை. பதவி முடிந்துவிட்டால், “2020 ஜூலை 1ம் தேதி எனது பதவிக் காலம் முடிந்துவிட்டால், யாரும் என்னைக் கண்டு கொள்ள மாட்டார்கள்” என்று மார்க் மலோனி கூறுவதைப் போல் பிரபலம் இழுந்துவிடுகிறோம். ஆனால், பெரும்பாலானோர் தங்களது பதவிக் காலம் முடிந்த பிறகும் அதே பிரபலம் நீடிக்க வேண்டும் என விரும்புகிறார்கள். ஆனால், என் பதவிக் காலம் முடிந்ததும் பிரபலம் இழப்பதை ஏற்பது எனத் தெளிவாக இருக்கிறேன்.

**இந்தியாவுக்கான தொலைநோக்கும் அதன் நிலையும்:** இந்தியாவில் ரோட்டரி இயக்கம் மிகச் சிறந்த பணியை மேற்கொண்டு வருகிறது. இன்றைக்கு நாம் தொற்றுநோய் , சர்க்கரை நோய், உயர் ரத்த அழுத்தம், இதய நோய்கள், சிறுநீரகக் கோளாறுகள், நுரையீரல் கோளாறுகள், பக்க வாதம் என்ற எரிமலையின் மீது அமர்ந்துள்ளோம். இது குறித்து ரோட்டரி அமைப்பு பள்ளி, கல்லூரிகள், பொதுமுகா'கள் ஆகியவற்றில் விழிப்பு இயக்கம் நடத்தலாம். அவற்றில் (சர்க்கரை மற்றும் உப்பு) “ஒரு ஸ்பூன் குறைப்போம்” (“one spoon less’) என்ற முழக்கத்தை நமது முகாம்களில் பிரசாரம் செய்வோம். எடைக் குறைப்பு, ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் சரிபார்த்தல் ஆகியவற்றை வலியுறுத்துவோம். உரியவர்கள் சிகிச்சை பெற உதவுவோம்.

அதிகாரப் போட்டி ஏதும் இல்லாமல் செயல்பட உத்தி வகுத்திருக்கிறீர்களா? என்று கேட்டேன்.

அதற்கு, முதலில் இயக்குநர் பதவி அதிகாரப் பதவியாக அல்ல, பொறுப்பு என்று கருதுகிறேன். அதைப் போலத்தான் கமலும் கருதுகிறார். அதிர்ஷ்டவசமாக இருவரும் ஒரே மனநிலையைக் கொண்டவர்கள் என்பது வியப்பான பொருத்தம். எனினும், இரு வேறு மனிதர்களிடையே வித்தியாசம் இல்லாமல் இருக்க முடியாது. ஒரு வேளை அவர் கலகலப்பானவர். நான் அப்படி இல்லை. ஏதாவது பிரச்சினை இருந்தால் நாங்கள் இருவரும் தவறாமல் தொலைபேசியில் பேசிக் கொள்வோம் என்றார் பாண்ட்யா.

நிர்வாக ரீதியில், பாண்ட்யா 4வது, 7வது மண்டலங்களையும் சங்வி 5வது மற்றும் 6வது மண்டலங்களையும் கவனித்துக் கொள்வதாகக் கூறினார். எந்தப் பிரச் சினையானாலும் எங்களுக்கு எழுதும்படி மாவட்ட ஆளுநர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் களிடம் கேட்டுக் கொண்டோம். இருவரும் கலந்து பேசிக் கொண்டு உரியதைச் செய்வோம். நாங்கள் சுமூகமான பணி மேற்கொள்கிறோம். அதில் பிரச்சினை ஏதுமில்லை என்றார். அண்மையில் நடைபெற்ற புதிய மாவட்ட தலைவர்களுக்கான திஷா பயிற்சிக் கருத்தரங்கின் போது, அதற்கு சங்வி முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார். எனக்கு நேரம் அளிக்கும்படி கேட்டுக் கொள்ளவில்லை. எனினும், வாய்ப்பு தருவதாக அவர் கூறினார். எதிர்காலத்தில் ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால், அவற்றையெல்லாம் பேசித் தீர்க்க முடியும் என்று நம்புகிறோம். ஆனால், அவையெல்லாம் வெளியில் தெரியாது என சிரித்தபடி கூறினார்.

பரத் பாண்ட்யாவை இந்த அளவுக்கு செதுக்கியது என்ன என்பதற்கும், அவர் மருத்துவர் ஆனதற்கும், அவர் பின்பற்றும் விழுமியங்களுக்கும் எது தூண்டுதல் என்பதை அறிய அவரது குழந்தைப் பருவத்தைத் திரும்பப் பார்க்க வேண்டும்.

பெற்றோருக்கு ஒரே குழந்தையான பாண்ட்யாவுக்கு அவரது தந்தையே உத்வேகம் அளித்தவர். தனது தந்தையைப் பற்றி அவர் கூறியாதவது: அவர் மருத்துவ மாணவராக இருந்தபோது, மகாத்மா காந்தியின் அழைப்பை ஏற்று அன்னியப் பொருட்களைப் புறக்கணித்தார். மருத்துவ மாணவர்கள் மருத்துவருக்கான உடைகளை அணிந்து கொண்டு மருத்துவ மனையின் வார்டுகளில் நடமாட வேண்டும். ஆனால், அவை வெளிநாட்டுத் துணிகள்

RIDE *பரத் பாண்டியா, மனைவி மாதவி, மகள்கள்* Dr *நிதி மற்றும்* Dr *சாஷ்மியுடன்.*



என்பதால், சில மருத்துவ மாணவர்கள் நாட்டுப் பற்றோடு அவற்றையெல்லாம் தீயில் எரித்தனர். அன்று முதல் பாண்ட்யாவின் தந்தை பருத்தி சட்டைகளையும் காற்சட்டைகளையும் தான் அணிந்து வந்தார். திருமணத்தின் போதும் பருத்தி ஆடைகளையே அணிந்தார். 1998ம் ஆண்டு மறையும் வரையில் அதை உறுதியாகக் கடைப்பிடித்து வந்தார்.

என் தந்தை கொள்கையில் உறுதி கொண்டவர். நேர்மையாளர். தான் பேசுவதிலும் செயல்படுவதிலும் நேர்மையைக் கடைப்பிடித்தார். அது என்னுள் ஆழப் பதிந்து விட்டது. நோயாளிகளைக் குணப்படுத்த அரும்பாடுபட்டார். நோயாளிக்கு ஊசி போடும்போது கூட "ஜெய் ஸ்ரீ கிருஷ்ணா!" என்றுதான் சொல்வார். அவர் கடவுளுக்கு அஞ்சுவதை விட பக்தி செலுத்தியவர்.

அப்பாவுக்குத் தப்பாமல் பிறந்தவரான பரத் பாண்ட்யா, பொது அறுவைச் சிகிச்சை நிபுணரானாலும் தன்னிடம் காய்ச்சல், வயிற்றுப் போக்கு என சாதாரண சிகிச்சைக்காக வருவோருக்கும் யாருக்கும் ஏதாவது மருத்துவ உதவி செய்யாமல் அனுப்புவதில்லை. அப்போதெல்லாம் போதிய மருத்துவ வசதி இல்லாத போரிவல்லியில் 1949ம் ஆண்டு முதல் மருத்துவப் பணியை ஆற்றி வந்த என் தந்தைதான் இந்த நற்பண்புகளை எனக்குள் விதைத்தற்குக் காரணம்.

அவர் தன் வாழ்நாளில் நல்லெண்ணத்தை வளர்த்தார். 1998ம் ஆண்டு எதிர்பாராமல் மறைந்ததை அடுத்து நோயாளிகள் என்னை அணுக ஆரம்பித்தனர். நான் சர்ஜன், சின்ன வியாதிக்கெல்லாம் சிகிச்சை செய்ய முடியாது என்று அவர்களைத் திருப்பி அனுப்பவில்லை. அதையடுத்து மலேரியா, டெங்கு, டைஃபாய்டு போன்ற நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கிறேன். ஆனால், இதய நோய் போன்ற சிக்கலான வற்றுக்கு சிறப்பு மருத்துவம் தான் அளிக்கப்பட வேண்டும் என்றார் பரத் பாண்ட்யா.

பாண்ட்யா ரோட்டரி சங்கத் தலைமையை ஏற்றிருந்தபோது, தனது நோயாளிகளைக் கவனிப்பதற்கான நேரத்தையும் ரோட்டரிப் பணிக்கான நேரத்தையும் உரிய வகையில் வகுத்துக் கொண்டார். அதே போல இயக்குநராக இருக்கும்போதும் செயல்படத் திட்டமிட்டுள்ளார்.

ரோட்டரியில் தன்னார்வலராக உள்ள நிலையில் இருந்து, முழு நேரப் பணியில் ஈடுபடுவதன்





மூலம் ஓய்வுபெற்றவர்களையே தலைமைப் பதவிகளை ஏற்க வகை செய்யப்படுகிறது என்று RI தலைவராகப் பொறுப்பேற்கும் மார்க் மலோனி தெளிவுபடுத்தியுள்ளார். தலைமைப் பதவியில் இருக்கும் போது, மாதத்தில் ஐந்து நாட்கள் தனது சட்டப் பணிகளில் ஈடுபடுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்துக் கேட்டதற்கு புன்னகையோடு பரத் பாண்ட்யா, RI தலைவர் மாதத்தில் ஐந்து நாட்கள் தனது பணிக்காக ஒதுக்க முடியும் என்றால், RI இயக்குநர் 15 நாட்களை தனது பணிக்காக ஒதுக்க முடியும். எனது பணிகளை இரு ஆண்டுகளுக்கு நிறுத்துவதாகத் திட்டம் ஏதுமில்லை என்றார்.

வருவாய் குறித்த பிரச்சினை ஏதுமில்லை என்று கூறிய பாண்ட்யா, எங்களது மருத்துவமனையில் 30 ஊழியர்கள் பணி புரிகிறார்கள். எங்களது மருத்துவமனை சிறியது அதே சமயம் மகப்பேறு மருத்துவ இயல் மற்றும் முடநீக்கியல் சிகிச்சை மருத்துவமனையாகும். அதே சமயம் ஏற்கெனவே கூறியபடி எந்த நோயாளிக்கும் சிகிச்சை தராமல் திருப்பி அனுப்புவதில்லை. மருத்துவம் செய்யாவிட்டாலும் எனக்கு நிதிப் பிரச்சினை இல்லை. ஆனால், எனது நோயாளிகளுக்குப் பாதிப்பு ஏற்படும் என்றார்.







D *3140 அணை திறப்பு விழாவில், பரத் பாண்டியா; PRID அஷோக் மகாஜன் மற்றும் ஹர்ஜீத் சிங் தல்வாருடன்.*

ரோட்டரி தலைவர் தொலைபேசி மூலம் கேட்டுக் கொண்டதற்காக கூட்டத்தில் பங்கேற்றேன். போலியோ ஒழிப்பு இயக்கம் 1991-92ம் ஆண்டு தொடங்கப்பட்ட போது, ரோட்டரியில் இருந்த ஒரே மருத்துவர் என்ற முறையில் தலைவரின் அறிவுறுத்தல் படி அதில் ஈடுபட்டேன். செல்ல முடியாத குடிசைப் பகுதிகளுக்குச் சென்றோம். போரிவலி நகரம் அதற்கு மாறாக இருந்தது. ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து செலுத்துவது எனக்குள் பொறி ஏற்படுத்தியது. மெல்ல மெல்ல மாற்றம் ஏற்பட்டது என்றார் பாண்ட்யா.

பாண்ட்யா பொறுப்பேற்ற காலத்தில் 15 முதல் 20 பேர் ரோட்டரி சங்கத்திலிருந்து விலகிவிட்டனர். அது பின்னடைவை ஏற்படுத்தியது. அப்போது ரோட்டரி தலைவராகப் பொறுப்பேற்கும்படி அறிவுறுத்தப்பட்டார்.

பாண்ட்யாவுக்கு ரோட்டரிப் பணிக்கே நிறைய நேரம் ஆகிறதே என்ற ஆதங்கம் ஏற்படவில்லையா என்று அவரது மனைவி மாதவியைக் கேட்டேன். அப்போது, பாண்ட்யா தன் மனைவியைப் பார்த்து தனது தாய்மொழியான மராத்தியில், உண்மையைப் பேசு என்று முணுமுணுத்தார். அதையடுத்து மாதவி, சில சமயம் அப்படித்தான் அவரது நேரத்தை ரோட்டரி பணி எடுத்துக் கொள்கிறது. குடும்ப நிகழ்வுகளில் அவரால் பங்கு கொள்ளமுடியாமல் போகிறது. எங்களது மகள்கள் இருவரும் பயிற்சி மருத்துவர்கள். இருந்தாலும் நாங்கள் இதற்காகப் பெருமைப்படுகிறோம் என்றார்.

ரோட்டரி ஆளுநராக இருந்தபோது ஆரம்பத்திலிருந்தே மாதவி தனது பணிக்கு உறுதுணையாக இருப்பதாகக் குறிப்பிட்ட பரத் பாண்ட்யா உறுப்பினர்களுக்கான ஒருங்கிணைப்பாளராக இருந்த காலத்தில் நிறைய பயணம் செய்ய வேண்டியிருந்தது. மும்பை, தானே மாவட்டங்களை உள்ளடக்கிய மாவட்ட ஆளுநர் பொறுப்பில் இருந்தபோதும் மருத்துவப் பணியைக் கைவிடவில்லை.

நாள்தோறும் 3 மணி நேரம் பயணம் செய்ய நேர்ந்தது. பணிகளையெல்லாம் முடித்து விட்டு வீடு திரும்பினால், படுக்கையில் படுத்துவிடுவேன்.



RC *போரிவ்லி தலைவராக பதவியேற்கும்* Dr *பரத் பாண்டியா.*

# பன்முகத் தன்மையுடன் வழிகாட்டிகள்

*RIன் புதிய இயக்குநர் பரத் பாண்ட்யாவுக்கு ஏராளமான வழிகாட்டிகள் உள்ளனர். ஏழைகள் மீது இரக்கம், நேர்மையாக உழைப்பது, ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பது ஆகியவற்றை தனது தந்தையிடம் அவர் கற்றுக்கொண்டார். சேவை மற்றும் அர்ப்பணிப்பு உணர்வை ராஜாசாபூவிடம் கற்றுக் கொண்டேன். கல்யாண் பானர்ஜியிடம் பண்போடு நடந்து கொள்வது, யாரிடமும் அதிகாரம் செலுத்தாமல் இருப்பது, அனைவரையும் ஈர்க்கும் வகையில் செயல்படுவது ஆகியவற்றைக் கற்றுக் கொண்டேன்.*

*நேர்மை, விழுமியங்கள் ஆகிவற்றை K R ரவீந்திரனிடம் கற்றேன். நான் மாவட்ட ஆளுநராக இருந்தபோது, நான் முக்கியமாக கவனத்தில் எடுத்துக் கொண்டது தண்ணீர்ப் பிரச்சினை. அதில், சுசீல் குப்தா எனக்குத் தூண்டுகோலாக அமைந்தார். சமுதாயத்தில் அடித்தளத்தில் இருப்போருடன் நல்லுறவு கொள்வதை அசோக் மகாஜனிடம் கற்றேன். காரணம், போலியோ சொட்டு மருந்து செலுத்துவதில் இஸ்லாமிய மதத் தலைவர்களை ஈடுபடுத்தியது பெரிய திருப்புமுனை ஏற்படுத்தியது. இப்படிப் பல்வேறு பிரமுகர்கள் எனக்குத் தூண்டுகோலாக இருந்திருக்கிறார்கள்.*

*ஆத்ம பரிசோதனை குறித்து கேட்டதற்கு, பாண்ட்யா, சிலர் ரோட்டரியில் எந்தப் பொறுப்பைப் பெரிதும் விரும்புகிறீர்கள் என்று கேட்டனர். நான் அதற்கு ஒவ்வொரு பொறுப்பும் என்னுள் மாற்றத்தை ஏற்படுத்தியது என்றேன். ரோட்டரி சங்கத் தலைவர் தனது தலைமைப் பண்பை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். அதை நான் மாவட்ட ஆளுநராக இருந்தபோதே வலுப்படுத்திக் கொண்டேன். உறுப்பினர்கள் குழுத் தலைவர் என்ற முறையில் இதர சங்கங்களின் உறுப்பினர் குழுத் தலைவர் களுடன் செயல்பட்டதை அடுத்து உலகில் உறுப்பினர்கள் பங்களிப்பில் அமெரிக்காவுக்கு அடுத்து இரண்டாவது இடத்தை இந்தியா எட்ட உதவியது. பயிற்சித் தலைவர் என்ற முறையில் பயிற்சித் திட்டத்தின் பல்வேறு அம்சங்களைக் கற்றுக் கொண்டேன். அவை உரைகள் அல்ல. மக்களிடம் உள்ளவற்றை வெளிக் கொண்ட வருவதற்கான திறமை, அதற்கு வசதி செய்தல் ஆகியவைதான்.*

*இவ்வாறு பாண்ட்யா கூறினார்.*



*RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் தலைவர் D ரவிசங்கர் மற்றும் பவோலாவுடன் Dr பாண்டியா. D 3190 DG சுரேஷ் ஹரியும் உடன் உள்ளார்.*

மறுநாள் காலையில் மருத்துவ மனைக்குச் செல்வேன். மருத்துவப் பணியைக் கைவிட்டிருந்தால், ரோட்டரி மாவட்ட ஆளுநராவதை நினைத்துக் கூட பார்க்க முடியாது என்றார் பாண்ட்யா.

பெங்களூருவைச் சேர்ந்த D ரவிசங்கர் அண்மையில் ரூ.100 கோடி நன்கொடை வழங்கியதை அடுத்து, RI, TRFன் ஆகிய அமைப்புகளின் மீது நம்பிக்கை வலுத்துள்ளது குறித்துக் கேட்டபோது, பரத் பாண்ட்யா, போலியோ ஒழிப்புக்காக TRFக்கு பில் கேட்ஸ் 2007ம் ஆண்டு 10 கோடி டாலர் (ரூ.703.46 கோடி) அளித்தார். மாவட்ட ஆளுநர்களாகத் தேர்ந்தெடுக் கப்பட்டோர் கூட்டத்தில் 2009ம் ஆண்டு மீண்டும் 25.5 கோடி டாலர் (ரூ.1793.82 கோடி) அளித்தார். அச்சமயத்தில் நான் பயிற்சித் தலைவராக இருந்தேன். அப்போது, போலியோ தாக்கத்திலிருந்து குழந்தைகளின் காப்பதற்கான பணியில் ஈடுபட விரும்பியதாக பில் கேட்ஸ் கூறினர். போலியோவை முற்றிலும் ஒழித்த நிலையை நாம் எட்டியதை அடுத்து, ரோட்டரியுடனும், TRFம் இணைந்து பணியாற்றுவதில் ஆர்வம் அதிகரித்தது. காரணம், TRFக்கு அளிக்கப் படும் நன்கொடை உரிய முறையிலும் பயன் தரும் விதத்திலும் வெளிப்படையான முறையிலும் பயன்படுத்தப்படுவதைக் கண்டோம். அதுவே TRFக்கு கிடைத்த வலுவான ஆதரவு எனப்புரிந்து கொள்கிறோம் என்றார் பாண்ட்யா.





பாண்ட்யா 2006–07ம் ஆண்டு ரோட்டரி மாவட்ட ஆளுநராக இருந்தபோது இதைப் போலவே வைர வியாபாரியும் ரோட்டரி சங்க முன்னாள் தலைவருமான ஹர்ஷத் மேத்தா TRFக்கு 10 லட்சம் டாலர் (ரூ.7.04 கோடி) கொடுத்தவர். 2006–07ம் ஆண்டில்



RIDE *கமல் சங்வியுடன் RIDE பாண்டியா.*

# மாதவியின் கருத்துகள்



D 3272 *மாநாட்டின்* RIPR *ஆக கலந்துகொண்ட* Dr *பாண்டியா பாக்கிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஹீனா ரபானியை கௌரவிக்கிறார். மாதவியும் அவருடன் உள்ளார்.*

**பரத் பாண்ட்யா:** *ரோட்டரி சங்கத் தலைவராகப் பொறுப்பேற்க நான் இசைந்தபோது, என் மனைவி மாதவியிடம், உன்னுடைய ஆதரவு இல்லாமல் என்னால் எதையும் செய்ய முடியாது என்று கேட்டுக் கொண்டேன். அதற்கு அவள் உடனே இசைந்தாள். எனது ரோட்டரி பயணத்தில் என்னுடன் முழுமையாகப் பயணித்து வந்தாள். அதே சமயம் அவள் இன்னர்வீல் அமைப்பின் பொறுப்புகளை ஏற்பதை அவள் தவிர்க்கும்போது, என் கணவர் நேரமின்றி உழைக்கிறார். இருவரும் தலைமைப் பதவிகளை ஏற்பது இயலாது என்று கூறினாள். இதனால், வீட்டிலும் மருத்துவமனையிலும் அவளது கோட்டைதான்.*

*மாதவி தனக்கே உரிய வகையில் தலைவி. கடந்த ஆண்டு இன்னர்வீல் 314வது மாவட்டத்தின்* (Inner Wheel District 314) *தலைவராக இருந்தாள். அவளது மாவட்டம் எங்களது மாவட்டத்தை விடப் பெரியது.* (RID 3140 *மாவட்டம்* 3141*வது மாவட்டம்,* 3142*வது மாவட்டம் எனப் பிரிக்கப்பட்டது*).

*தலைவர் என்ற முறையில் எனது ரோட்டரி சங்கத்தின் செய்தி மடலை நான் வெளிக்கொண்டு வரவில்லை. மாதவிதான் கொண்டுவந்தாள். தலைவர் என்ற முறையில் அதில் எனது செய்திதான் வரும். படங்கள் உள்பட மற்றவையெல்லாம் அவள் தொகுத்தவை.*

**மாதவி:** *பரத் பாண்ட்யா இந்த நிலைக்கு உயர்ந்தது எனக்குப் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் உள்ளது. அவர் அர்ப்பணிப்பு உணர்வு மிக்கவர். நேர்மையும் அக்கறையும் மிக்கவர். ரோட்டரி அமைப்பு மிகச் சிறப்பாகச் செயல்படுவதற்காக அவர் அடுத்த இரு ஆண்டுகளுக்கு கடுமையாக உழைப்பார் என நம்புகிறேன். ரொம்ப பிசியான மருத்துவர் என்றாலும் எப்படி நேரம் ஒதுக்குகிறார் என்று கேட்கிறீர்கள். ஆமாம், அப்படி செயல்படுவது ஒரு சவால்தான். ஆனால், அவர் வேலைகளையும் பயணத்தையும் பெரும்பாலும் வார இறுதியில் மேற்கொள்வது. நோயாளிகளுக்குத் தவறாமல் சிகிச்சை செய்கிறார்.*



அது போன்ற சர்ச்சைகள் இருப்பது உண்மை தான். ரோட்டரி என்பது சமூகத்தின் பிரதிபலிப்பு என்று எப்போதும் கூறுவதுண்டு. பெரிய சமுதாயத்தில் சில கருங்காலிகள் இருக்கத்தான் செய்வர். அதற்கு ரோட்டரியும் விதி விலக்கல்ல. அதே சமயம் அவையெல்லாம் மிக மிக சொற்பம்தான். நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்துவதற்கான நிதியை முறைகேடாகப் பயன்படுத்துவதை மன்னிக்க முடியாது. அத்தகைய புகார்கள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிதிப் பயன்பாட்டை எச்சரிக்கையாகவும் வெளிப் படையாகவும் மேற்கொள்ளும் விதத்தில் ஒழுங்கு முறையைச் கடைப்பிடிக்க உறுதி பூண்டுள்ளோம் என்றார்.

D 3140, 20 லட்சம் டாலர் (ரூ.14.07 கோடி) TRFக்கு அளித்துள்ளது. முதல் முறையாக இந்திய ரோட்டரி மாவட்டம் ஒன்று TRFக்கு நன்கொடை அளித்ததில் முதலிடம் பிடித்தது.

ஹர்ஷத் மேத்தாவும் அவரது மனைவி நைனாபென்னும் இதற்காக சிறப்பிக்கப்பட்ட நிகழ்ச்சி யில் நைனா பென், நாங்கள் ஜைன சமயத்தைச் சார்ந்தவர்கள். எது எங்களுக்குச் சொந்தம் என்று கருதப்படுகிறதோ அது உண்மையில் எங்களுக்குச் சொந்த மானது அல்ல என்பதை உணர்ந்துகொண்டோம். அவற்றைப் பிறருக்கு அளிக்க வேண்டும். அப்படி அளிப்பதை ரோட்டரி மூலம் அளித்தால், அது உரிய இடத்துக்கு உரிய வகையில் சென்றடையும். இந்தியாவில் நூறு, இருநூறு பேர் மேத்தாவை விட அதிகமான பணம் வைத்திருப்பவர்கள். ஆனால், கொடுப்பதற்கு மனம் தேவை. அத்துடன், நல்ல நிறுவனத்துக்கு நன்கொடையாக நற்பணிகளுக்காகக் கொடுக்க உறுதி கொள்ள வேண்டும். TRFக்கு நன்கொடை வழங்கினால், அது பயனுள்ளதாக அமையும் என்று மக்கள் கருதுகிறார்கள். ரவிசங்கரும் அதை தான் நினைத்திருப்பார் எனக் கருதுகிறேன். திரட்டப்படும் நிதியில் 35 சதவீத தொகையை நிர்வாகத்துக்குப் பயன் படுத்தலாம் என்று அமெரிக்க வரிச்சட்டம் அனு மதிக்கிறது. TRFல் 7 முதல் 8 சதவீதம் நிர்வாகத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது. அது மிகவும் குறைவானது என்றார்.

வாரிசுகள் குறித்து நமது மண்டலத்தில் பிரச்சி னை எழுப்பப்படுகிறதே அதைப் பற்றிக் கேட்டோம்.



ரோட்டரி எப்படி உங்களது வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தியது? என்று கேட்டதற்கு பரத் பாண்ட்யா, மக்களுடன் கலந்துரை யாடுவது, மக்களின் நல்ல பணிகளைப் போற்றுவது ஆகியவற்றில் என்னை நானே மேம்படுத்திக் கொள்ள ரோட்டரி பெரிதும் உதவியது. நமது வாழ்க்கையில் கற்போம், ஈட்டுவோம், திருப்பி அளிப்போம் என மூன்று கட்டங்கள் உள்ளதை அடிக்கடி குறிப்பிடுவேன். கண்ணோட்டம், அணுகு முறை, தலைமைப் பண்பு ஆகிய விஷயங்களில் ரோட்டரிக்கு நான் பங்களித்ததை விட அதிலிருந்து பெற்றுக் கொண்டதே அதிகம் என்று கூறுவதில் எனக்குத் தயக்கமில்லை என்றார்.

புகைப்படங்கள்:
ரஷீதா பகத் மற்றும்
Courtesy: பரத் பாண்ட்யா.

வடிவமைப்பு:
S கிருஷ்ணப்ரதீஷ்

NiveshGuru™
SAMPATTI KI UNATTI

# GROW YOUR WEALTH

NiveshGuru, a one-stop solution for all your investment needs.

KshetraGuru® PROPERTY

SwarnaGuru® GOLD

FDGuru® FIXED DEPOSIT

VyaparGuru® STOCK BROKING

ShuruGuru™ IPO

YojanaGuru® GOVERNMENT BONDS

NidhiGuru™ MUTUAL FUND

AmulyaGuru™ PRECIOUS STONES



Nivesh Guru Advisors Private Limited
68-B, Nariman Bhavan, Nariman Point, Mumbai - 400021

+91 22 2288 0808 info@niveshguru.in www.niveshguru.in

# இயக்குநர் என்ற முறையில் நிர்வாகி என்பதை விட துணை புரிவது தான் என் பணி: கமல் சங்வி

ரஷீதா பகத்



*RIDE கமல் சங்வி அவர் மனைவி சோனலுடன்.*




ரஷீதா பகத்

என் வாழ்க்கையையே அற்புதமாகப் புரட்டிப் போட்டு விட்டது ரோட்டரி. என் சிந்தனை, வாழ்க்கையை மாற்றிவிட்டது இப்படி உணர்ச்சி வயப்பட்ட நிலையில் கூறுகிறார் RI புதிய இயக்குநராகப் பொறுப்பேற்க இருக்கும் கமல் சங்வி. ரோட்டரியின் இயக்கத்தில் 28 ஆண்டுகள் பயணித்தவர். அவரை சென்னையில் உள்ள ரோட்டரி நியூஸ் டிரஸ்ட் அலுவலகத்தில் அவருடன் ஒரு நாள் கோடையின் காலையில் அமர்ந்து பேசினோம். கோடைக்கு இதமான மோர் அருந்தினார் அவர். அப்போது, தனது ரோட்டரியில் தன்னை இழுத்த அம்சங்கள், பணிகள் ஈடுபாடு ஆகிய அனுபவங்களைச் சுவையாகப் பகிர்ந்து கொண்டார் கமல்.

ஜார்க்கண்ட் மாநிலம் தன்பாதைச் சேர்ந்த அவரது தந்தையும் ரோட்டரியைச் சேர்ந்தவர். அதனால், தன்பாத் (அப்போது பிஹாரில் இருந்தது) ரோட்டரி சங்கத்தில் இருந்த தந்தையைப் பின்பற்றி ரோட்டரியில் இணைவது எளிதாக இருந்தது. 1991ம் ஆண்டு ஜூலை 1ம் தேதி ரோட்டரியில் இணைந்தார்.

தன்பாத் ரோட்டரி சங்கம் பல முறை கண் சிகிச்சை முகாம்களை நடத்தியுள்ளது. முன் காலத்தில் இத்தகைய முகாம்கள் பள்ளிக்கூட வளாகங்களில் நடத்தப்படும். அவற்றில் 400 பேர் முகாமுக்கு உள்ளே இருக்க, சுமார் 100 பேர் வெளியே காத்திருக்க வேண்டும். நான் வெளியே இருப்பேன், ஊரில் எல்லோரையும் எங்கள் குடும்பத்துக்கே தெரியும் என்பதால் எல்லோரும் வந்து பேசுவார்கள் என்றவர் சுவையான நிகழ்வுகளை நினைவுகூர்ந்தார்.

அப்போது 70 வயது ஏழைப் பெண்மணி கிழிந்தை ஆடைகளோடு, காலில் செருப்பு கூட இல்லாமல் என்னை அணுகினார். உடன் அவரது கணவரும் இருந்தார். அந்தப் பெண்மணி என்னிடம் தனது கண்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு விட்டதாகவும் சிகிச்சை அளிக்கும்படியும் கேட்டுக் கொண்டார். அங்கிருந்த கண் மருத்துவரை அழைத்துப் பரிசோதிக்கும்படி சொன்னேன்.

மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றுக் கொள்ளும்படி அவரிடம் வலியுறுத்தினேன். அவரும் அவரது கணவரும் சுமார் 10 மைல்கள் நடந்தே முகாமுக்கு வந்தனர் என்பதை அப்போதுதான் அறிந்தோம். அந்தப் பெண் மருத்துவமனையில் சேரும்படி கேட்டுக் கொண்டபோது அவர் சொன்ன பதில் அதிர்ச்சி தந்தது. “நீங்கள் முகாமில் அனுமதித்தால் ஐந்து நாட்கள் நானும் கணவரும் வயிறார உண்போம்” என்றாள். வறுமை, பசி என்ற கொடுமை இப்படியெல்லாம் ஏழைகளைப் பாதித்துள்ளதை அப்போதுதான் அறிந்தேன். எனது வாழ்க்கையில் புதிய பாடத்தைக் கற்றேன். அதைத் தொடர்ந்து அவர், “முகாம் முடிந்து வீடு திரும்பும்போது ஒரு போர்வையும் கிடைக்கும். எங்களுக்கு இரு குழந்தைகள். ஓட்டை வீட்டில் வசிக்கிறோம். போர்வையெல்லாம் 60 ரூபாய். குளிருக்குத் தாக்குப் பிடிக்கலாம்” என்று கூறினார்.

இந்த அனுபவம் இளம் ரோட்டரி இயக்கத்தினரிடம் பெரிய தாக்கம் ஏற்படுத்தியது. முகாமில் கண்ணுக்குச் சிகிச்சை செய்வது என்பதை அறிந்தும் இப்படி வந்து, தனது வயிற்றுக்காகவும் குளிரிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளவும் முகாமுக்கு வரும் நிலைமை குறித்து அவர்கள் அறிந்துகொண்டனர். அப்போது, வசதி படைத்த நாம் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்று அன்றைக்கு உறுதி எடுத்துக்கொண்டேன். அதற்கு ரோட்டரி சரியான வாய்ப்பை அளிக்கும் என்று அறிந்தேன். இந்த அனுபவம் பெயருக்கு ரோட்டேரியினாக இருப்பதை விட உண்மையான தொண்டுள்ளம் கொண்ட ரோட்டேரியனாக மாற வேண்டும் என்ற எண்ணத்தை என்னுள் விதைத்தது என்றார் சங்வி.

கமல் சங்வியின் குடும்பமும் அறப் பணிகளில் ஈடுபடுகிறது. தன்பாதில் நலிந்த பிரிவினருக்கு உதவும் வகையில் இயங்கும் விர்ஜி வங்கி (Virji Bank) அவரது குடும்பத்தினரால் நடத்தப்படுகிறது. சங்வி மிகவும் வசதியான ராஜபோக குடும்பத்தில் பிறந்தவர். குஜராத்தில் உள்ள வசதி படைத்த ஜைன சமுதாயத்தினரில் அவரது குடும்பமும் ஒன்று. அதே

# கமல் சங்வி ஒரு பார்வை



**மதம்:** மதம் என்பதை ஒரு வாழ்க்கை நெறியாகக் கடைப்பிடிக்கிறேன். மனித நேயமே மதம் என்று கருதுகிறேன்.

**படிப்பது:** எல்லா வகையான புத்தகங்களையும் படிப்பேன். முன்பெல்லாம் நிறைய புத்தகங்கள் படிப்பேன். இயக்குநர் ஆன பிறகு அதற்கெல்லாம் நேரமில்லை. ராமாயணம், மகாபாரதம் ஆகிய புராணங்களைப் படிப்பேன். தேவதத் பட்நாயக்கின் நூல்களைப் படிப்பேன். ராமாயண, மகாபாரத நெறிகளை நவீன உலகுக்குப் பொருந்து வகையிலான கருத்துகள் கொண்ட நூல்களை எழுதியிருக்கிறார்.

**இசை:** ஹிந்தி மற்றும் மேற்கத்திய இசையை விரும்பிக் கேட்பேன்; ஜாஸ், மேற்கத்திய பாரம்பரிய இசையை விரும்பிக் கேட்பேன்.

**உடற் பயிற்சி:** தினமும் காலையில் ஒரு மணி நேரம் யோகா செய்கிறேன்; அது மனதை இலகுவாக்குகிறது. மன அழுத்தத்தைத் தணிக்கிறது. நான் அதிக பயணம் செய்யும்போது, கண்டதையும் சாப்பிடுவதால், உடல் எடை போட்டுவிட்டேன். வீட்டில் இருந்தால், யோகாசனம் முடிந்து நீண்ட தூரம் நடை பயணம் செய்வேன். பயணம் செய்யும்போது எனது அறையில்தான் யோகாவைச் செய்ய வேண்டியுள்ளது.

**உணவு:** நான் சாப்பாட்டு ராமன்; குறைவாகவே சாப்பிடுவேன். வெவ்வேறு வகையான சமையலை ருசிப்பது பிடிக்கும். அதற்காக பல உணவகங்களுக்குச் செல்வேன். எந்த ஊருக்குச் சென்றாலும் அங்குள்ள தெருக்களில் கையேந்தி பவன்களுக்கும் செல்வேன்.

**சமைப்பது:** மாகி நூடுல்ஸ் மட்டுமே சமைக்கத் தெரியும். அதற்கு மேல் தெரியாது!

**பயணம்:** பயணம் செய்வது பிடிக்கும். வரலாறு பண்பாட்டை அறிந்து கொள்ள ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வது எனக்குப் பிடிக்கும். அமெரிக்காவுக்கு சாதனை விளையாட்டுகளில் ஈடுபடப் பிடிக்கும். பாராசூட் சாகசம், மலையேற்றம் போன்றவறஅறில் நாட்டம் உண்டு. இந்தியாவைப் போல் ஒவ்வொரு நூறு மைல் பகுதியும் ஒவ்வோரு வகையில் வித்தியாசமானவை.

**ரோட்டரியில் அதிக பெண்கள்:** 101 சதவீதம் தேவை. ஆண்களை விடப் பெண்கள் திறமையானவர்கள் எனக் கருதுகிறேன். ஒரே நேரத்தில் பல காரியங்கள் செய்பவர்கள். பெண் வீட்டைக் கவனிப்பார். குழந்தைகளைப் பார்த்துக் கொள்வார். ஒரு வேலை கொடுத்துவிட்டால், அதை நேரத்தில் செய்து முடிப்பார்கள். எந்த ஆரோக்கியமான நிறுவனத்துக்கும் பெண் பணியாளர்களின் சேவை தேவைப்படும். பெண்களுக்குச் சம பங்கு அளிக்க வேண்டும் என்று நான் கருதவில்லை. கதவைத் திறந்திடுவோம். அவர்கள் தாராளமாக வரட்டும். அவர்களைச் சமமாக நடத்துங்கள். அவர்கள் நிரூபிப்பார்கள். எங்களது ரோட்டரி சங்கத்துக்கு நான்கு பெண்கள் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள்.

**ரோட்டரியில் கற்பது:** ரோட்டரி எனக்கு அன்பாகவும் விசுவாசமாகவும் இருப்பதற்கும் நலிந்தவர்களுக்கு உதவிக் கரம் நீட்டவேண்டும் என்பதையும் கற்றுத் தந்தது. நீங்கள் வசதிபடைத்தவராகவும் சக்தி கொண்டவராகவும் இருந்தால், ஏழைகளுக்கும் பலவீனமானவர்களுக்கும் உதவ வேண்டும் என ரோட்டரி சொல்லித் தந்தது. உலகில் பலருக்குத் தேவையானது இல்லாத நிலையில் இருப்பதைக் கொண்டு திருப்தியுடன் வாழ்வதை ரோட்டரி கற்றுத் தந்தது. நான் ஏன் இயக்குநராக வந்தேன்? என்னை விட தகுதியும் திறமையும் கொண்ட நூற்றுக்கணக்கான ரோட்டரி உறுப்பினர்கள் இருப்பதை அறிவேன். இந்நிலையில் நான் இயக்குநராக்கப்படுவதற்கு ஏதோ காரணம் இருக்கிறது. உலகில் வேறு எந்த அமைப்பும் ரோட்டரியைப் போல் அன்பு, நல்லெண்ணம், நட்பு, நம்பிக்கை ஆகியவற்றை அளிப்பதில்லை.யாராவது ஒருவரைப் பார்த்து அவர் ரோட்டரி உறுப்பினர் என்றதும் உங்களுக்குள் ஒரு பொறி ஏற்பட்டு விடும். அமெரிக்காவுக்குச் சென்றபோது, யாரோ தெரியாதவர்கள் கூட விமான நிலையத்திற்கே வந்து நம்மை வரவேற்கிறார்கள். அமெரிக்காவில் இதைப் போல் யாருக்குச் செய்கிறார்கள்? ரோட்டரி உறுப்பினர் என்ற ஒரே காரணத்துக்காக அவர்கள் நம்மை கவனிக்கிறார்கள்!

**ரோட்டரியில் பெருமை கொண்ட தருணம்:** அமான் கீ ஆஷா என்ற ஒப்பந்தத்தின் கீழ் சின்ன இதயங்களை ஆற்றுவோம் (Healing Little Hearts Project) என்ற திட்டத்தின் மூலம் பாகிஸ்தானைச் சேர்ந்த 20 சிறுவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. அது பெருமையான செயல்.

**ரோட்டரியின் பரிசு:** மக்களின் முகங்களில் புன்னகை மலர்வதற்கு செய்யப்படும் அரிய வாய்ப்பு.

**ரோட்டரியின் தொலைநோக்கு:** நோபல் பரிசு பெறுவதற்காக உழைப்போம் என்று கூறி வருகிறேன். போலியோ நோய் உலக அளவில் முற்றிலுமாகத் துடைத்தெறியப்பட்டால், அந்தப் பணிக்குப் பரிசு பெறத் தகுதியுண்டு. ஏதாவது குறிப்பிடத்தக்க செயலைச் செய்தவர்கள் காலப் போக்கில் மறக்கடிக்கப்படுகிறார்கள். ஆனால், ரோட்டரி இங்கே இருக்கிறது. எனவே நிச்சயமாக பரிசு பெறத் தகுதி உள்ளது. எனது ரோட்டரிக்கான கனவு உலக அமைதி மட்டுமல்ல. போர் இல்லாத சமயத்தில் வருவதல்ல. ஆனால், ஒவ்வொரு உயிரினமும் காக்கப்பட்டு, கல்வி, சுகாதாரம், அடிப்படை சுகாதாரம், உணவு, நல்ல குடிநீர் ஆகியவை கிடைக்கவேண்டும். மற்றவர்களுக்கு நிரந்தர அமைதி கிடைக்கும்.



நிறுவியர். ஆனால், எதிர்பாராமல் இதய நோய் ஏற்பட்டதால் சொந்த ஊருக்குத் திரும்பிவிட்டார். திரும்பியபின், தந்தைக்குத் துணையாக வர்த்தகத்தைப் பார்த்துக் கொண்டார். அப்போது ரோட்டரி சங்கத்தில் இணைந்தார். தந்தை இருந்த ரோட்டரி சங்கத்திலேயே தொடர்ந்து நீடிப்பது சங்கடமாக இருக்கிறதா என்று கேட்டதற்கு, அதெல்லாம் இல்லவே இல்லை. எங்களது ரோட்டரி சங்கம் வித்தியாசமானது. அதில் 7 பேரின் மகன்களும் ரோட்டரி உறுப்பினர்களாக இருக்கிறார்கள். தற்போது என் மனைவி சோனாலும் இணைந்துள்ளார் என்றார்.

இன்னொரு சுவையான விஷயம் சோனாலும் கமலும் குழந்தைகளாக இருந்தபோதே நன்கு அறிமுகமானவர்கள். சோனாலின் மாமாவும் எனது தந்தையும் நண்பர்கள். இருந்தாலும் இருவரது திருமணமும் பெரியோர்கள் ஏற்பாடு செய்ததுதான். திருமணம் குறித்து இரு குடும்பங்களும் யோசிக்கும் வரையில் நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்தது கிடையாது. என் குடும்பத்தில் இன்று வரை உள்ள ஒரு தமாஷ் என்ன தெரியுமா? நான் சோனாலிடம் ஒரு முறை, “நான் எப்போதும் கமலைப் பெயர் சொல்லி கமல்பாய் என்றுதான் அழைப்பேன், எனவே இது ஒத்து வராது என்று கூடக் கூறலாமா” என்று யோசனை கூறினேன். ஆனால், அதெல்லாம் நடக்கவில்லை.

1998ம் ஆண்டு ரோட்டரியில் இணைந்த பின் ஏழாண்டுகளில் கமல் ரோட்டரி சங்கத் தலைவர் ஆகிவிட்டார். ஆரம்பத்தில் சில ஆண்டுகள் என்னைப் பொறுத்தவரையில் ரோட்டரி பல சங்கங்களில் ஒன்று என்ற எண்ணம்தான் இருந்தது. மாவட்ட ரோட்டரி கூட்டம் எதிலும் பங்கேற்றதில்லை. எனினும், பல சேவை முகாம்களில் ஆர்வத்துடன் பங்கேற்றேன். குறிப்பாக எங்களது சமயம் நிலையான பாரம்பரியம் மிக்க குடும்பம். என் தாத்தா காந்தியவாதியாகவே திகழ்ந்தவர். அதே சமயம் என் தந்தை அதற்கு மாறானவர். ராஜாவைப் போல் வாழ்ந்தவர். எப்போதும் சுற்றுலா செல்வார். அதைத்தான் அவரிடமிருந்து கற்றுக் கொண்டேன் என்றார் சங்வி.

சங்வி டார்ஜிலிங்கில் பொதுப் பள்ளியில் படித்தவர். பின்னர், மும்பையிலும் மருந்து அறிவியல் (Pharmaceutical Sciences) படிப்பை மணிப்பாலிலும் கற்றதுடன் தொழிற்சாலையையும்



RC *தன்பாத்தில் 1991ல் உறுப்பினராக சேரும் கமல் சங்வி.*




ரோட்டரி சங்கம் நடத்திய கண் சிகிச்சை முகாம்களில் ஈடுபட்டேன் என்றார்.

அதையடுத்து ரோட்டரி மாவட்ட ஆளுநர் பொறுப்பை கமல் சங்வி ஏற்பதில் அவருக்கு சிரமம் இருக்கவில்லை. அதையடுத்து அவரது நெருங்கிய நண்பர் சந்தீப் நரங் மாவட்ட ஆளுநராக 2002-03ம் ஆண்டில் பொறுப்பேற்ற பிறகு, ரோட்டரி குறித்த அவரது பார்வை விரிவடைந்தது. அப்போது நான் மாவட்ட ரோட்டரியின் செயலாளர். அந்தக் காலத்தில் பிகாரில் எங்கள் இருவரையும் மாவட்டத்தின் ஆங்கிலேய துரை (Angrez) போலக் கருதினர். காரணம், பிகாரில் பெரும்பாலானோர் ஆங்கிலத்தைச் சரளமாகப் பேசுவதில்லை. நாங்கள் இருவரும் உறைவிடப் பள்ளியில் (Boarding School) படித்தவர்கள். எங்களது வாழ்க்கை முறையோ ஆடம்பரமானது. இந்த நிலையில் சந்தீப் என்னை ரோட்டரி மாவட்ட ஆளுநராக முயற்சி செய்யும்படி கேட்டுக் கொண்டார். நானும் பெயரைக் கொடுத்தேன்.

வீடு திரும்பி எனது தந்தையிடம் கூறினேன். அவர் என்னிடம் நிதானமாக நிறைய அறிவுரைகள் கூறினார்.

அவர் என்னிடம், “கமல், எதையும் இழப்பதற்குத் தயாராக வேண்டும் (Get Ready to Lose). எதை இழந்தாலும் மனம் தளரக் கூடாது. ரோட்டரியிலிருந்து விலக மாட்டேன் என்று உறுதி அளிக்க வேண்டும். யாரிடமும் கைகட்டி நிற்க மாட்டாயே. நீ தலைமைப் பொறுப்பை ஏற்கத் தயாராக இருக்கிறாயா? நாமெல்லாம் தொழிலில் யாரையும் அணுகுவதில்லை. எல்லோரும் எந்தக் காரியத்துக்கும் எங்களைத்தான் தேடி வருவார்கள். ரோட்டரி தலைமை ஏற்றால் நாம் பலரை அணுக வேண்டியிருக்கும். அவர்களது ஒப்புதலைப் பெற வேண்டியிருக்கும். மாவட்ட ஆளுநராக இருந்தால் அதிகாரம் கிடைத்ததாகக் கருதிக் கொண்டு செயல்படக் கூடாது என்றெல்லாம் அறிவுரை கூறினார். நான் அவருக்கு உறுதி அளித்தேன் என்றார் கமல்.

முதல் போட்டியிலேயே ரோட்டரி மாவட்ட ஆளுநராகிவிட்டார் கமல் சங்வி. 2005-06ம் ஆண்டு மாவட்ட ஆளுநராகப் பொறுப்பேற்றவுடன், அற்புதமான அனுபவம். ஆளுநர் பதவி மூலம் ஏராளமான நண்பர்கள் கிடைத்தனர். ஏதாவது நல்ல பணிகளைச் செய்யுமாறு மக்களைத் தூண்டுவதற்கான திறமை பெற முடிந்தது. பிறரிடம் பணிவாக ஆலோசனைகளைக் கேட்பதால், செல்வாக்கு மிக்கவர்கள், சக்தி படைத்தவர்கள் கூட ஏதாவது செய்யும்படி நாம் கூறினால், கேட்பார்கள் என்றார்.

மாவட்ட ரோட்டரி ஆளுநர் என்ற முறையில் கமலின் மிகப் பெரிய சாதனை 3250-வது மாவட்டத்தில் (District 3250) சஹேலி மையங்கள் (Saheli centres) என்ற பெயரில் மகளிர்க்காக 20 இடங்களில் தொழிற்பயிற்சி மையங்களை தொடங்கியது தான். இவை அனைத்தும் பிஹார், ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் இடம்பெற்றுள்ளன. அடுத்து, TRF மிகப் பெரிய அளவில் நன்கொடை அளித்தது இரண்டாவது சாதனையாகும். அது வரையில் அவரது தலைமையிலான ரோட்டரி மாவட்டம் ஒரு லட்சம் டாலரை (சுமார் ரூ. 70 லட்சம்) விஞ்சியதில்லை.

எனது காலத்தில் அதிகபட்சமாக 2,40,000 டாலர் (சுமார் ரூ.1,66,51,057) திரட்டித் தந்திருக்கிறோம். TRFக்கு அதிக தொகை அளித்ததில்



இந்தியாவில் இரண்டாவது இடத்தை வகிக்கிறோம். பிகார் இரண்டாம் இடத்தை வகிப்பது இந்த மண்டலத்தில் உள்ள அனைத்து ரோட்டரி உறுப்பினர்களின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. அது அளப்பரிய ஆற்றலை அளித்துள்ளது என்றார் கமல் சங்வி.

இவற்றை எப்படிச் சாதித்தார் கமல்?

ரொம்ப சுலபம். பிகார் மாநிலத்தில் இயற்கை வளம் அதிகம். ஒரு காலத்தில் பண்ணைகள் நிறைய இருந்தன. இது குறித்து எனது தந்தையிடம் விவாதித்தேன். அவர், “கமல், பிகாரில் நிறைய மாணவர்கள் உறைவிடப் பள்ளிகளில் படிக்கிறார்கள். ஒவ்வொரு மாணவருமே நன்கொடை அளிக்கும் சக்தி உள்ளவர்கள்” என்று கூறினார். அவர்களிடம் பணத்துக்குப் பஞ்சமில்லை. ஆனால், அவர்களுக்குக் கொடுத்துப் பழக்கமில்லை.

அப்பாவின் வார்த்தையைத் தப்பாமல் பிடித்துக் கொண்டேன். மாவட்ட ஆளுநர் பல்வேறு இடங்களுக்குச் செல்லும் போது அனைவரிடமும் TRFக்காக நன்கொடை திரட்டினேன். அதற்குப் பலன் கிடைத்தது. ஆண்டு இறுதியில் என்னால் 2.40 லட்சம் டாலர் (சுமார் ரூ. 1,67 கோடி) வரை திரட்ட முடிந்தது. உண்மையில் நான் 1,55,555 டாலர்தான் (ரூ.1,07,92,312) திரட்ட வேண்டும் என்று திட்ட மிட்டிருந்தேன். அது இலக்கையே விஞ்சிவிட்டது என்றார் கமல் சிங்வி.

இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட இடங்களில் தங்குவதற்கான கூடாரங்கள் உள்ளிட்டவற்றை வழங்கியது அவருக்கு நல்ல பெயரை ஈட்டித் தந்தது. அத்தகைய பணியில் ஈடுபட்டது குறித்து கமலிடம் கேட்டேன். ஒரு முறை பிகாரில் கோஸி நதிப் பெருக்கினால் சேதம் ஏற்பட்டது. அப்போது, PRID



# சோனல் என் சக்திகளின் தொகுப்பு



*RI இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கமல் சங்வியை அவரது மனைவி சோனாலைப் பற்றிக் கேட்டால், அவள் அற்புதமான மனுஷி. எனக்கு மலையைப் போல் ஆதரவாக இருப்பவள். எனது இரு மகன்களும் உறைவிடப் பள்ளிகளில் (Boarding Schools) படித்தவர்கள். பல ஆண்டுகள் எங்களை விட்டுப் பிரிந்தே இருந்தனர். எனது பெற்றோர் கடந்த பத்தாண்டுகளாக நோய் வாய்ப்பட்டவர்கள். என் தந்தை புற்றுநோய்க்கு ஆளானவர். மாரடைப்பு ஏற்பட்டு கடந்த ஆண்டு மறைந்து விட்டார். என் தாய் பல நோய்களுக்கு ஆளாகி சிகிச்சை பெறுகிறார். நான் இல்லாத போது வீட்டு விவகாரங்களைத் தனக்கே உரிய வகையில் சமாளிப்பவர் என்கிறார் கமல்.*

*முத்த மகன் க்வாப் பயோடெனாலஜி நிபுணர். ஜெர்மனியில் அவர் மூளைப் புற்றுநோய் குறித்து ஆராய்ச்சி செய்து வருகிறார். இரண்டாவது மகன் ராவிஷு கம்ப்யூட்டர் என்ஜினீயரிங் படித்து விட்டு சுவிஸ் வங்கியில் பணியாற்றப் போகிறார்.*

*என் மனைவி சோனால், வீட்டுப் பணிகளையும் செய்து விட்டு, கட்டுமானத் தொழிலிலும் கவனம் செலுத்துகிறார். இவை தவிர, மனைவி நடத்தும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் மூலம் பெண்களுக்குக் காகிதப் பொருட்களைத் தயாரிப்பதற்கான பயிற்சியையும் நடத்தி வருகிறார். பாலிதீன் பைகளை சோனால் கடுமையாக வெறுப்பவர். ரோட்டரி உறுப்பினராகவும் இன்னர் வீல் சங்கத்தின் (Inner Wheel Club) முன்னாள் தலைவராகவும் இருக்கிறார். ஏராளமான பெண்களுக்குப் பயிற்சி அளித்து அவர்கள் நல் வாழ்க்கை வாழ உதவி வருகிறார். மிகுந்த நேசத்துக்கு உரிய அவர் எக்கச்சக்கமான ஆற்றல்கள் கொண்டவர் என்று கூறிய கமல் சங்வியிடம் ரோட்டரி பணியால் தனது நேரம் பறிபோவதாக அவர் குறைப்பட்டுள்ளாரா என்று கேட்டபோது, சில சமயம் உண்டு. இருந்தாலும் ரோட்டரிப் பணியில் எனக்குள்ள அதீத ஆர்வம் அவருக்குத் தெரியும். அதனால், அப்பணியைத் தொடர அவர் அனுமதிக்கிறார் என்று சிரித்தபடியே பதிலளித்தார்.*

Rasheeda Bhagat



PRIP *கல்யாண் பானர்ஜியுடன் கமல் சங்வி.*

சேகர் மேத்தாவின் அலுவலகத்தில், RI முன்னாள் தலைவர் கல்யாண் பானர்ஜி, PRID சுஷீல் குப்தா ஆகியோருடன் நான் இருந்தேன். வெள்ளம் பாதித்த மக்கள் தங்குவதற்குத் தற்காலிக பெட்டிகள் போன்ற உபகரணங்களைப் பெறுவதற்குப் பாடு பட்டனர். அப்போது, சேகர் மேத்தாவிடம் இவ்வாறு உபகரணங்களுக்காக பிறரை சார்ந்திருக்காமல் நாமே ஏன் அவற்றைத் தயாரிக்கக் கூடாது என்று கேட்டேன் என்று கமல் பதிலளித்தார்.

அதையடுத்து, பிகாரில் அனேகமாக எல்லா இடங்களிலுமே இரும்புப் பெட்டிகளைப் பார்க்கலாம். வெள்ளம் நேரும் பகுதிகளில் அத்தியாவசியப் பொருட்கள் பாதிக்கப்படாமல் அவை பயன்படுகின்றன. தானியங்கள் போன்றவை சேமித்து பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன. அதைத் தொடர்ந்து டிரங்கு பெட்டிகள் தருவிக்கப்படுகின்றன.

அப்போதுதான் ரோட்டரி இந்தியா மனிதாபிமான நிறுவனம் (The Rotary India Humanity Foundatio) உருவாக்கப்பட்டது. பிகார், நேபாளம், ஒடிசா, கேரளம் ஆகிய இடங்களில் இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டோருக்கு 10 ஆயிரம் தங்குவதற்கான உபகரணங்கள் அளிக்கப் பட்டன. எப்போதும் அவசரத் தேவைக்காக தங்குவதற்கு உதவும் 300 பெட்டிகள் (Shelter Boxes) தயாராக இருக்கின்றன. அவை 48 மணி நேரத்தில் அனுப்பி வைக்கப்படும். நான் இயக்குநராக இருக்கும் காலத்தில் இதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். இது மேலும் விரிவுபடுத்தப்படும் என்றார் கமல்.

கமல் சங்வி எழுத்தறிவு இயக்கத்திலும் ஆர்வம் கொண்டவர். முழுமையான எழுத்தறிவு பெற்ற நாடாக இந்தியா உருவாக வேண்டும் என்ற RI முன்னாள் தலைவர் கல்யாண் பானர்ஜியின் கனவு செயல்படுவதற்காக அவர் கொண்டுள்ள திட்டம்?

அக்கனவு நிறைவேறும் நாள் வெகு தூரம் இல்லை.



*சென்னை மாநாட்டில்* RIDE *பரத் பாண்டியாவுடன் கமல் மற்றும் சோனல் சங்வி.*

## முன்மாதிரிகள்

**கல்யாண்தா (PRIP கல்யாண் பானர்ஜி):** அவரது கவனிப்புத்திறமை, மனித விழுமியங்களை மதித்தல், எதைப்பற்றியாவது கலவரம் அடைந்து அவரை அணுகுவோரைத் தனக்கே உரிய பாணியில் சமாதானம் செய்யும் ஆற்றல் அவருக்கே கைவந்தது.

**சுஷீல் குப்தா:** தலைவர்களை, தலைமைத் திறனுள்ளவர்களை அடையாளம் காண்பதும், அவர்களுக்கான பாதையையும் வகுத்தளிக்கும் தனித்த திறமை அவருக்கே உரித்தானது.

**என் தந்தை:** எனக்குச் சரியாக போதித்தது, குறிப்பாக எல்லா முறையும் வெற்றி பெற முடியாது என்ற நிலையில் தோல்வியை ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவம் கொண்டிருக்க வேண்டும் என்று அறிவுறுத்தியது.

**மறைந்த முன்னாள் மாவட்ட ஆளுநர் சந்தோஷ் அகர்வால்:** நான் உருவாகிக் கொண்டிருந்த காலத்தில் ரோட்டரியின் பல்வேறு நுணுக்கங்களை அறிந்து கொள்வதற்கு உரிய வகையில் எனக்குப் பயிற்சி அளித்தவர். அத்துடன் ரோட்டரி உறுப்பினரைப் போல எப்படி சிந்திக்க வேண்டும் என்றும் கற்றுத் தந்தவர்.

**சேகர் மேத்தா:** எனது உடன் பிறவா அண்ணன். உயர்ந்த தரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அதில் எப்போதும் பின் வாங்கவே கூடாது என்றும் எனக்குப் போதித்தவர். ரோட்டரி இந்தியா எழுத்தறிவு இயக்கத்தை ஒரு தேரோட்டத்தைப் போல மெல்ல மெல்ல கடந்த ஏழு ஆண்டுகளில் நகர்த்தி சாதனை படைத்தவர்.



## இன்னொரு இயக்குநருடன் பணியாற்றுவது வரம்

இன்னொரு இயக்குநருடன் இணைந்து பணியாற்றுவது எப்படி இருக்கக் கூடும் என்று கேட்டதற்கு, RI புதிய இயக்குநர் கமல் சங்வி முகம் பளிச்சென்று தோன்றியது. இன்னொரு இயக்குநருடன் (பாரத் பாண்ட்யா) இணைந்து சேவை புரிவது வரப் பிரசாதம். இப்பதவியை நான் அதிகாரமுள்ள ஒரு பதவியாகக் கருதவில்லை. பெரிய மண்டலத்தில் ஒரே இயக்குநர் பணிகளை ஆற்ற முடியாது என்று நினைக்கிறேன். உடல் ரீதியிலும் மன ரீதியிலும் இயலாது. அப்படி யாராலும் செய்ய முடியாது சரி போகட்டும். இத்தகைய பெரிய நாட்டில் ஓர் இயக்குநர் செய்வதை விட இரு இயக்குநர்கள் இணைந்து பணிகளைச் செவ்வனே ஆற்ற முடியும் என்றார்.

மேலும், ஒருவர் எடுக்கும் முடிவை விட இருவர் சேர்ந்து எடுக்கும் முடிவு சரியாக இருக்கும். ஒருவரது முடிவு தவறாகப் போனால், இன்னொருவர் சரி செய்யலாம். இருவர் இணைந்து முடிவெடுப்பது எப்போதும் நல்லது. சமநிலையாக இருக்கும். ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஆற்றல் இருக்கும். பாரத் பாண்ட்யாவுக்கு எனது பலமும் அவரது பலம் எனக்கும் நன்றாகத் தெரியும். எனவே, இதை நீ பார்த்துக் கொள், அதை நான் கவனித்துக் கொள்கிறேன் என்று கூறிக் கொள்வோம்.

கடிதங்களை எழுதுவதில் பாரத் வேகமானவர், சிறப்பானவர். அதில் நான் திறமை இல்லாதவன். ஒரு கடிதத்தை எழுதச் சொன்னால் பாரத் ஐந்தே நிமிடத்தில் கச்சிதமாக முடித்துவிடுவார். எனக்கு அது வராது. ஆனால், தொலைபேசியில் பலருடன் பேசி காரியத்தைச் சாதிக்கும் திறன் எனக்கு உண்டு. ஆகையால், எங்களது பலத்தை சமவிகிதமாகப் பயன்படுத்த இயலும் என்றும் கமல் சங்வி கூறினார்.

பாரத் பாண்ட்யா அன்பான நண்பர். இருவரும் இணைந்து பணியாற்றியுள்ளோம். எழுத்தறிவு இயக்கத்தில் அவர் தலைமைப் பயிற்றுநராக இருந்தார். நான் ரோட்டரி இந்தியா எழுத்தறிவு இயக்கத்தின் (RILM) இணை நிறுவனராகவும் இணைத் தலைவராகவும் இருக்கிறேன். இருவரும் இணைந்து மிக விரிவான பணிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

மற்றவர்களை இணைந்து பணியாற்றும்படி நம்மால் செய்ய இயலும் என்பதை உலகுக்கு உணர்த்த வேண்டுமானால், பொது இலக்கை அடைவதற்கு சக இயக்குநருடன் இணைந்து பணியாற்ற முடியும் என்று நிரூபிக்க இது ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது என்றும் கமல் சங்வி கூறினார்.

இது தொடர்பாக நானும் சேகர் மேத்தாவும் ஒரு நாள் இரவு 8 மணியிலிருந்து மறுநாள் அதிகாலை 5 மணி வரையில் தீவிரமாக ஆராய்ந்து ஓர் அடிப்படை இலக்கை வகுத்தோம். அப்போது ரூ.100 கோடி நன்கொடை திரண்டது. அப்போது எங்களுக்கு வங்கிக் கணக்கு கூட இல்லை. அப்போது ரோட்டரி இந்தியா எழுத்தறிவு இயக்கம் (RILM) தொடங்கப்பட்டது. அதன் நிறுவனர் (Founder) சேகர் மேத்தா. நான் இணை நிறுவனர் (co&founder). கல்யாண் பானர்ஜி ஆலோசகராக உள்ளார். அவரது கனவை 2025ம் ஆண்டில் பூர்த்தி செய்துவிடலாம் எனக் கருதுகிறேன்.

இந்த விஷயத்தில் கல்யாண், சேகர் இருவரும்





*சோனல் சங்வி மற்றும் இரு மகன்கள் க்வாப் மற்றும் ராவிஷீ.*

கடுமையாக உழைத்தனர். தினமும் இன்பம் தரும் வலிகள் ஏற்பட்டன. தொடக்கத்திலிருந்தே சிறிய அளவிலும் பெரிய அளவிலும் ரோட்டரி சங்கங்கள், தலைமைகள் என அனைத்து தொடர்பான பயிற்சியின் மீது தான் கவனம் செலுத்தினோம். எழுத்தறிவு மற்றும் பள்ளியில் கைகழுவு இயக்கம் (WinS) ஆகியவற்றுக்கு உலக அளவில் இயக்குநராகப் பொறுப்பேற்று செயல் பட்டு வருகிறேன். எழுத்தறிவு தீவிரமாகச் செயல்படுத்தப்படாமல், நாம் எது செய்தாலும் போதிய பலன் இல்லை என்று திடமாக நம்புகிறேன். போலியோ ஒழிப்பு என்பது அதி முக்கியத்துவம் வாய்ந்தது என்கிறார் கமல் சங்வி.

ரோட்டரி அமைப்பினர் ஏதோ பென்சில், நோட்டுப் புத்தகங்களை வழங்குவதுடன் நிற்காமல் இத்தகைய பெரிய திட்டங்களைச் செயல்படுத்தவேண்டும் என்று கமல் கருதுகிறார்.

ரோட்டரி சங்கக் கூட்டங்களில் பேசும்போது, ரோட்டரியின் உறுப்பினர்கள் 25 பேர் மொத்தம் ரூ.4 கோடிக்குச் சமம் என்று குறிப்பிடுவேன். அதை அவர்கள் ஏற்பார்கள். அப்போது, “நீங்கள் எல்லோரும் ரூ.100 கோடி மதிப்பிலான நிறுவனத்தை நடத்துபவர்கள். அதற்கு 25 செயல் அலுவலர்கள் (CEOs) அல்லது பொது மேலாளர்கள் (GMs) நிலையில் இருக்கிறீர்கள். ஆனால், பள்ளிகளுக்கு பென்சில் புத்தகம் வழங்கிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் செய்ய வேண்டியது பள்ளிக் கட்டடங்களைக் கட்டுவதுதான்!‘என்று கேட்பேன். யாரையும் இதைச் செய்யாதே என்று கூறாமல், இவ்வளவு மகத்தான பணியைச் செய்யுங்கள் என்றுதான் தூண்டிவிடுவேன். அது மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இன்று எங்களது மண்டலத்தில் உள்ள அத்தனை ரோட்டரி







சங்கங்களும் அற்புதம் நிகழ்த்தி வருகின்றன. எல்லாமே வழிகாட்டுவதிலும் தூண்டுகோலாக இருப்பதிலும்தான் உள்ளது என்றார் கமல்.

இந்தியாவில் ரோட்டரி இயக்கம் தொடங்கி 100 ஆண்டுகள் நிறைவடைந்தது, கோல்கத்தா ரோட்டரி சங்கத்தின் 100வது ஆண்டு விழா ஆகியவற்றைக் குறிக்கும் வகையில்



*தாய்லாந்தில் கமல் மற்றும் சோனல் சங்வி.*

எங்களது மாவட்டங்கள் ரூ.100 கோடி அளவுக்குத் திட்டங்களைச் செயல்படுத்தி கொண்டாட வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன் என அழைப்பு விடுத்தார் அவர்.

நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களுக்கு அமைப்பாளராக கமல் சங்வியும் தலைவராக சேகர் மேத்தாவும் இருக்கின்றனர்.

ஏராளமான திட்டங் களைச் செயல்படுத்த மாவட்டங்களுக்கு பணிகளை ஒதுக்கப் போகிறோம். அதற்காக உலகளாவிய நிதி, வெளி நாட்டு கூட்டாளிகள் பெறத் துணை புரிவோம். இயக்குநரான நான் நிர்வகிக்காமல், உதவுவதற் கான பணிகளைச் செய்வேன். RI குறிக்கோள் நிறைவேறவும் பாடு படுவேன் என்றார் கமல் சங்வி.

புகைப்படங்கள் நன்றி: கமல் சங்வி

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# District Wise TRF Contributions as on April 2019

(in US Dollars)

| District Number | APF | PolioPlus | Other Restricted | Endowment Fund | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | India | | | |
| 2981 | 56,197 | 14,668 | 0 | 8,000 | 78,865 | 246 | 5.4 |
| 2982 | 54,137 | 7,294 | 0 | 243 | 61,674 | 301 | 10.5 |
| 3000 | 13,069 | 2,119 | 298,409 | 49,995 | 363,592 | 21 | 0.4 |
| 3011 | 112,227 | 5,958 | 105,345 | 47,930 | 271,459 | 140 | 4.2 |
| 3012 | 159,059 | 1,440 | 322,461 | 8,800 | 491,760 | 166 | 4.9 |
| 3020 | 24,375 | 80,608 | 2,625 | 7,250 | 114,859 | 81 | 2.1 |
| 3030 | 25,861 | 29 | 0 | 3,000 | 28,890 | 8 | 0.2 |
| 3040 | 2,880 | 0 | 47,976 | 0 | 50,856 | 6 | 0.3 |
| 3053 | 94,943 | 1,950 | 10,500 | 0 | 107,393 | 80 | 2.9 |
| 3054 | (17,179) | 14 | 136,010 | 0 | 118,845 | 38 | 0.7 |
| 3060 | 58,063 | 78,326 | 195,453 | 208,081 | 539,924 | 915 | 22.2 |
| 3070 | 111,703 | 315 | 4,857 | 0 | 116,875 | 442 | 15.3 |
| 3080 | 78,768 | 18,730 | 45,671 | 5,000 | 148,169 | 71 | 2.3 |
| 3090 | 45,219 | 0 | 0 | 0 | 45,219 | 131 | 6.5 |
| 3100 | 21,795 | 475 | 0 | 0 | 22,270 | 82 | 4.9 |
| 3110 | 32,742 | 3,127 | 34,863 | 0 | 70,732 | 55 | 1.4 |
| 3120 | 79,122 | 0 | 217,897 | 0 | 297,020 | 70 | 2.2 |
| 3131 | 372,199 | 25,229 | 367,497 | 83,203 | 848,128 | 1098 | 21.5 |
| 3132 | 23,737 | 310 | 17,129 | 60,000 | 101,176 | 77 | 2.1 |
| 3141 | 577,534 | 19,014 | 1,120,620 | 77,280 | 1,794,447 | 789 | 15.7 |
| 3142 | 299,851 | 75 | 246,041 | 0 | 545,968 | 577 | 18.3 |
| 3150 | 88,106 | 4,664 | 88,978 | 338,467 | 520,214 | 546 | 15.7 |
| 3160 | 66,008 | 1,644 | 0 | 9,277 | 76,929 | 139 | 5.8 |
| 3170 | 82,729 | 3,260 | 118,237 | 0 | 204,225 | 263 | 5.0 |
| 3181 | 151,325 | 938 | 0 | 103 | 152,365 | 600 | 19.9 |
| 3182 | 89,806 | 100 | 11,367 | 0 | 101,273 | 436 | 13.9 |
| 3190 | 119,138 | 19,126 | 117,087 | 1,871,889 | 2,127,240 | 848 | 17.7 |
| 3201 | 161,854 | 26,978 | 238,625 | 0 | 427,456 | 256 | 4.9 |
| 3202 | 23,377 | 32,124 | 35,563 | 0 | 91,064 | 54 | 1.1 |
| 3211 | 137,456 | 2,892 | 0 | 1,515 | 141,863 | 220 | 5.0 |
| 3212 | 108,820 | 14,045 | 7,350 | 76,502 | 206,716 | 129 | 3.3 |
| 3231 | 28,468 | 2,524 | 7,286 | 6,528 | 44,806 | 246 | 8.2 |
| 3232 | 174,461 | 3,600 | 278,422 | 12,475 | 468,958 | 274 | 6.4 |
| 3240 | 55,468 | 421 | 7,374 | 0 | 63,263 | 159 | 5.5 |
| 3250 | 26,657 | 1,834 | 11,216 | 4,812 | 44,519 | 52 | 1.4 |
| 3261 | 22,135 | 1,100 | (1,492) | 3,000 | 24,743 | 47 | 1.8 |
| 3262 | 31,072 | 1,000 | 3,900 | 5,413 | 41,385 | 124 | 3.8 |
| 3291 | 154,390 | 437 | 103,828 | 51,860 | 310,515 | 347 | 9.5 |
| **India Total** | **3,747,570** | **376,367** | **4,201,096** | **2,940,622** | **11,265,656** | **10,134** | **7.3** |
| 3220 **Sri Lanka** | 77,189 | 3,025 | 15,676 | 8,000 | 103,890 | 146 | 8.1 |
| 3271 **Pakistan** | 34,947 | 33,431 | 2,275 | 0 | 70,653 | 27 | 1.9 |
| 3272 **Pakistan** | 25,675 | 2,166 | 0 | 0 | 27,841 | 55 | 1.9 |
| 3281 **Bangladesh** | 160,377 | 3,825 | 81,163 | 17,696 | 263,062 | 302 | 5.5 |
| 3282 **Bangladesh** | 60,241 | 5,095 | 1,050 | 3,000 | 69,386 | 245 | 6.1 |
| 3292 **Nepal** | 184,561 | 25,014 | 117,160 | 25,000 | 351,736 | 402 | 9.2 |
| **South Asia Total** | **4,290,561** | **448,923** | **4,418,421** | **2,994,318** | **12,152,223** | **11,311** | **7.1** |
| **World Total** | **94,330,398** | **23,336,289** | **15,993,352** | **21,551,466** | **155,211,505** | | |

Source: RI South Asia Office

## ரோட்டரி ஃபவுண்டேஷன்

# அறங்காவலர்களின் செய்தி



TRF தலைவர்
ப்ரெண்டா M க்ரெஸி

சமூகத்திற்கு உதவுவதற்காக ரோட்டரி பல்வேறு சேவைத் திட்டங்களை எப்படியெல்லாம் செயல்படுத்தி வருகிறது, அதுவும் நமக்குப் பின்னாலும் அவை நீடிக்கின்றன என்று கூறவேண்டும். ஒரு நாட்டில் இயங்கும் ரோட்டரி சங்கங்கள் இன்னொரு நாட்டு சமுதாயத்தினர் ஆரோக்கியம், அதிக வளம், நல்ல கல்வி ஆகியவற்றை பெறுவதற்கு நிதியைத் திரட்டி உதவி செய்கின்றன என்று விளக்கலாம். அத்துடன், உலகளாவிய மருத்துவ நிபுணர்களைக் கொண்டு போலியோவை ஒழிக்க பணியாற்றிவருவது குறித்து விளக்கலாம். ரோட்டரி தற்போது என்ன நற்பணிகளையெல்லாம் செய்கிறது என்று பெருமையுடன் கூறிக் கொள்ளலாம். நன்கொடைகளை சேவைத் திட்டங்களுக்குப் பயன்படுத்துவதாக TRF அளிக்கும் உறுதிமொழியோடு எதிர்காலத்தில் பலரது வாழ்க்கையில் மாற்றத்தைக் கொண்டு வர ரோட்டரி செயல்படும் என்றும் பெருமையுடன் கூறலாம்.

உலகளாவிய நிதியைப் பெறுவதற்கு 1,078 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் கிடைத்துள்ளது. இதன் மூலம் மொத்தம் 7.65 கோடி டாலர் (சுமார் ரூ.534 கோடி) கிடைக்கும்.

உலக அளவிலான அனைத்து மானியத் தேவைகள், அல்லது தொழிற்பயிற்சிக் குழு விண்ணப்பங்கள் ஆகியவற்றின் தேவை குறித்து அறிய சமூக மதிப்பீட்டு முறையை கடந்த ஜூலை மாதம் அறிமுகம் செய்தோம். ரோட்டரி பேரிடர் உதவி நிதியத்தை (Rotary Disaster Response Fund) உலக அளவில் பேரிடர் உதவிக்காக ரோட்டரி மூலம் 25,000 டாலர் (சுமார் ரூ.17,43,558) நிதிக்கு நிவாரணம் விநியோகம் செய்ய அனுமதிக்கிறது.

ரோட்டரி அமைதி மையங்கள் குறிப்பிடத் தக்க வளர்ச்சியைப் பெற்றுள்ளன. 2019ம் ஆண்டு பெறப்பட்ட விண்ணப்பங்களில் 100 பேர் அமைதி ஃபெலோஷிப் பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

ரோட்டரியின் புதிய ஆண்டை எதிர்கொள்ளும் நாம் உலக அளவில் சமூகத்தில் மிகப் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இந்நிலையில், நமது தலைவர் பிரெண்டா எம். க்ரெஸ்ஸி (Brenda M. Cressey) அவர்கள் கடந்த இரு மாதங்களாக செயல்பட்டு வரும் சீரிய தலைமைக்காக நன்றி தெரிவிக்கிறோம்.

ரோட்டரி ஆண்டை நிறைவு செய்யும் இத்தருணத்தில், ஏதாவது பதிவு செய்ய விரும்பினால், rotary.org/donate என்ற இணையத்தைத் பார்க்கலாம். உங்களது தாராளமனத்துக்கும் உங்கள் அனைவருக்கும் ரோட்டரியின் நன்றிகள்.



TRF பணிக்கு ஆண்டு நிதிதான் (Annual Fund) பெரிதும் துணை புரிகிறது. அதற்கு ரோட்டரியின் தன்னார்வலர்கள், ஃபவுண்டேஷனின் நண்பர்கள் நிதியுதவி செய்கிறார்கள். நல்ல மனிதாபிமானம் மிக்க உலகை உருவாக்குவது என்ற ஃபவுண்டேஷனின் இலக்கு எட்டுவதற்கு பங்களிப்பு செலுத்துகிறார்கள்.

ஆண்டு நிதி உண்மையிலேயே ரோட்டரியை இயக்குகிறது. அத்துடன் உலகம் முழுதும் உள்ள நலிந்தோர், ஏழைகளின் வாழ்க்கையில் கல்வி, சுகாதாரம், நற்பழக்கங்களை மேம்படுத்துவதில் ரோட்டரி சங்கங்களுக்குத் துணை புரிகிறது. பிற சமுதாய மக்களுக்கு உதவ தேவையான நிதியுதவி செய்வதுதான் ரோட்டரி அமைப்பினரிடையில் உள்ள பொதுவான கவலையாகும். உள்ளூர் அளவில் திரட்டப்படும் நிதியைக் கொண்டு உள்ளூருக்கே பங்களிப்புச் செலுத்த அவர்கள் விரும்புகிறார்கள்.

TRFன் சில ஆண்டுகளுக்கு முன் நிர்ணயித்த போலியோ ஒழிப்பு என்ற இலைக்கை நினைவில் கொள்வோம். வட அமெரிக்காவில் போலியோ நோய்க்கான அறிகுறியே இல்லாவிட்டாலும், உலகம் முழுவதும் போலியோவை முற்றிலுமாக ஒழிப்பதற்கு அமெரிக்கா, கனடா, மற்றும் உலகின் பல ரோட்டரி அமைப்பினர் தங்களது பங்களிப்பைச் செலுத்தியுள்ளனர். உள்ளூர் நிதியைக் கொண்டு உள்ளூர் அளவில்தான் பயன்படுத்தவேண்டும் என அவர்கள் எல்லாம் கருதியிருந்தால், போலியோ இல்லாத இந்தியாவையும் 99 சதவீதம் போலியோ ஒழித்த உலகையும் ஏற்படுத்தியிருக்க முடியாது.

ஆண்டுத் நிதிக்கு நீங்கள் செலுத்தும் நன்கொடையில் 50 சதவீதம் மூன்றாண்டுகளுக்குப் பிறகு மாவட்ட ஒதுக்கீட்டு நிதியின் (District Designated Fund) மூலம் உங்களது மாவட்ட ரோட்டரிக்கே திருப்பி அளிக்கப்படுகிறது.

எனவே, ஆண்டு நிதியிற்கு தாராளமாக உதவுங்கள். இல்லையென்றால், நல்ல திட்டங்களைச் செயல்படுத்து வதற்கு எதிர்காலத்தில் மாவட்டத் தலைமைகள் நிதியின்றித் தவிக்க நேரிடும்.

**குலாம் A வஹன்வதி**
TRF அறங்காவலர்

# ரோட்டரி எதிர்காலத் திட்டம்:
# மார்க் மலோனி



RI அமைப்பின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மார்க் மலோனி வழக்கமான நடைமுறைகளை அறிவார். தற்போது, இந்த ஆண்டுக் கோடையில் 2019ம் ஆண்டுக்கான RI தலைமைப் பதவிக்கு பரிந்துரைக்கப்படும் ஆறு பேரில் ஒருவராக மார்க் மலோனி RI தலைமையலுவகத்துக்குப் பயணமாகியுள்ளார்.

உணவு இடைவேளைக்கு முன் என்னை நேர்காணல் கண்டனர். அந்தக் கமிட்டி தலைமை குறித்து இறுதி செய்வதற்கு சில மணி நேரம் இருக்கிறது என்பதை அறிந்திருந்தேன். அது ஓர் அற்புதமான ஆகஸ்ட் மாதம். இவான்ஸ்டனில் காலாற நடந்தேன். மதிய உணவை மிகவும் தாமதமாக அருந்திவிட்டு விடுதி அறைக்குத் திரும்பி, காத்திருந்தேன் என்றார் மலோனி.

அப்போது நடந்த சம்பவத்தை சுவையாக எடுத்துரைத்த மலோனி மதிய உணவுக்குப் பிறகு தான் அழைக்கப்படுவோம் எனக் காத்திருந்தார். ஆனால், தாமதமானது. மாலை ஆகிவிட்டது. பதிலே இல்லை. என் மனைவி கேவுக்கு 'ஒரு பதிலும் இல்லை' என்று குறுஞ்செய்தி அனுப்பினேன். கைபேசி சிணுங்கியது. பரிந்துரைக் கமிட்டியின் தலைவர் ஆனி மேத்யூஸ் அலுவலகக் கட்டடத்துக்கு வருமாறு அழைத்தார்.

ஒரே குழப்பமாகவும் பதைப்பும் இருந்தன. போனில் மனைவியிடம், 'இப்போது தலைமையகக் கட்டடத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறேன். அநேகமாக நல்ல செய்தியாக இருக்கக் கூடும்' என்று கூறினேன்.

அலுவலகத்தில், வரவேற்பு மையத்தில், மார்க் மலோனியை RI அமைப்பின் துணை ஜெனரல் கவுன்சல் ஆண்ட்ரூ மெக்டோனால்ட் வரவேற்று வாழ்த்துக் கூறி, தலைமை யகத்தின் 18வது மாடியில் உள்ள போர்டு அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கே பரிந்துரைக் குழு காத்திருந்தது. மாத்யூ எழுந்து நின்று வரவேற்றார்.

அவர் 'நண்பர்களே, 2019-20ம் ஆண்டுக்கான தலைவராக நியமிக்கப் பட்டுள்ள மார்க் மலோனியை அறிமுகம் செய்ய விரும்புகிறேன்' என அறிவித்தார். நான் குதூகலித்தேன்.

14 மாதங்கள் கடந்தன. அக்டோபர் மாதம், மார்க் மலோனி RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

லேக் மிச்சிகன் நகரில் அமைந்த 18 மாடிக் கட்டடத்தில் RI அலுவலகத்தில் ரோட்டேரியன் (Rotarian) இதழின் முதன்மை ஆசிரியர் ஜான் ரெஸெக், முதுநிலை ஆசிரியர் ஜியாஃப்ரி ஜான்சன் ஆகியோருடன் பேசினார். 90 நிமிடம் நீடித்த இந்த நேர்காணலில் மலோனியின் தலைமைப் பதவி குறித்த விருப்பங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

மலோனியும் அவரது மனைவி கேயும் அலபாமா டெக்காடூர் நகரில் கேயின் தந்தை தொடங்கிய சட்ட அலுவலகத்தில் வழக்குரைஞர்களாக பணியாற்றுகிறார்கள்.

**அவருடன் நேர்காணல்:**
தி ரோட்டேரியன் உங்களது தலைமைக்குப் பின் உங்களது தலைமையின் மரபு எப்படி இருக்க வேண்டும் என்று கருதுகிறீர்கள்?

**மலோனி:** ரோட்டரி என்பது ஐக்கிய நாடுகள் சபையைப் போன்றது. ஆனால், இதில் நாடுகள் இல்லை. தனி நபர்கள் தான் உள்ளனர். இது உலக அளவில் மகத்தான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. கடந்த மாதத்துக்குள் மட்டும் சில அனுபவங்களைச் சந்தித்தேன். இரு வாரங்களுக்கு முன் என் மனைவி கேயும் நானும் எங்கள் சங்க உறுப்பினர்களுடன் அமெரிக்காவின் வர்ஜின் தீவுகளில் உள்ள செயின்ட் தாமஸ் என்ற

இடத்தில் குடிநீர் விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தோம். எங்களது கூட்டாளிகள் செயின்ட் தாமஸ் கிழக்கு ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இரவு உணவுடன் கூடிய சந்திப்புக்கு ஏற்பாடு செய்தனர். அத்தீவில் 2017ம் ஆண்டு ஏற்பட்ட கடும் சூறாவளியை அடுத்து ஏற்பட்ட குடிநீர் பிரச்சினை குறித்து அப்போது உள்ளூர் நிபுணர்கள் விவாதித்தனர். அந்தக் கூட்டத்தின் நிறைவில் ஒரு ரோட்டரி உறுப்பினர், செய்தித்தாளைப் படித்தாலோ சோர்வு ஏற்படுகிறது. ஆனால், ரோட்டரி கூட்டத்துக்கு வந்துவிட்டால், உலகில் நல்ல காலம் ஏற்படும் என்ற எண்ணம் ஏற்பட்டுவிடுகிறது என்று கூறினார். உலகம் எங்கே போகிறதோ என்று கலைப்படுவோரின் மனப்போக்கை ரோட்டரி முழுமையாக மாற்றி விடுகிறது.

இவான்ஸ்டனில் இந்த வார இறுதியில், ஆர்ச் க்ளம்ப் சொஸைட்டியில் (Arch Klumph Society) 32 பேரை இணைத்துள்ளோம். இவர்கள் தான் போலியோ ஒழிப்புக்குக் கணிசமான அளவுக்குத் தங்களது பங்களிப்பைச் செலுத்தி யுள்ளனர். அத்துடன், அமைதி, பூசலுக்கான தீர்வு, தாய் - சேய் நலம், இதர நல்ல காரியங்கள் ஆகியவற்றுக்கும் பங்களித்துள்ளனர். ரோட்டரி அமைப்பினர் உலகை மாற்றுவதற்காக எப்படியெல்லாம் செயல்படுகிறார்கள் என்பதற்கு ஏராளமான தகவல்கள் உண்டு. எங்கே தேவையோ அங்கேயெல்லாம் நிதியைப் பயன்படுத்துகிறார்கள். அப்படிப்பட்ட ரோட்டரிதான் எனக்கு வேண்டும். அதைத்தான் செய்ய விரும்புகிறேன்.

எனது பணிக்காலம் நிறைவடையும்போது, நம் ரோட்டரி கலாசாரத்தில் ஊக்கமளிக்கும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று விரும்பு கிறேன். எது செயின்ட் தாமஸ் ரோட்டரி சங்கத்தினர் ஆன்மாவைத் தொட்டதோ, எது ஆர்ச் கிளம்ப் விழாவில் அந்த அமைப்பினரை TRFக்கு பங்களிப்புச் செலுத்தும் வகையில் உற்சாகத்தைத் தூண்டியதோ அது தேவை என்று விரும்புகிறேன்.

**தி ரோட்டேரியன்:** அதை எப்படி உறுதி செய்வீர்கள்?

**மலோனி:** ரோட்டரி வளர வேண்டும் என விரும்புகிறோம். சேவை புரிவதற்கு மேலும் கரங்களும், சிந்தனைகளைப் பகிர்வதற்கு மேலும் பல மூளைகளும் தேவை என்று விரும்புகிறோம். மேலும் கூட்டாளிகள் தேவை. இணைப்புகள் தேவை. அதைச் சாதிக்க நான்கு விஷயங்களுக்கு நான் முக்கியத்துவம் அளிக்க விரும்புகிறேன். அதில் முதலாவது ரோட்டரியை வளர்க்க வேண்டும்.

**ரோட்டரி இதழ்:** அதை எப்படிச் செய்வீர்கள்?

**மலோனி:** முதலில், ரோட்டரி சங்கங்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ரோட்டரிகளுக்கு உதவுவதற்கான எங்களது முயற்சிகளை இரு மடங்காக உயர்த்து வோம்.தற்போதைய உறுப்பினர்கள் ரோட்டரி செயல்பாடுகளில் அதிகமாக ஈடுபடவும், புதுமையாக்கப் பணிகளை மேற்கொள்ளவும் துணை புரிவோம். அதாவது, ரோட்டரி சங்கங்கள் முன்பிருந்ததை விட மிகவும் தாராளமாகச் செயல்படும். இன்னொன்று, புதிதாக ரோட்டரி சங்கங்களை உருவாக்குதல். ரோட்டரி சங்கங்கள் இல்லாத இடங்களில் புதிதாக சங்கங்களை அமைப்பது தான் நமது பாரம்பரியமாக இருந்தது. இனி, ரோட்டரி சங்கங்கள் இல்லாத இடங்கள் மட்டுமின்றி, செயல்படும் இடங்களிலும் நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. பல இடங்களில் நாம் குறிப்பிட்ட மக்கள் பிரிவினருக்கே சேவை புரிகிறோம். பாரம் பரியமல்லாத வழிகளைக் காணும் விதத்தில் மாறுபட்ட அனுபவங்கள் கொண்ட புதிய சங்கங்கள் தேவை. அது வயது, பாலின வேறுபாடு, பலதரப்பட்ட இனத்தவர் என வெவ்வேறு பட்டவர்களையும் ஈர்ப்பதற்கு உதவும். அப்போதுதான் சமூகத்தின் அனைத்து தரப்பினருக்கும் சேவை புரியமுடியும்.

**தி ரோட்டேரியன்:** வேறு எவற்றுக்கெல்லாம் முக்கியத்தும் அளிக்கப் போகிறீர்கள்?

**மலோனி:** நான் எடுத்துக் கொள்ளும் முதல் முன்னுரிமைக்கு அனுசரணையாக இரண்டாவது மற்றும் மூன்றாவது முக்கிய செயல்பாடுகள் அமைந்திருக்கும்.


RIPE மார்க் மலோனி

ஒவ்வொரு கட்டத்திலும் குடும்பங்களுக்கு இணக்கமான வகையில் நமது கூட்டங்களை நடத்துவது, சேவைத் திட்டங்களை மேற்கொள்வது, சமூக நிகழ்வுகள் ஆகியவற்றை வடிவமைத்துக் கொள்ள வேண்டும். இளைஞர்களின் குடும்ப வாழ்க்கைக்கு அனுசரணையான வாய்ப்புகளை அளிக்க வேண்டியிருக்கிறது.

எனது மூன்றாவது இலக்கு, நமது பண்பாடு, நமது அணுகுமுறைகள், நாம் செயல்படும் முறை ஆகியவற்றை மாற்றுவது ஆகும். அதன் மூலம் ரோட்டரி அமைப்பினர் தங்களது தொழில், குடும்பம் ஆகியவற்றை ஒரு புறம் கவனித்துக் கொண்டே மறுபுறம் ரோட்டரி சமூகப் பணிகளிலும் ஈடுபட வழியமைக்க வேண்டும். ரோட்டரி இளைய தலைமுறையினரை வசீகரிக்க வேண்டுமானால் ரோட்டரி தலைமையை இளைஞர்கள் எளிதாக அணுகும் நிலை ஏற்பட வேண்டும்.

**தி ரோட்டேரியன்:** நான்காவது திட்டம்?

**மலோனி:** 2020ம் ஆண்டு ஜூன் மாதம் ஐ.நா. சபையின் 75ஆவது ஆண்டு கொண்டாடப்படுகிறது. ஐ.நா. சபை தொடங்கிய காலத்திலிருந்தே ரோட்டரி அதனுடன் ஈடுபட்டு செயல்பட்டு வருகிறது. அதனால்தான், ஐ.நா. சபையுடன் உறவு கொள்வதற்கு ரோட்டரி கவனம் செலுத்தவேண்டும் என விரும்புகிறேன். ஆண்டு தோறும் ரோட்டரி - ஐ.நா. தினம் ஜெனிவா, நைரோபி ஆகிய இடங்களில் கொண்டாடப்பட்ட பிறகு, நியூயார்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் கொண்டாடப்படும். ஐ.நா. ஏஜென்சி களுடன் ரோட்டரியின் நல்லுறவு குறித்த மூன்று அதி முக்கியத்துவம் வாய்ந்த மாநாடுகளை உலகின் மூன்று வெவ்வேறு இடங்களில் நடத்துவது குறித்தும் கவனம் செலுத்தி வருகிறோம். ரோட்டரியின் ஐ.நா. உறவுக்கான விழாவின் நிறைவுக் கொண்டாட்டம் மாநாட்டுக்கு முன்பாக ஹவாய் தீவு ஹோனலூலுவில் நடைபெறும். தற்போது 2019-20ம் ஆண்டில் ஆற்றும் சேவைகள் 2020 ஜூன் 30ம் தேதி மதிப்பிடப்படாது. மாறாக, 2025 ஜூன் 30 அல்லது 2030 ஜூன் 30 ஆகிய தேதிகளில் தான் தெரியும்.

**தி ரோட்டேரியன்:** ரோட்டரிக்கு எப்போது ஒரு பெண் தலைவராவார்?

**மலோனி:** அடுத்த ஐந்தாண்டுகளில் அது நடைபெறும் என நினைக்கிறேன். மாவட்ட ரோட்டரி ஆளுநராக வேண்டுமானால், ரோட்டரி சங்கத் தலைவராக இருக்க வேண்டும் என்பது ரோட்டரியில் உள்ள நடைமுறை. RI தலைவராக வரவேண்டுமானால், அதன் இயக்குநராக இருக்கவேண்டும். தற்போது பெண்கள் இத்தகைய



RIDE *கமல் சங்வி மற்றும்* RIPE *மார்க் மலோனி கொல்கத்தா மகாநகர் சங்க உறுப்பினர்களுடன்.*

பதவிகளில் இருந்து வருகிறார்கள். இயக்கு நர்களாக பல பெண்கள் இருந்திருக் கிறார்கள். அவர்கள் பல பதவிகளை வகித்து போதிய அனுபவத்தை ஈட்டியுள்ளனர். இவையெல்லாம் ஆண்டுதோறும் ஒரு பெண்ணை நியமிக்கும் வழியை ஏற்படுத்துகிறது.

ரோட்டரி பணியிடங்களில் பெண்கள் இருக்க வேண்டும் என்பதில் எனக்கு மிகுந்த அக்கறை உண்டு. எனது மாநாட்டுக் குழுவின் தலைவராக ஒரு பெண்ணை நியமித்திருக்கிறேன். TRF அறக்கட்டளைத் தலைமைக்கு இன்னொரு பெண்ணை நியமித்துள் ளேன். அடுத்த ஆண்டு இயக்குநர்கள் போர்டில் இரு பெண்கள் நியமிக்கப்பட இருக்கின்றனர். அதையடுத்த ஆண்டில் ஐந்து பேர் வருவர்.

**தி ரோட்டேரியன்:** தலைவரின் கோட் பாட்டை எப்படி வகுத்தீர்கள்? ரோட்டரி தலைவருக்கான டையைத் தேர்ந்தெடுப்பதை விட அது சிரமமாக இருந்ததா?

**மலோனி:** இல்லை. கோட்பாட்டைத் தெரிவு செய்வது எளிதாக இருந்தது.

**தி ரோட்டேரியன்:** ‘உலகை இணைக்கிறது ரோட்டரி ‘(Rotary Connects the World) என்ற கருத்தியல் குறித்துக் கூறுங்களேன்

**மலோனி:** ரோட்டரி என்பதே அனைத்து தரப்பினரையும் இணைப் பதாகும். ரோட்டரி சங்கத்தில் இணையும் போது, சமுதாயத்தில் உள்ள பல தரப்பட்டவர்களுடன் இணைகிறீர்கள். உலக சமுதாயத்திற்குச் சேவை புரிவதற்காக ரோட்டரி உங்களையும் ரோட்டரி சங்கங்கள், ரோட்டரி மாவட்ட அமைப்புகள் ஆகியவற்றையும் இணைக்கிறது. TRFன் அடிப்படையே உலகின் ஒரு பகுதியில் உள்ள ரோட்டரி அமைப்புகளையும் இன்னொரு பகுதியில் உள்ள ரோட்டரி அமைப்புகளையும் இணைப்பதுதான். அதைப் போல் மனிதாபிமானப் பணிகளைச் செயல்படுத்துவதற்காக வளர்ந்த நாடுகளில் உள்ள ரோட்டரி சங்கங்களை வளரும் நாடுகளில் உள்ள ரோட்டரிகளுடன் இணைப்பதும் அதைப் போலத்தான். ரோட்டரி அமைப்புகளின் மாநாடுகள் மற்றும் சர்வதேச கூட்டங்கள் அற்புதமான நிகழ்வுகளாகும். ஆண்டுதோறும் வேறெங்கும் எப்போதும் காண முடியாத மக்களைச் சந்திப்பீர்கள். ‘ரோட்டரி, உண்மையான சமூக இணைவு‘ (Rotary, the original social network) என்ற முன்னோட்டத்தைப் பார்த்திருப்பீர்கள். அது உண்மை.

**தி ரோட்டேரியன்:** ரோட்டரியின் அமைதிக்கான முயற்சி என்பது சரியானதா? அல்லது பயனில்லாத வேலையா?

**மலோனி:** அது தக்க காரணத்துடன் கூடிய ஆர்வம்தான். என் மாமனார் கில்மர் பிளாக்பர்ன், உலகில் அமைதி நிலவுமேயானால், அது ரோட்டரியால்தான் சாத்தியம் என நம்புகிறேன் என்று என் மனைவி கேயிடம் 15 ஆண்டுகளுக்கு முன்பு கூறியுள்ளார். அமைதியான உலகை எட்டுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. ஏசு கிறிஸ்து பிறந்தபோது, அமைதியான ரோமாபுரியை உருவாக்க முடியும் என யாராவது கருதினார்களா? இல்லையே, ஆனால், அமைதியைக் கொண்டுவருவதற்கு நம்மால் இயலும். நமது அமைதி முயற்சி த் திட்டங்களில் நம் தலைவர்களில் ஈடுபடச் செய்வது உள்ளிட்ட செயல்பாடுகள் ரோமாபுரி அமைதிக் காலத்தை உருவாக்க முடியும்.

**தி ரோட்டேரியன்:** 25 வயதிலேயே ரோட்டரியில் இணைந்துவிட்டீர்களே, ஏன்?

**மலோனி:** ரோட்டரி மூலம் எதையாவது செய்ய முடியும் என்பதால் இணைந்தேன். டெக்காடரில் புதிய வழக்குரைஞராக இருந்தேன். மற்ற இளைஞர்களைப் போல ஏதாவது குடிமை அமைப்பில் சேரவேண்டும் என்பதால், நான் இணைந்தேன்.

**ரோட்டரி இதழ்:** ஏன் ரோட்டரியில் இணைந்தீர்கள்?

**மலோனி:** என் மாமனார் டெட்டராய்டில் உள்ள கிவானிஸ் (Kiwanis) என்ற தன்னார்வ சமூக அமைப்பில் இருந்தார். அங்கு அவர் அவரது வழக்கு அமைப்பின் பிரதிநிதியாக அங்கிருந்தார். அதைப் போல் ரோட்டரிக்கும் ஒரு பிரதிநிதி தேவைப்பட்டது.

**தி ரோட்டேரியன்:** ஏன்? எது உங்களை இத்தனை ஆண்டுகள் ரோட்டரியில் இணைத்து வைத்திருக்கிறது?

**மலோனி:** முதலாவது, உள்ளூர் சங்கத்தில் உள்ள நட்பு, இணைப்பு ஒரு காரணம். அதையடுத்து, மாவட்டத்தில் உள்ள நட்பு, சர்வ தேச நட்பு. இரண்டாவது ரோட்டரி யில் ஆரம்ப காலத்திலிருந்தே, நானும் மனைவி கேயும் ஏதாவது பொறுப்புகளில் ஈடுபட்டு வந்தோம். நான் 20 வயதுக்கு முன்பே 4H அமைப்பைச் சார்ந்தவன், 4H கூட்டமைப்பின் தலைவராகவும் இருந்திருக்கிறேன். தேசிய பீட்டா சங்கத்தின் மாநில அலுவலராகவும் இருந்திருக்கிறேன். இலினாய்ஸ் பெல்லிவில்லியில் ரோமன் கேத்தலிக் திருச்சபையில் இளைஞர் பிரிவுத் தலைவராகவும் இருந்திருக்கிறேன். நான் கால்பந்தாட்டக் குழுவின் மேலாளராக இருந்தேன். கண்ணை மூடிக்கொண்டு எந்த அமைப்பிலும் இணைவதில்லை. எல்லாவற்றையும் திட்டமிட்டுத்தான் அமைப்புகளில் இணைகிறேன். ரோட்டரியில் 1980ம் ஆண்டு சேர்ந்தேன். ஓராண்டு கழித்து, திட்டக் குழுவில் (Program Committee) என்னை இணைத்தனர். ஓராண்டு கழித்து அதன் தலைவர் ஆனேன். மூன்றாண்டு கழித்து போர்டில் இணைந்தேன். இதனிடையில் எனக்கான நேரத்தை இழந்தேன். எது எப்படியோ ரோட்டரி இல்லாத வாழ்க்கையை என்னால் கற்பனை செய்து பார்க்க முடியாது.

© தி ரோட்டேரியன்.



கிரண் ஜெஹ்ரா

# கர்நாடக மாநிலம் பைலக்குப்பே என்ற திபெத் உலகம்!

கிரண் ஜெஹ்ரா

மைசூருக்கு 84 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது அந்த அழகான ஊர். இரு புறமும் நெல் வயல், சோள வயல் என்று பச்சை பசேலென்று காட்சி தர, குறுகிய சாலை வழியாகச் செல்லும்போது, பவுத்த மந்திரங்கள் எழுதப்பட்ட கொடிகள் பறந்து, பைலகுப்பே என்ற திபெத் குடியிருப்பைப் பறை சாற்றுகிறது. அந்தக் கொடிகளில் தெய்வத்துக்கான பிரார்த்தனை இடம்பெறவில்லை. அப்படி ஒரு தவறான எண்ணம் பலரிடம் உள்ளது. உண்மையில், திபெத்தியர்களான நாங்கள் கொடிகளில் எழுதப்பட்டுள்ள மந்திரங்களும் பிரார்த்தனைகளும் காற்றில் நல்லெண்ணத்தையும் அமைதியையும் இந்த மண்ணில் பரப்புகின்றன என்கிறார் லாஸா பைலோகுப்பே ரோட்டரி சங்கத்தின் (RID 3181) செயலாளர் ஜெலெக் டென்சின் லா என்ற திபெத்திய பெண்மணி.

அங்கு அமைந்துள்ள நாம்ட்ரோலிங் மடத்திற்கு (Namdroling Monastery) அழைத்துச் செல்கிறார். (இந்த மடம் திபெத்திய பவுத்தக் கோட்பாடான நியிங்மபாவைப் போதிக்கிறது). இந்த ரோட்டரி சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களும் திபெத்தியர் என்பது சுவையான தகவல்.

இதுதான் பைலகுப்பேயின் இதயமாகவும் ஆன்மாகவும் அமைந்து ள்ளது என்கிறார் அவர். பொற்கோயில் என்றும் குறிப்பிடப்படும் இம்மடத்தில் காவிப் பட்டை அணிந்து வரும் பவுத்த துறவியரைத்



தலைவணங்குகிறார் டென்சின் லா. அவர்களது எளிமை வியப்பை ஏற்படுத்துகிறது. என்ன வகையான வாழ்க்கையை அவர்கள் வாழ்கிறார்கள் என்ற எண்ணம் தோன்றுகிறது. அந்த மடத்தில் எல்லோருமே ஆண்கள் அல்ல. இங்கு 5000 துறவியரும் கன்னி மாரும் வசிக்கிறார்கள். இவர்கள் சீனாவிலிருந்து வெளியேறி தஞ்சம் புகுந்தவர்கள். பலர் தங்களது குடும்பங்களை விட்டு வேறு வழியின்றி வெளியேறியவர்கள். பலருக்குக் குடும்பங்கள் இல்லை.

மடத்தின் உள்ளே அமைந்திருக்கும் நியிங்மபா நிறுவனத்தில் (Nyingma Institute) ஏராளமான கன்னிமார்கள் குடியிருக்கிறார்கள். இத்தகைய வழக்கம் சில மடங்களில் மட்டுமே நடைமுறையில் இருக்கிறது.

தர்மசாலாவை அடுத்து இந்தியாவில் இரண்டாவது நாடு கடந்த திபெத்திய அரசாங்கத்தின் பவுத்த மடம் இதுதான். கிழக்கோ மேற்கோ பைலக்குப்பேதான் சிறந்தது என்று கூறும் டென்சினின் தாத்தா பாட்டிகள் அவர்களது நாட்டிலிருந்து விரட்டி யடிக்கப்பட்டவர்கள். இப்போதைக்கு இதுதான் எங்களது தாயகம். இதை விட வேறு எதையும் கேட்க முடியாது. இங்கே சுதந்திரமாக எங்களது மத வாழ்க்கையைக் கடைப்பிடித்து வருகிறோம். எங்கள் குழந்தைகளையும் சீனர்களாக அல்லாமல் திபெத்தியர்களாக வளர்த்து வருகிறோம் என்றார்.

பொற்கோயிலைச் சென்றடையும் பாதை அழகாக அமைக்கப்பட் டுள்ளது. இரு புறமும் பச்சைப் பசேலென்று புல்வெளி அழகுற ஜொலிக்கிறது. பொற்கோயில் உள்ளே கௌதம புத்தரின் பொற் சிலை தெய்வீகமாக அமைந்துள்ளது. புத்தரின் இரு புறமும் கி.பி. 8ம் நூற்றாண்டைச் சேர்ந்த திபெத்திய பவுத்த ஞானியான பத்மசம்பவர், இரண்டாவது புத்தர் எனக் கருதப்படும் அமிதயுஸ் ஆகியோர் உயர்ந்த பீடத்தில் வீற்றிருக் கிறார்கள். அமிதயுஸ் பூடான் திபெத்தில் பவுத்தம் பரப்பியவர். கோயிலில் அமைக்கப்பட்டுள்ள தூண்கள் சிவப்பு நிறத்தில் உள்ளன. உத்தரத்தில் தங்கா ஓவியங்கள் வரை யப்பட்டுள்ளன. ராட்சஸக் கதவுகள், அவற்றின் குமிழிகளில் எம்பிராய்டரி செய்யப்பட்ட குஞ்சங்கள் தொங்கவிடப்பட்டுள்ளன. இவை பாரம்பரிய அழகோடு திகழ்கின்றன.

சுற்றுலாப் பயணிகளின் சத்தங்களை மறந்து பல துறவியர் ஆழமாக மந்திரம் ஓதிக் கொண்டிருந்தனர். அவர்களுடன் பலர் செல்ஃபி எடுத்துக் கொண்டனர். பலர் அவர்களைப் புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர். டென்சின் அங்குள்ள பிரார்த்தனை சக்கரத்தைக் காட்டி, ஏதாவது வேண்டிக் கொண்டு இதைச் சுற்றுங்கள். அது பலிக்கும் என்றார். துறவியர் சீராக ஓதிக் கொண்டிருந்த மந்திர ஒலி நீண்ட நேரம் அதிர் வலையை ஏற்படுத்தியது.

அங்குள்ள ஓர் அங்காடியில் பீங்கான் கலைப் பொருட்கள் இருந்தன. வண்ணமயமான கைவினைப் பொருட்கள் , புல்லாங்குழல் உள்ளிட்ட இசைக் கருவிகள் விற்பனைக்கு இருந்தன. அவற்றை வாங்கி யாருக்காவது அன்பளிப்பாக வழங்கலாம். மடாலயத்தில் உள்ள உணவகத்தில் துறவியர் உணவு உண்கிறார்கள். சுவையான உணவு கிடைக்கிறது. மலிவான விலையில் இங்கு சுற்றுலாப் பயணிகளும் உணவு அருந்தலாம். துப்கா நூடுல்ஸ் சூப் (Thukpa Noodle Soup), காய்கறி, டிங்மோ (Tingmo) எனப்படும் வேகவைத்த ரொட்டி என சுவையான உணவு வகைகள் கிடைக்கின்றன. சமைக்கப்படும் காய்கறிகள் அனைத்தும் திபெத்தியர்களால் இயற்கை விவசாயத்தில் பயிரிடப்பட்டவை.




கிரண் ஜெஹ்ரா



நாமட்ரோலிங் மடத்தில் புத்தபிட்சுக்கள்.

இந்தக் காய்கறிகள் நமது முன்னோர்கள் இமயமலையில் பயிரிட்டு வளர்த்தவை. அதனால், திபெத்திய பவுத்தர்களுக்கு இது நீடித்த காலம் வருவது. இயற்கை முறை விவசாயம் நாம் கைவிட்ட நமது பண்டைக்காலத்துக்கு நம்மை இட்டுச் செல்கிறது என்று டென்சின் கூறுகிறார். பைலக்குப்பேயின் வடக்கே உள்ள மண்ட்காட் பகுதியினர் திபெத்திய இயற்கை விவசாயத்துக் கான காப்புரிமையை அமெரிக்கா, ஐரோப்பிய யூனியனிடமிருந்து பெற்றிருக்கிறார்கள் என்றும் டென்சின் கூறினார். இந்தியாவில் மொத்தம் 27000 ஏக்கர் பரப்பு விவசாய நிலத்தில் திபெத்தியர் தொழிலாளர் களாகப் பணிபுரிகின்றனர். 4 ஆயிரம் ஏக்கர் நிலப் பகுதி இயற்கை விவசாயத்துக்கான முத்திரை பெற்றுள்ளது.

லாஸா பைலகுப்பே ரோட்டரி சங்கம் அப் பகுதியில் குடிநீர் வசதி, பள்ளி மாணவர்களுக்குச் சீருடைகள் வழங்கி வருகிறது. கிராமங்களில் மருத்துவ முகாம்கள் நடத்துகிறது. தங்களது பகுதிக்கான சமூகப் பணிகள் குறித்து டென்சினிடம் கேட்டபோது, இங்கு வந்து குடியேறியதிலிருந்து ஏராளமான மேம்பாட்டுப் பணிகளை நிறைவேற்றி வந்துள்ளோம். நாங்களும் தன்னிறைவு பெற்று விட்டோம். அதனால் தான் நாங்கள் பிறருக்கு உதவி வருகிறோம் என்றார்.■

# RI தெற்காசிய அலுவலக அறிவிப்பு

### RI டாலர் மாற்று விகிதம்

ஜூலை 1, 2019 முதல் ரோட்டரியின் டாலர் மாற்று விகிதம் அப்போதைய சந்தை விகிதத்தை ஒட்டியே கருதப்படும். மாற்று விகிதத்தை இப்பொழுது போல் முன் கூட்டியே அறிவிக்கப்படமாட்டாது. இதனை https://my.rotary.org/en/exchange-rates என்னும் இணையதளத்தில் அறியலாம்.

### பங்களிப்புகள் மறுவகைப்படுத்தல் பற்றிய TRFன் வழிகாட்டுதல்கள்

கடந்த ரோட்டரி ஆண்டின் பங்களிப்புகளை மறுவகைபடுத்த TRF ஏற்காது (உ.ம்.) சென்ற வருடத்தில் செய்த ஆண்டு நன்கொடைகள் என்டோமண்டிற்கோ; போலியோ நிதியை ஆண்டு நன்கொடையிற்கோ மாற்ற இயலாது. நன்கொடைகள் 90 நாட்களுக்குள் மட்டுமே மாற்றலாம்.

### DDF நிதிகள் போலியோ ஒழிப்பிற்கு மாற்றுங்கள்

நம் நாட்டில் பல மாவட்டங்கள் DDFஐ உபயோகப்படுத்தாமல் வைத்துள்ளன. அவ்வாறு உபயோகபடுத்தாத நிதியை போலியோ நிதிக்கு மாற்றுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். ஒவ்வொரு $ 1000 DDF நிதியும் $ 4500 ஆக போலியோ ஒழிப்பு முயற்சிக்கு பயன்படும்.

### உறுப்பினர் சேர்க்கை

சங்கச் செயலாளர்கள் புதிய உறுப்பினர் சேர்க்கை, உறுப்பினர் நீக்கம் ஆகியவற்றை 30 நாட்களுக்குள் My Rotary இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும் அப்போது தான் அந்த ரோட்டரி சங்கத்திற்கு சரியான இன்வாய்ஸ் கிடைக்கப் பெறும்.

ரோட்டரி சங்கங்கள் தங்கள் உறுப்பினர் பட்டியலை RISAO அலுவலகத்துடன் சரியாக வைக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றன. இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய இயலாத சங்கங்கள், உறுப்பினர் பதிவேட்டை My Rotary யிலிருந்து பதிவிறக்கம் செய்து ஜூன் 25, 2019 தேதிக்குள் RISAO அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். மேலும் தகவலுக்கு https://my.rotary.org/en பார்க்கவும்

### பெருநிறுவனங்கள் நிதி

ரோட்டரி சங்கங்கள் பெருநிறுவனங்களை அணுகி அவர்களின் CSR நிதியுடன் நலத் திட்டங்கள் செய்ய ஊக்கவிக்கப்படு கிறார்கள். https://www.csr.gov.in என்னும் இணைய தளத்தில் இத்தகைய பெரு நிறுவனங்களைப் பற்றிய தகவல் அறியலாம்.■

### Rotary Year 2018–19 Top 5 Giving Districts from South Asia as of April 2019

| Zone | District | Rank in South Asia |
|---|---|---|
| 5 | 3190 | 1 |
| 4 | 3141 | 2 |
| 4 | 3131 | 3 |
| 4 | 3142 | 4 |
| 5 | 3150 | 5 |

### Rotary Year 2018–19 Major Gifts as of April 2019

| Zone | Directed Gift | Endowment Gift | CSR Gift |
|---|---|---|---|
| 4 & 6A | 13 | 11 | 15 |
| 5 | 9 | 16 | 3 |
| Total | 22 | 27 | 18 |

# கிறிஸ் சித்தலே, தட்டம்மை ஒழிப்பு போராளி, மறைந்தார்!

ரஷீதா பகத்

அனைவராலும் கிறிஸ் (Kris) என்று அன்போடு அழைக்கப்படும் மிக மூத்த ரோட்டரி உறுப்பினர் S L சித்தலே மறைந்துவிட்டார். அவரது மறைவினால் சென்னை ரோட்டரி சங்கத்தின் ஒரு சகாப்தம் நிறைவடைந்து விட்டது. அவர் ரோட்டரியின் சேவையில் 54 ஆண்டுகள் அயறாது ஈடுபட்டார்.

போலியோவுக்கு எதிராக மிகப் பெரிய வெற்றி பெற்ற இயக்கம் இந்தியாவில் சென்னை ரோட்டரி சங்கத்தில் 1989ம் ஆண்டுதான் தொடங்கியது என்பதை இந்தியாவில் உள்ள பெரும்பாலான ரோட்டரி உறுப்பினர்கள் அறிவர். இது குறித்து சித்தலே 2015ம் ஆண்டு ரோட்டரி நியூஸ் இதழுக்கு அளித்த பேட்டியில், RI தலைவர் ஹ்யூக் ஆர்ச்சர் ஐந்தாண்டுகளுக்கு 46 லட்சம் டாலர் (சுமார் ரூ.32 கோடி) அளிக்கப்படும் என்று கூறினார் என்ற தகவலைத் தெரிவித்துள்ளார்.


1980ம் ஆண்டுகளில் தி இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழின் நிருபராக சென்னை ரோட்டரி சங்கம் நடத்திய போலியோ சொட்டு மருந்து முகாம்கள் குறித்து செய்திகள் சேகரிப்பேன். அப்போது சித்தலேவை சந்திப்பேன். நேர்த்தியாக உடை உடுத்தியபடி தென்படும் அவர் குழந்தைகளின் ஆரோக்கியம் குறித்து மிகுந்த அக்கறையுடன் பணியாற்றி வந்தார். குழந்தைகளைத் தாக்கும் நோய்களிலிருந்து அவர்களைக் காப்பாற்றும் பல நிகழ்வுகளைச் செய்திகளாகப் பதிவு செய்துள்ளேன்.

சித்தலே சென்னை ரோட்டரி சங்கத்தில் 1965ம் ஆண்டு இணைந்தார். சேவை மனம் கொண்ட உன்னதமான அந்த மனிதர் ரவுண்ட் டேபிள் இயக்கத்திலும் சேவை புரிந்தார். 1979ம் ஆண்டு ரோட்டரி சங்கம் பொன்விழாவைக் கொண்டாடியபோது, அதன் தலைவராக இருந்த V சிதம்பரம் காலம் காலமாக நிலைத்து நிற்கக் கூடிய ஒரு மகத்தான திட்டத்தைத் தயாரிக்கும் படி ரோட்டரி உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார். அது சர்வதேச குழந்தைகள் ஆண்டு என்பதால் குழந்தை நலம் தொடர்பான திட்டம் யோசிக்கப்பட்டது. அதையடுத்து குழந்தைகளின் உயிரைப் பறிக்கும் தட்டம்மை ஒழிப்பு இயக்கத்தை மேற்கொள்வது என ரோட்டரி சங்கத்தினர் முடிவு செய்தனர். அதற்கு கனடா நாட்டின்



S L *சித்தலே*

PRIP *இராஜேந்திர சாபுவுடன் S L சித்தலே.*



விட்பை ரோட்டரி சங்கம் இந்திய ரோட்டரிக்கு 65 ஆயிரம் சொட்டு மருந்துகளை அளிக்க முன்வந்தது.

இது நுங்கம்பாக்கம், மயிலாப்பூரில் உள்ள குழந்தைகளுக்கு வேண்டுமானால் போதும். சென்னை நகரம் முழுமைக்கும் போதாது என்று சித்தலே கூறினார். அவரது முயற்சியால் சென்னை ரோட்டரி சங்கத்திற்கு முழுமையாகப் பலன் கிடைத்தது. சித்தலே நேரடியாகத் தொண்டராகக் களத்தில் இறங்கினார். கனடா, விட்பை ரோட்டரி சங்கத்தின் நீண்ட நாள் உறுப்பினரான Dr கென் ஹாப்ஸ் சித்தலே நண்பர் ஆவார். ஹாப்ஸ் சென்னை ரோட்டரி உறுப்பினர்களுடன் நெருக்கமானார். நோய்த் தடுப்பு முகாம் தொடர்பாக முப்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து சென்னைக்கு வருகை புரிந்தார். கிருமியியல் மருத்துவ சிகிச்சை நிபுணரும் ரோட்டரி முன்னாள் தலைவருமான டாக்டர் ஜேகப் ஜான் இந்தக் குழுவில் இணைந்து செயல்பட்டார். அதையடுத்து தட்டம்மை ஒழிப்பு இயக்கம் வேகமாகச் செயல்பட்டது.


சித்தலே தலைமையில் ரோட்டரி உறுப்பினர்கள் அரசின் வரிச் சலுகைகள் பெறுவதற்காக கடுமையாக உழைத்தனர். மருந்துகளைத் தருவிப்பதற்காக ஐந்து ஆண்டுகளுக்கு விமானக் கட்டணத்தின் விலக்கு பெற்றனர். சொட்டு மருந்து கொடுப்பதற்கு அந்தக் காலத்தில் ரூ.40 லட்சம் தேவைப்பட்டது. அதையும் திரட்டி சமாளித்தார் சித்தலே.

## போலியோ சொட்டு மருந்து

இதனிடையில் 1979ம் ஆண்டில் பிலிப்பின்ஸ் நாட்டில் ரோட்டரி இன்டர்நேஷனல் போலியோ ஒழிப்பு இயக்கத்தைத் தொடங்கியது. பல இடங்களில் அரசின் திட்டமாக இருந்த போலியோ ஒழிப்பில் இந்தியாவில் அது ரோட்டரியின் இயக்கமாகவே முழுக்க அமைந்திருந்தது. அதிலும் தமிழ்நாடுதான் முழுமையாகப் போலியோவை ஒழித்த மாநிலமாகத் திகழ்கிறது என்று சித்தலே அந்தப் பேட்டியில் நினைவுகூர்ந்தார்.

அந்தப் பேட்டியில், அவரிடம், ஐம்பது ஆண்டுகால ரோட்டரி இயக்கப் பணியில் எது உங்களைக் கவர்ந்தது? என்று கேட்டேன். அதற்குப் புன்னகை பூத்த அவர், குழுவை அமைப்பது, சிறந்த நண்பர்களைப் பெற்றது, முகாம்களுக்கு அடிக்கடி சென்றது, பலனாளிகளின் பெயர்களைச் சேகரிப்பது முதல் கணக்கு வழக்குகளைப் பராமரிப்பது வரை எல்லாப் பணிகளையும் நிறைவேற்றியது.. இப்படி ஏராளமாகச் சொல்லிக் கொண்டே போகலாம் என்றார்.

சித்தலே மறைவுக்குப் பலர் இரங்கல் தெரிவிக்கிறார்கள். RI முன்னாள் தலைவர் ராஜேந்திர சாபு, நான் சித்தலையை கடந்த சில ஆண்டுகளாக சந்திக்கவில்லை என்றாலும் அவருடனான தொடர்பு, அவரது நேர்மை, சேவை மனப் பான்மை ஆகியவை என் மனதில் பசுமையாக இருக்கிறது. தட்டம்மை ஒழிப்பு இயக்கத்தில் அவர் செலுத்திய ஈடுபாடு மறக்க முடியாதது. ஆலயத் திருக்குளங்களைத் தூய்மைப் படுத்துவது, தொழிற்பயிற்சி மையங்களை நடத்தியது போன்ற பல சமூகப் பணிகளை அவர் தொடங்கி செயல்படுத்தினார். அவர் செயல் வீரராகவும் சேவை மனம் கொண்ட ரோட்டரி உறுப்பினராகவுமே இருந்தார். பதவிக்கு ஆசைப்பட்டதில்லை. மாவட்ட ஆளுநர் பதவி அவரைத் தேடிவந்தபோதும் அதை




RID 323ல் *போலியோ ஒழிப்பு கூட்டத்தில்* S L *சித்தலே பேசுகிறார். அப்போதைய தமிழ்நாடு சுகாதார அமைச்சர்* Dr H V *ஹண்டே (இடதிலிருந்து இரண்டாவதாக) உடன் உள்ளார்.*

புன்னகையுடன் மறுத்திருக்கிறார். ‘தன்னை விஞ்சிய சேவை’ (Service above Self) என்ற ரோட்டரியின் குறிக்கோளை பாரம்பரியமாக விட்டுச் சென்றிருக்கிறார் என்றார்.

சென்னை ரோட்டரி சங்கத்தின் பல உறுப்பினர்கள் அவரது மறைவு குறித்து அறிந்து கண் கலங்கினர். அதன் தலைவர் ரஞ்சித் பிரதாப், அவர் சென்னை ரோட்டரி சங்கத்தினரைப் பொறுத்த வரையில் போலியோ ஒழிப்பு இயக்கத்தின் தந்தையைப் போன்றவர் அவர். மிகச் சிறந்த கண்ணியவான். தனிப்பட்ட ஈடுபாடு காட்டுவதில் பிற ரோட்டரி உறுப்பினர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர். எவ்வளவு வேலைகள் இருந்தாலும், ஏழைகள், நலிந்தோர்களுக்கு உதவ நேரம் ஒதுக்க வேண்டும் என்று ரோட்டரி உறுப்பினர்களுக்கு அறிவுரை கூறுவார். உதவ வேண்டும் என்ற எண்ணம் இருந்தால், நேரம் தானாகவே கிடைத்து விடும். அப்படி ஒரு உத்வேகத்தை தூண்டும் அற்புதமான மனிதர் என்று தன் இரங்கலைத் தெரிவித்தார்.

சித்தலேவை பிரதாப் 1964ம் ஆண்டு முதல் அறிவார். என் தந்தை M R பிரதாப் ஒர்த் டிரஸ்ட் (Worth Trust) என்ற அமைப்பில் சேரும்படி சித்தலேவே கேட்டுக் கொண்டார். ஒர்த் டிரஸ்ட் அமைப்பு மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக இயங்குகிறது. அதிலும் ஈடுபட்டு அளப்பரிய பணியை சித்தலே ஆற்றியுள்ளார் என்றார் அவர்.

சித்தலே அடுத்து சென்னை ரோட்டரி சங்கத்தின் தலைவராக 1984ம் ஆண்டு பொறுபேற்ற மாவட்ட முன்னாள் ஆளுநர் M நடராஜன், சித்தலே மிகச் சிறந்த ரொட்டேரியன். அற்புதமான நண்பர். போலியோ ஒழிப்பில் அவருடன் தொடக்க காலத்தில் நெருங்கிப் பணியாற்றியுள்ளேன். நான் மருத்துவம் சார்ந்த பணிகளை மேற்கொள்வேன். அவர் ரோட்டரி முக்கிய குழுவினருடன் இணைந்து நிர்வாகம், நிதி ஆகியவற்றைப் பார்த்துக் கொள்வார். விருந்தோம்பலில் சிறந்தவர். அர்ப்பணிப்புடன் செயல்படுவார். கண்ணியமானவர், எப்போதாவது கோபம் வந்தாலும் உண்மையைப் பேசத் தயங்காதவர் என்றார்.

2015ம் ஆண்டு ரோட்டரி நியூஸ் இதழுக்கு அவர் அளித்த பேட்டியில், இன்றைய ரோட்டரி இயக்கத்தினர் ஆழ்ந்து சிந்தித்து செயல்படுவதற்கான பல சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்டார்.

அந்த நேர்காணலில், ரோட்டரியில் ஐம்பது ஆண்டுகளாக இருந்த உங்களை எது மாற்றியது? என்று கேட்டதற்கு, சிறிது சிந்தித்த படி அவர், அந்தக் காலத்தில் ஈடுபாடு, நட்பு, பங்களிப்பு ஆகியவை சிறப்பாக இருந்தது எனக் கருதுகிறேன். ரோட்டரி மேற்கொள்ளும் எந்தத் திட்டத்திலும் ஆத்மார்த்தமாக, ஆர்வத்தோடு ஈடுபடுவோம். இன்றைக்கு காசோலை அறச்செயலாக (Cheque-book Charity) அதாவது நன்கொடை அளித்தால் போதும் என்பது போல் ஆகிவிட்டதோ என அஞ்சுகிறேன். தனிப்பட்ட ஈடுபாடு அதிகமில்லை என்றார்.■

RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் தலைவர் D ரவிசங்கர் மற்றும் அவர் மனைவி பவோலா இவான்ஸ்டனில் AKS உறுப்பினர்களாக கவுரவிக்கப்பட்டனர்.







*பவோலா மற்றும் ரவிசங்கர் TRF அறங்காவலர் ரான் பர்ட்டனுடன்.*

# பழங்குடியினர்களுக்கு கனவு இல்லங்கள்

V முத்துகுமரன்



புகைப்படங்கள்: V முத்துகுமரன்

PDG *அபிராமி ராமநாதன், விநோத் சரோகி, திட்டப்பணி செயலாளர்* P B *ரவிக்குமார் கிராமத்தினருடன்.*

வாழ்வாதாரத்திற்கு எதுவுமே இல்லாத கிராமப்புறத்திலும், உணவுக்கே திண்டாடும் பழங்குடியின மக்கள் வசிக்கும் இடத்திலும் ஒரு ஹேப்பி வில்லேஜ் அமைப்பது தான் அவரின் கனவு. விரைவிலேயே தன் ரோட்டரி நண்பர்களில் ஒருவரான RID 3231 RC செங்கல்பட்டு ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த A G D துரைராஜ் என்பவர், திரைப்பட விநியோகஸ்தரும் அபிராமி மெகாமாலின் உரிமை யாளருமான PDG அபிராமி ராமநாதன் அவர்களை காஞ்சிபுரம் மாவட்டம் திருப்போரூர் பஞ்சாயத்து யூனியனில் உள்ள குயில் குப்பம் கிராமத்திற்குக் கூட்டிச் சென்றார்.

2017ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இந்த குக்கிராமத்திற்கு சென்று வந்த பின்னர், குயில் குப்பத்தில் வீடு கட்டுவதற்கான ஒரு திட்டப்பணிக்கு மாவட்ட ஆட்சியரைத் தொடர்பு கொண்டேன். அந்த வருடம் மே மாதத்தில் அரசாங்க அனுமதி கிடைத்தவுடன், வெகுவிரைவிலேயே இரண்டு கட்டமாக 64 வீடுகள் கட்டுவதற்கான ஒரு பூமி பூஜையை 01 ஜூலை 2018 அன்று RC மெட்ராஸ் சென்ட்ரல் (RCMC), RID 3232 சங்கம் அந்த இடத்தில் நடத்தியது, என்றார் ராமநாதன்.

முதல் கட்டமாக 600 சதுர அடி பரப்பில் கான்கிரீட் மேற்கூரை உள்ள 2BHK வடிவில் 32 வீடுகள் கட்டப்பட்டு ஜூன் 23 அன்று திறப்பு விழாவிற்குத் தயாராக இருக்கிறது, இதில் ஆச்சர்யமான விஷயம் என்னவென்றால், கேஸ் ஸ்டவ், ஃபிரிட்ஜ், வெட் கிரைண்டர், மிக்ஸி, டிவி, இரும்பு அலமாரி, சமையல் பாத்திரங்கள் மற்றும் தலையணைகளுடன் இரண்டு மெத்தை, இது தவிர சீலிங் ஃபேன் மற்றும் டியூப்லைட் உட்பட அனைத்து வித மின்சார வசதிகள் கொண்டதாக அனைத்து வீடுகளும் உருவாகிறது, என்று சொல் கிறார் திட்டப்பணி முதன்மை மேற்பார்வையாளர் V S ராகவன்.

### ஒரு மாபெரும் பொறுப்பு

இதுவரை 33 மறுவிற்பனை செய்ய முடியாத பட்டாக்கள் பெறப்பட்டுள்ளது, மற்றும் 3.5

செண்ட் என்று மதிப்பிடப்பட்ட உரிமைப் பத்திரங்கள், விவசாயம் மற்றும் கட்டுமானத் தொழில் செய்கிற பழங்குடியினர் குடும்பங்களின் தலைவர்களிடம் ஒப்படைக்கப்படும். RC ஈகிள் டவுன் திருக்கழுக்குன்றம், செங்கல்பட்டு, மறைமலை நகர், மாமண்டூர், காஞ்சிபுரம் டெம்பிள் சிட்டி மற்றும் மகேந்திரா இண்டஸ்ட்ரீயல் சிட்டி போன்ற ஆறு சங்கங் களைத் தேர்ந்தெடுத்துள்ளோம், இவர்கள் இந்த வீடுகளைப் பராமரிக்க பழங்குடியினர்களுக்குக் கற்றுக் கொடுப்பார்கள், என்று சொல்கிறார் திட்டப்பணி செயலாளர் P B ரவிக்குமார்.

சுகாதாரம் மற்றும் துப்புரவு செயல்பாடுகள் குறித்து பழங் குடியினருக்கு விழிப்புணர்வு வழங்குவது தொடர்பாக வழக்கமான மருத்துவ முகாம்களை இந்த ஆறு சங்கங்கள் நடத்துகிறது, என்று கூறினார், RC மெட்ராஸ் சென்ட்ரல் சங்கத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் மனோஜ் ராஜன்.



*ஓர் பழங்குடி இனத்தவர் தன் ஓலைக் குடிசையில்.*

### நிதித் திரட்சி

முக்கிய நன்கொடையாளர் ராமநாதன் ரூ.65 லட்சம் டெர்ம் கிஃப்ட் உட்பட ரூ.2.5 கோடி நன்கொடை அளித்துள்ளார். திட்டப்பணிக்கு RCMC சங்கம் தங்கள் உறுப்பினர்களின் மூலம் ரூ.60 லட்சத்தையும், சுற்று வட்டாரத்தில் இருக்கும் 25 ரோட்டரி சங்கங்கள் தங்கள் பங்கிற்கு ரூ.75 இலட்சத்தையும் மற்றும் சில NGO நிறுவனங்கள் ரூ.25 இலட்சத்தையும், வழங்கினர். தார் ரோடு, சோலார் தெருவிளக்குகள் மற்றும் 3,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு தண்ணீர் தொட்டி போன்றவற்றை அமைத்துக் கொண்டிருக்கிறோம். இதுதவிர, ஹேப்பி வில்லேஜுக்காக ஒரு சமுதாயக் கூடத்தையும் ஒரு தன்வந்திரி கோயிலையும் அமைக்கத் திட்டமிட்டுள்ளோம், என்று விளக்குகிறார் முக்கிய நன்கொடையாளர்.

### பால் பண்ணை

கறவை மாடுகளை வளர்க்கும் செங்கல்பட்டை மையமாகக்கொண்டு செயல்படும் கோசம்ரக்சனா அறக்கட்டளையின் உதவியுடன் இந்த புதிய கிராமத்தில் ஒரு பால்பண்ணையை இந்த சங்கம் அமைக்கப்போகிறது. இதை ஆரம்பிக்க, ரொட்டேரியன்கள் 10 முதல் 15 பசுக்களை நன்கொடையளிப்பார்கள், மற்றும் பசுக்களை வளர்க்கத் தேவையான பயிற்சியும் பழங்குடியினருக்கு அளிக்கப்படும். தங்கள் குடும்பத்திற்குத் தேவையானது போக மீதமுள்ள பாலை விற்பனை செய்வதற்கும் பசுக்கள் அந்த குடும்பங்களுக்கு உதவும், என்றார் ராமநாதன்.

இந்த கிராமத்தில் பால் பண்ணையை பராமரிக்க ஒரு கூட்டுறவு சங்கமும் ஒரு மளிகைக் கடையும் திட்டமிடப்படுகிறது.



*கோசாலாவில் PDG அபிராமி ராமநாதன், ரவிக்குமார் மற்றும் RC மெட்ராஸ் சென்டரல் உறுப்பினர் மனோஜ் ராஜன்.*

### புது விடியல்

கிராமத் தலைவி லதா ரவி சிரித்துக்கொண்டே, இனிமே எங்களுக்கு எதுவுமே வேண்டாம். இந்த அழகான வீடுகள் எங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக கிடைத்துள்ளது மற்றும் எங்களுடைய கனவு வாழ்க்கையை ஆரம்பிக்க மிகவும் ஆவலுடன் இருக்கிறோம் என்று சொல்கிறார்.

இப்போது அந்த 64 குடும்பங்களும் அடிப்படை வசதிகள் அற்ற மண் மற்றும் ஓலைக்குடிசைகளில் வசி க்கிறார்கள், இனி அவர்கள் ஒரு அற்புதமான இடத்தில் குடிபெயரப்போகிறார்கள்.■

Rotary PEOPLE OF ACTION

# ரோட்டரியின் சுகாதாரத் திட்டத்தை செயல்படுத்த தொண்டர்களுக்கு பயிற்சி

ஜெயஸ்ரீ மற்றும் V முத்துக்குமரன்

பள்ளிகளில் சுகாதாரத் (WinS) திட்டத்துக்குத் தன்னார்வத் தொண்டர்களுக்கான பயிற்சி கோவாவில் அண்மையில் அளிக்கப்பட்டது. WinS திட்டத்தின் உலகத் தலைவர் P T பிரபாகர் தலைமையில் நடைபெற்ற இந்தப் பயிற்சியில் 12 மாவட்டங்களைச் சார்ந்தவர்கள் பங்கேற்றனர்.

திட்டத்தின் பல்வேறு நிலைகளை (Star Recognitions) எட்டுவதற்கு ரோட்டரி இன்டர்நேஷனல் வகுத்துள்ள சில தகுதிகளை ரோட்டரி அமைப்பினர் பெறுவதற்காக இந்தப் பயிற்சி நடத்தப்பட்டது.

ரோட்டரி சங்கங்கள் பள்ளிகளில் கழிவறைகளையும், கைகழுவுவதற்கான வசதிகளையும் ஏற்படுத்துவதிலும் பருவ வயது மாணவியருக்கு ரோட்டரியின் மாதவிடாய் சுகாதார மேலாண்மை எடுத்துக் கூறுவதிலும் மிகச் சிறந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருந்தாலும், ஒரு சில ரோட்டரி சங்கங்களே இது குறித்து அலுவலகத்துக்குத் தகவல் தெரிவிக்கின்றன என்று பிரபாகர் கூறினார்.

WinS தேசிய தலைவர் ரமேஷ் அகர்வால், RI தெற்காசிய அலுவலகத்தின் திட்ட அலுவலர் நிடா ஹாஸன் ஆகியோர் ஒரு நட்சத்திர அங்கீகாரம் பெறுவதற்கான வழிமுறைகளை எடுத்துரைத்தனர். இந்த நிகழ்வு மாவட்ட ரோட்டரி தலைவர்கள் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் புதிய வழிமுறைகளைக் கற்றுக் கொள்வதற்கு




*WinS உலகத் தலைவர் P T பிரபாகர், தேசியத் தலைவர் ரமேஷ் அகர்வால், PDG நடராஜன் நாகோஜீ மற்றும் RISAO அதிகாரி நீடா ஹாசன் சென்னை பயிற்சியரங்கில்.*

உரிய தளமாகவும் அமைந்தது.

இந்தப் பயிலரங்கில் 12 மாவட்டங்களைச் சேர்ந்த 112 பேர் பங்கேற்றனர். அவர்களில் 20 பிரதிநிதிகள் RID 3150வது மாவட்டத்தை சேர்ந்தவர்கள். DG ரமேஷ் வங்கலா, DGE பாண்டி சிவநாராயண ராவ், DGN ஹனுமந்த் ரெட்டி, PDG ரத்ன பிரபாகர் ஆகியோரும் இதில் பங்கேற்றனர்.

நம் குழந்தைகள் சொகுசு கார், ஐந்து நட்சத்திர விடுதி ஆகியவற்றைக் கேட்கவில்லை. எல்லோரும் சுத்தமான, நல்ல கழிவறை வேண்டும் என்கிறார்கள் என்று கூறிய பிரபாகர், UNICEF மற்றும் WHO ஆகியவற்றின் அறிக்கையின் முக்கிய அம்சங்களை விவரித்தார். உலகம் முழுவதும் மூன்றில் ஒரு பங்கு பள்ளிகளும் வளர்ந்த நாடுகளில் 50 சதவீத பள்ளிகளும் போதிய சுகாதாரம் இல்லை என்று அந்த அறிக்கை கூறுகிறது.

ரோட்டரியின் மிகப் பெரிய பலமே யுனிசெப்புடன் இணைந்து செயல்படுவதுதான். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

சமூகத்தில் சில நடத்தை மாற்றம் தேவை என்று வலியுறுத்திய பிரபாகர், மாற்றங்களுக்குச் சிறுவர்களே கிரியா ஊக்கிகளாக இருப்பர். அதற்கு இணக்கமாக நமது முயற்சிகள் அமைய வேண்டும். அப்போது அவர்கள் தங்களது இருப்பிடங்களுக்குச் சென்று கழிவறையைப் பயன்படுத்து வது, கைகழுவுவது எனத் தூய்மையாக இருப்பதற்கு பெற்றோர்களையும் சுற்றத்தாரையும் வலியுறுத்துவார்கள் என்றார்.

பள்ளிகளில் அமைக்கப்படும் கழிவறைகளையும் கைகழுவும் பிரிவுகளையும் இரண்டு ஆண்டுகளுக்கு சரியாகப் பராமரிக்க வேண்டும் என்று TRF வலியுறுத்தி வருகிறது. அதுதான் நமது பலம். பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கம்; மாணவர் குழுக்கள் ஈடுபட்டு திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் ரோட்டரி தனது பணியை நிறைவு செய்து விலகிய பிறகும் அந்தப் பராமரிப்புப் பணி நீண்டகாலம் நீடிக்கும் என்று பிரபாகர் கூறினார்.

WinS திட்டத்தைச் செயல்படுத்து வதற்குத் தேவையான உபகரணங்களை வழங்குவதில் பென்டியர் வாட்டர் இந்தியா என்ற கார்ப்பரேட் நிறுவனம் தனது முக்கிய கூட்டாளியான ரோட்டரி மார்கோவா மிட் டவுன், (RID 3170) அமைப்புக்கு சுமார் 70 லட்சம் டாலர் அளித்து உதவி இந்தப் பயிலரங்குக்கு ஏற்பாடு செய்தது. இதையடுத்து 100 பள்ளிகளில் கைகழுவும் பிரிவுகளும் 80 பள்ளிகளில் கழிவறைகளும், 40 பள்ளிகளில் மாணவிகளுக்கான மாதவிலக்கு சுகாதாரப் பிரிவுகளும் அமைக்கப்பட்டன.

தார்வாட் ரோட்டரி சங்கம், மார்கோவா மிட் டவுன் ரோட்டரி சங்கம் இந்தப் பயிலரங்கை நடத்தியது. WinS Recognition Committee உறுப்பினர் கணேஷ் பட் இந்தப் பயிலரங்கின் அமைப்பாளராக இருந்தார். அவர் பேசுகையில், இது TRFன் இலக்கான முன்னோடித் திட்டமாகும். இந்தியா, கென்யா, குவதிமாலா, ஹோன்டுரஸ், பெலிஸ் ஆகிய நாடுகளில் 2016ல் தொடங்கப்பட்டு 2020ம் ஆண்டு ஜூன் மாதம் வரை செயல்படுத்தப்படுகிறது. இந்த ஐந்து நாடுகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் 38 மாவட்டங்கள் இந்தியாவில் உள்ளன. அதை வெற்றிகரமாகச் செயல்படுத்த வேண்டும். அப்போது தான் TRF இத்திட்டத்தை இதர நாடுகளுக்கும் விரிவுபடுத்தும் என்று கூறினார்.

இந்த மண்டலத்தில் குறைந்தது 7000 பள்ளிகளிலாவது கழிவறைகளையும் கைகழுவும் பிரிவுகளையும் ரோட்டரி சங்கங்கள் அமைக்க வேண்டும் என்பதுதான் குறிக்கோள் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

அகர்வால் நட்சத்திர அங்கீகாரம் பெறுவதற்கான பல்வேறு வழி முறைகளை விவரித்தார். இத்திட்டம் தொடர்ந்து செயல் படுவதற்கு, பள்ளி நிர்வாகங்களை தொடக்கத்திலேயே இப்பணியில் ஈடுபடுத்துங்கள். உள்ளூர் பொருட்கள், தொழில்நுட்பங்கள், தொழிலாளர்களையே ஈடுபடுத்துங்கள் என்றார்.

இத்திட்டத்துக்கு கார்ப்பரேட் நிறுவனங்களின் ஆதரவைப் பெறுவது குறித்து PDG தீபக் ஷிகர்பூர் விவரித்தார். தங்களது நிறுவனங்களில் சமூகப் பொறுப்பு பிரிவுகளை (CSR) அமைக்க இயலாத நிலையில் உள்ள சிறிய நிறுவனங்களை அணுகுங்கள் என்றார் அவர்.

PDG ரத்ன பிரபாகர் சில மாவட்டங்களில் இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுவது



*ரோட்டரியின் மிகப் பெரிய பலமே யுனிசெப்புடன் இணைந்து செயல்படுவதுதான். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.*

**P T பிரபாகர்,** WinS உலகத் தலைவர்.




*RID 3150வின் WinS குழுவினர் கோவா பயிற்சியரங்கில் WinS தலைவர்கள் P T பிரபாகர், ரமேஷ் அகர்வால், மற்றும் கணேஷ் பட்டுடன்.*

குறித்து உதாரணங்களுடன் கூறினார். 25,000 பள்ளி மாணவர்கள் பயன்பெற்றதை விவரித்தார். உலக அளவில் 9 நிதியுதவித் திட்டங்களின் மூலம் பள்ளிகளில் ரூ.2.31 கோடியில் WinS projects செயல்படுத்தப்பட்டது என்றும் 25 ஆயிரம் மாணவியருக்கு மாதவிலக்கு சுகாதார மேலாண்மை யும் செயல்படுத்தப்பட்டது என்றார்.

நிடா ஹஸன் பள்ளியில் WinS Target Challenge framework குறித்தும் அதைப் பரிசீலித்து ஒப்புதல் அளிப்பதற்கான TRFன் நடைமுறை குறித்தும் விவரித்தார். விண்ணப்பப் படிவங்களை நிரப்புவதில் பிரதிநிதிகளுக்கும் அவர் உதவினார்.

மகப்பேறு மருத்துவ நிபுணரும் பெங்களூர் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினருமான டாக்டர் மீனாட்சி பாரத், மீண்டும் பயன்படுத்தப்படக் கூடிய மாதவிடாய் பேட்கள் (Reusable Pads) குறித்து விளக்கினார். இப்போது பயன்படுத்தும் பேட்கள் பாதிக்கக் கூடியவை என்று கூறிய அவர் ரோட்டரி சங்கங்கள் அமைக்கும் மாதவிடாய் சானிடரி நாப்கின்களை அழிக்கும் இயந்திரத்தைப் பயன்படுத்தக் கூடாது என்றார்.

இதைப் போன்ற பயிலரங்கம் சென்னையில் நடத்தப்பட்டது. அதில் 10 தமிழக, கேரள மாநில மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர். திருநெல்வேலியில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்கேற்க ஆயிரம் பிரதிநிதிகள் பதிவு செய்தனர். அதற்கு திருநெல்வேலி ரோட்டரி சங்கம் (RID 3212) ஏற்பாடு செய்திருந்தது. அதற்கு மாவட்ட WinS Chairman ஆறுமுக செல்வன் தலைமை வகித்தார்.

பல்வேறு மாவட்டங்களில் பள்ளிகளில் இத்திட்டம் குறித்த நிகழ்வுகளை நடத்தி சாதனை படைத்த ரோட்டரி சங்கங்களை பிரபாகர் பாராட்டிச் சிறப்பித்தார். 84 ரோட்டரி சங்கங்கள் 412 பள்ளிகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்தின. இதன் மூலம் இரண்டு லட்சம் மாணவர்கள் பலனடைந்தனர். 50 ஆயிரம் மாணவியர் மாதவிலக்கு சுகாதாரம் குறித்த பயிற்சி பெற்றனர்.

தனது சொந்தப் பணத்தைச் செலவழித்து மாணவர்களுக்கு ஒரு லட்சம் சோப்புகள் வழங்கிய ஆறுமுக செல்வன் மிகவும் பாராட்டுக்குரியவர் என்றார் பிரபாகர்.

DG ராஜகோபாலன் பேசு கையில், போலியோ ஒழிப்பு இயக்கத்தை அடுத்து, பள்ளிகளின் சுகாதார மேம்பாடு முக்கியத்துவம் பெற்றுள்ளது என்றார். WinS திட்டத்திற்காக உலகளாவிய நிதியுதவி பெறு வதற்காகப் பெறப்பட்ட 44 விண்ணப்பங்களில் நான்கு விண்ணப்பங்களை மட்டுமே TRF ஏற்றுள்ளது. அதில் இரண்டு விண்ணப்பங்கள் இந்தியாவிலிருந்து பெறப்பட்டவை. விருதுநகர் எலைட் ரோட்டரி சங்கம் ரூ.47 லட்சம் பெற்றுள்ளது என்றார் பிரபாகர்.■

*இந்த மண்டலத்தில் குறைந்தது 7000 பள்ளிகளிலாவது கழிவறைகளையும் கைகழுவும் பிரிவுகளையும் ரோட்டரி சங்கங்கள் அமைக்க வேண்டும் என்பதுதான் குறிக்கோள்.*

**கணேஷ் பட்**
**WinS கமிட்டி உறுப்பினர்.**

TRF உதவியுடன் நற்பணி

# உயிர் பெற்றது ஒரு கிராமம்!

ரோட்டரி செய்திக்குழு




DG *முகுல் சின்ஹா, கொரின்னா ஹுவாங்,* RI D 3490 DG *சீ மின் ஸாய்,* PRIP *கேரி ஹூவாங்,* PRID *சேகர் மேத்தா மற்றும் ராஷி பலர் கொல்கத்தாவில் பமோன் மோல்லார் சக் கிராமத்தில்.*

கோல்கத்தாவில் இருந்து 62 கி.மீ. தொலைவில் உள்ளது பமோன் மோல்லார் சக் என்ற குட்டி கிராமத்தில் பெண்களுக்குப் பயிற்சிஅளிப்பதற்காக கோல்கத்தா தெற்கு மெட்ரோ ரோட்டரி சங்கம் உருவாக்கிய ரோட்டரி திறன் பயிற்சி மையத்தின் திறப்பு விழா நடைபெற்றது.

அதில், தைவான் நாட்டின் RID 3490 85 உறுப்பினர்கள் பங்கேற்றனர். அதில் PRIP கேரி ஹுவாங் தலைமையில் அவரது மனைவி கோரின்னா, மாவட்ட ஆளுநர் மிங் த்ஸாய் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். தவிர, சிங்கப்பூரிலிருந்து 15 ரோட்டரி அமைப்பினர் வந்திருந்தனர். PRIDs சுசீல் குப்தா, சேகர் மேத்தா, RID 3291 மாவட்ட ஆளுநர் முகுல் சின்ஹா ஆகியோர் பங்கேற்றனர்.

ரோட்டரி சங்கத்துக்கு சர்வதேச கூட்டாளிகளும் TRFம் நிதியுதவி அளித்துள்ளனர். அத்துடன், மையத்தின் கட்டமைப்பு மேம்பாட்டுக்காக மாவட்ட ஒதுக்கீட்டு நிதியிலிருந்து (DDF) 25 ஆயிரம் டாலர் (சுமார் ரூ.17.35 லட்சம்) DG சின்ஹா அளித்துள்ளார்.

கோல்கத்தா தெற்கு மெட்ரோ ரோட்டரி சங்கத்தின் உழைப்பினால், கிராமம் மாறிவிட்டது. மூன்று ஆண்டுகளுக்கு முன் ரோட்டரி அமைப்பினர் வந்து பார்வையிட்டபோது கழிவறைகள், மின்சாரம், குடிநீர், மருத்துவ வசதி இல்லை. பள்ளிக் கூடமும் இல்லை, என்று ரோட்டரி சங்க உறுப்பினர் அனிருத்தா குஹா கூறினார்.

இக்கிராமத்தை வாழத் தகுதியானதாக மாற்றுவது என்று ரோட்டரி தலைவர் ஆசிட் தாலுக்தர் தலைமையில் நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அங்கே 123 குடும்பங்களுக்குக் கழிப்பறைகள் கட்டப்பட்டன. இன்னும் 40 கழிவறைகள் கட்டித் தந்துவிட்டால், திறந்தவெளிக் கழிப்பிடம் இல்லாத கிராமமாக மாறிவிடும் என்றார் குஹா.

குடிநீருக்கு குழாய் கிணறுகளும் பாசனத்துக்கு பம்பு செட் வசதியுடன் இரு ஆழ்குழாய்க் கிணறுகளும் தோண்டப்பட்டுள்ளன. இதர கிராமங்களைப் போல் இதுவும் வேளாண்மை சார்ந்த சமுதாயம். ஆனால் வானம் பார்த்த பூமி. ரோட்டரி செய்த தண்ணீர் வசதியால் ஒரு போக விளைச்சல் பல போக விளைச்சலாகி விட்டது. 200 ஏக்கர் நிலம் விளைநிலமாக மாறிவிட்டது என்றார் குஹா.

கிராமத்தினருக்கு இயற்கை விவசாயம், மீன் வளர்ப்பு ஆகிய பல்வேறு தொழில்களுக்கான பயிற்சியையும் ரோட்டரி அமைப்பினர் வழங்குகிறார்கள். பெண்களுக்கு ஊறுகாய், ஜாம், சாஸ் ஆகியவற்றைத் தயாரிக்கப் பயிற்சி தரப்படுகிறது. அடிக்கடி மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன. குண்டும் குழியுமாக உள்ள சாலைகள் செப்பனிடப்பட்டுள்ளன.

மக்களின் போக்குவரத்து வசதிக்காக நதியின் குறுக்கே மரப்பாலமும் அமைக்கப்பட்டுள்ளது. முன்பெல்லாம் மூங்கிலால் ஆன தற்காலிக பாலம் இருந்தது. நதியில் வெள்ளம் வந்தால், பாலம் அடித்துச் செல்லப்படும். நீந்திதான் அக்கரைக்குச் செல்வார்கள். இப்போது உறுதியான பாலம் அமைக்கப்பட்டுள்ளது என்றார் குஹா.

RC தெற்கு கோல்கத்தா மெட்ரோ அந்த கிராமத்தில் ஒரு பள்ளிக்கூடத்தை 2016ம் ஆண்டு கட்டித் தந்துள்ளது. இரண்டு ஆண்டு கழித்து திறன் பயிற்சி மையம் அமைத்து, அவர்களுக்குப் பயிற்சியும் தரப்படுகிறது.

ரோட்டரி உறுப்பினர்கள் ஈடுபட்டு பணியாற்றுவதை PRID குப்தா பாராட்டினார். பெண்கள் வருவாய் ஈட்ட உதவும் வகையில் தொழில் பயிற்சி மையம் (Centre of Excellence) அமைக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என்றார்.■

Rotary PEOPLE OF ACTION

# கிராமப்புற பெண்களுக்கு ரோட்டரியின் பாட வகுப்புகள் ஒரு வரம்

V முத்துகிருஷ்ணன்




DG A V *பதி மற்றும் அவர் மனைவி வீணா 94 வயது குழந்தையம்மாளுக்கு சான்றிதழ் அளிக்கின்றனர். சங்கத்தலைவர் ரவிராஜ் கிருஷ்ணனும் உடன் உள்ளார்.*

தனது பதக்கத்தைப் பெற 94 வயதான குழந்தைஅம்மாள் புன்னகையுடன் மேடையின் மேல் மெதுவாக நடந்து வந்தார். அவர் கர்வமாகவும் சந்தோஷத்துடனும் இருப்பதற்கான காரணம் இப்போது அவர் எழுதப் படிக்கவும் கையெழுத்திடவும் கற்றுக் கொண்டதுதான், இதற்கான பெருமை RID 3201 RC கோயம்புத்தூர் ஜெனித்தின் உறுப்பினர்களைச் சேரும். குழந்தைஅம்மாளுடன் மேலும் 22 புதிதாக கல்வியறிவு பெற்ற பெண்கள், தங்கள் சான்றிதழையும் பதக்கத்தையும் DG A V பதி மற்றும் அவரது துணைவியார் வீணாவிடம் இருந்து குன்னத்தூர் கிராமத்தில் நிகழ்ந்த ஒரு சிறப்பான நிகழ்ச்சியில் பெற்றனர்.

கடந்த நான்கு ஆண்டுகளாக, அந்த சங்கம் முதியோர் கல்வி வகுப்புகளை அங்குள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் உதவியுடன் நிகழ்த்தி வருகின்றது. “நாங்கள் பெண்களுக்குத் தேவையான அடிப்படை கல்வி அறிவு, உடல்நலம் பற்றிய விழிப்புணர்வு மற்றும் நல்ல பழக்கவழக்கங்கள், குழந்தைகளை பேணும் முறை அதுமட்டுமின்றி வங்கி கணக்கு ஒன்றை திறக்கவும் அவர்களுக்குச் சொல்லித் தருகிறோம்’’ என்கின்றார் சங்கத் தலைவர் ரவிராஜ் கிருஷ்ணன். குன்னத்தூரில் மிகவும் எதிர்பார்க்கப்படும் நிகழ்ச்சியானது சங்கத்தின் வருடாந்திர மருத்துவ முகாமாகும். “ஒரு வருடத்திற்கு தேவையான மருத்துவர் பரிந்துரைத்த மருந்துகளை நோயாளிகளுக்கு வழங்குகிறோம்,’’ என்கிறார் திட்டத்தின் தலைவர் சாமுவேல் ராஜ்.

சமீபத்தில் அந்த சங்கம் 20,000 மரக்கன்றுகள் நடும் மிகப்பெரிய திட்டப்பணி ஒன்றை துவங்கியுள்ளது. இதன் நோக்கம் தொழிற்சாலை கூடங்களுக்கு நடுவே ஒரு பசுமையான மற்றும் ஆரோக்கியமான சூழலை உருவாக்குவது தான். ஊட்டி நெடுஞ்சாலையில் உள்ள காரமடையில் 132 ஏக்கரிலான வெற்று நிலம் பசுமை பகுதியாக மாற்றப்படுகிறது.

ஆனால் 12 வயதான இந்த சங்கத்திற்கு “சாந்தி வனம்” எனப்படும் ஒரு பொது வனத்தை உருவாக்குவது, என்பது ஒரு சாதாரண விஷயம்

இல்லை. முதலில் நாங்கள் ஒரு தள கருத்துக்கணிப்பை மண்வளம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை துறையில் உள்ள வேளாண்மை நிபுணர்களின் உதவியுடன் செய்தோம். முதலில் கார்பன் டை ஆக்சைடை அதிகம் உறிஞ்சி பிராண வாயு அதிகமளவு தரக்கூடிய வேப்ப மரக்கன்றுகளை நடும்படி அறிவுரை கூறினார்கள் என்றார் ரவிராஜ் கிருஷ்ணன். இது வரை 8000 வேப்ப மரக் கன்றுகள் நடப்பட்டு சொட்டு நீர் பாசனம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் நாங்கள் தேக்கு மற்றும் மற்ற செம்மர வகைகளும் புளிய மரமும் வருங்காலத்தில் நடுவோம்.'' ஜூன் 2020 ஆண்டிற்குள் சாந்தி வனமாக (காடு) மாற்றப்படவிருக்கிறது.



DG *பதி ரோட்டரியனருடன் மர நடு விழாவில்.*

இந்த மிகப்பெரிய பசுமை திட்டம் ஒரு மிகப்பெரிய மாசுக்கட்டுப்பாடு செயலாகும். மேலும் வளர்ந்து வரும் நகர அமைப்பிற்கு சுவாசிக்க நல்ல காற்று வழங்கக்கூடும், என்கிறார் கிருஷ்ணன். சங்கத்தின் இந்த மிகப்பெரியப் சாதனையாக நம்பப்படும். இத்திட்டத்தின் இலக்கு 50 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதுவரை இந்த பசுமை திட்டத்திற்கான செலவு ரூ.18.5 லட்சமாகும் - இதில் சங்கத்தின் பங்கீடு ரூ.4.5 லட்சம் ஆகும். மீதி தொகையானது சாந்தி நிகேதன் சில்க்ஸ் உரிமையாளரான அருண் பாஸ்நா மற்றும் அவரது குடும்பத்தாரால் வழங்கப்பட்டது.

சங்கனூர் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் ஒரு அதிநவீன வகுப்பறை மற்றும் வகுப்பறை மேஜை நாற்காலிகள் வழங்குதல் உட்பட ரூ.4 லட்சம் மதிப்புள்ள உலகளாவிய மானியத் திட்டப்பணியின் கீழ், சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மற்ற முயற்சிகள் ஆகும்.■

# காஸியாபாத் மருத்துவமனையில் CT ஸ்கேன் கருவி

ரோட்டரி செய்திக்குழு


DGE *தீபக் குப்தா,* DG *சுபாஷ் ஜெயின்,* DGN *அலோக் நாத்,* PGDs JK *கவுர் மற்றும் சரத் ஜெயின்* CT *ஸ்கேன் வசதியுடன்.*

RID 3012, RC காஸியாபாத் நார்த் மற்றும் காஸியாபாத் சென்ட்ரல் சங்கங்கள் இணைந்து, உலகளாவிய மானியத் திட்டப்பணி மூலமாக வர்தன் மல்டிஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் CT ஸ்கேன் கருவியை நிறுவியது, DG Dr சுபாஷ் ஜெயின் மருத்துவமனையின் புதிய வசதியைத் திறந்து வைத்தார்.

உத்தரபிரதேசத்தில் இருக்கும் காஸியாபாத் நகரத்தில் 2 முதல் 3 ஸ்கேன் மையங்கள் மட்டுமே உள்ளன. இந்த மருத்துவ வசதி காஸியாபாத் மற்றும் அதை சுற்றியுள்ள முப்பது இலட்சம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும். ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1,200 நோயாளிகள் ஸ்கேன் வசதி இல்லாததால், மருத்துவமனையால் திருப்பி அனுப்பப்படுகிறார்கள் என்று DG ஜெயின் கூறினார்.

காஸியாபாத் மற்றும் அருகிலுள்ள மக்கள் குறைந்த செலவில் மருத்துவ வசதிகளைப் பெற இத்திட்டப்பணி உதவும். CT ஸ்கேன் மூலம், வர்தன் மருத்துவமனையில் 1,200 முதல் 1,500 நோயாளிகள் ஒவ்வொரு ஆண்டும் பயனடைவார்கள். இந்த CT ஸ்கேன் கருவியின் ரூ.136,986 டாலர்கள் (சுமார் ரூ.1 கோடி).■

# மன அழுத்தத்தின் விஷப்பல்லை உடைப்போம்!

பரத் - ஷலன் சவூர்

நம் வாழ்க்கையிலிருந்து மன அழுத்தத்தை நீக்க வேண்டும், அழுத்தமில்லாத வாழ்க்கை வாழவேண்டும். அதைக் கவனிக்காமல் போனால், ரத்தக் கொதிப்பும் இதயத் துடிப்பும் அதிகரிக்கும்.

**சரி, மன அழுத்தத்தை எப்படிச் சமாளிப்பது?**

சைக்கிள் ஓட்டுதல். நாற்காலி சைக்கிள் எனப்படும் உடற் பயிற்சி மன அழுத்தத்தை முறியடிக்கும் சிறந்த பயிற்சியாகும். மிகவும் எளிதானது. அதே சமயம் மிகுந்த பலனைத் தருவதும் கூட. 32 நிமிட நேரம் அந்தப் பயிற்சியை மேற்கொள்வது நல்லது.

எந்தச் சூழ்நிலை நமக்கு ஏற்பட்டாலும் திறந்த மனத்தோடு இருந்தால், வானத்தைப் போல் நிர்மூலமாக தெளிவாகவும் மனம் எப்போதும் ஏற்பட்டு இருக்கும்.

சைக்கிள் ஓட்டும் பயிற்சியின் போது, மனம் லேசாகத்தான் இருக்கவேண்டும். அதில் எந்த எண்ணத்தையும் போட்டுக் குழப்பக் கூடாது. ஆரம்பத்தில், சைக்கிள் ஓட்டும்போது சக்கரம் எத்தனை முறை சுழல்கிறது என்று எண்ணலாம். அப்படியே பழகினால், அற்புதமான விழிப்புணர்வு ஏற்படும். இதே மாதிரி தொடர்ந்தால், எவ்வளவு நேரம் ஓட்டுகிறோம் என்ற எண்ணமே தோன்றாமல் ஒரு மணி நேரத்துக்கு மேல் சைக்கிள் ஓட்டுவோம். எண்ணங்களை மனம் துண்டித்துவிட்டால், நமது மூளை கவலை, மன அழுத்தம் மற்றும் வலி ஆகியவற்றிலிருந்து விடுபட்டுவிடும்.

**அதிர்ச்சிகளைச் சமாளித்தல்:**

பதற்றம் என்பது இரு வகைப்படும். ஒன்று முந்தைய காலத்தில் எந்த அனுபவம் ஏற்பட்டதோ அதன் மூலம் ஏற்பட்டது. உதாரணத் திற்கு, பூங்காவில் காலையில் நடைபயிற்சி செய்கிறீர்கள். அங்கே ஒரு பாம்பு ஊர்ந்து சென்று மறைந்துவிடுகிறது. அவ்வளவுதான் மறுநாள் அதே மாதிரி பூங்காவில் நடை போனால், அந்தப் பாம்பு மறுபடியும் என் வழியில் வருமா? என்று தோன்றும். சில சமயம் வேலைக்கு நேர்காணலில் பங்கேற்கும்போது ஏற்படுவதைப் போல், ஒரு கூட்டத்தில் பேசும்போது ஏற்படுவதைப் போல்தான் இதுவும்.

இப்படி ஒரு பதற்றம் நெஞ்சில் ஏற்பட்டால் மனத்துக்குள் அழுத்தமாக, இது நீங்கட்டும். நான் எல்லாவற்றுக்கும் சரியாகத் தயாராக இருக்கிறேன். நான் நன்றாகச் செய்வேன் என்று தனக்குத்தானே சொல்லிக் கொள்ளுங்கள். அப்போது, பதற்றம் தணியும். நேர்காணல் அறையில் நண்பர்கள் புடைசூழ இருப்பதைப் போல் உணர்வு ஏற்படும்.

இன்னொரு வகையான பதற்றம் எதையாவது பார்ப்பதற்கோ நினைப்பதற்கோ முன்பாகவே தோன்றும் அச்சத்தின் அடிப்படையிலானது. அப்போது, நடக்க வேண்டும் என்று நீங்களே வலுக்கட்டாயமாக செய்யுங்கள். ஒன்றுமே இல்லாததைப் பிரச்சினையாக நினைத்து பார்க்கிறீர்கள். வங்கியில் நிலுவை போதிய அளவு இல்லை என்று கவலைப்பட்டால், அது நல்லது. ஆனால், நாளைக்கு எனக்கு வேலை போகிறது என்று





தேவையில்லாமல் கவலைப்பட்டால், காரணமேயில்லாமல், அதில் மூழ்கிவிடுகிறீர்கள். இத்தகைய பதற்றம் வாழ்க்கையைப் பற்றி அதீதமாகச் சிந்திப்பதால் ஏற்படும் விளைவுதான். இதற்கு ஓய்வு எடுத்துக் கொள்வதுதான் சிறந்த வழியாகும்.

**சமநிலையை மீட்டெடுத்தல்:**
புத்துணர்ச்சி பெறுவதற்குக் குளிக்கலாம். முகத்தைக் குளிர்ந்த நீரில் கழுவலாம். ஈரத் துண்டை தலையிலோ கழுத்திலோ சுற்றிக் கொள்ளலாம். ஒரு வேலைக்கும் அடுத்த வேலைக்கும் இடைவெளி எடுத்துக் கொள்ளுங்கள். உடல் தளர்ந்திருக்கட்டும். சைக்கிள் தினமும் ஓட்டுவது நல்லது. டெர்ரா பாண்ட் (Terra Band) எனப்படும் துணியால் செய்த வளையத்தைக் கையில் சுற்றி உடலை முறிக்கும் உடற் பயிற்சி செய்யவும். இசையைக் கேளுங்கள். மனத்துக்கு உத்வேகம் அளிக்கும் நூல்களையும் கட்டுரைகளையும் படியுங்கள். மனத்துக்கு தூண்டுகோலாக அமையும் உரைகளைக் கேளுங்கள். முதலீடுகள் குறித்து கவனம் செலுத்துங்கள். உற்சாகமாக இருங்கள். ஓய்வு அளிக்கும் வகையில் சுற்றுச்சூழலை அமைத்துக் கொள்ளுங்கள். தியானம் செய்யுங்கள். நிதானமாக மூச்சுவிட்டுப் பழகுங்கள். இப்படி மனத்தைத் தளர்த்திக் கொள்வதற்கான பயிற்சிகளைத் திட்டமிடுங்கள். கொஞ்சம் சிரமமாக இருக்கும். பழகினால், எளிதாகிவிடும். அதற்கெல்லாம் நல்ல பலன் கிடைக்கும்.

அழுத்தம் என்பது நமக்கு எதிரியல்லா என்று பாருங்கள். உதாரணத்திற்கு, குறித்த காலத்தில் ஒரு வேலையை முடிக்க வேண்டும் என்ற நிர்பந்தம் அழுத்தம் தருகிறது. ஆனால், அதே சமயம் அந்த அழுத்தம் அற்பத்தனமான விஷயங்களிலிருந்து நம்மை விலக்கி, முக்கிய வேலையில் முழுக் கவனம் செலுத்த வைக்கிறது. எதையும் அலசி ஆராயும் திறமையையும் வெளிப்படுத்தும் ஆற்றலையும் வளர்க்கிறது. ஒரு பணியை எடுத்து முடித்த திருப்தியையும் அளிக்கிறது.

**அழுத்தம் என்பது ஆபத்தல்ல:**
அழுத்தத்தை அடக்க முயற்சி செய்யாதீர்கள். அது உங்களை பாதிக்கும். அதற்கு மாறாக, சில கேள்விகளை எழுப்புங்கள்: இந்த வேலையை இன்னும் சிறப்பாக நிறைவேற்ற நான் என்ன செய்யவேண்டும்? எதைத் திரும்பத் திரும்ப நினைவுபடுத்தியும் செய்யாமல் விடுகிறேன்?

பிரபல அமெரிக்க எழுத்தாளரும் பத்திரிகையாளருமான ஜேம்ஸ் P காரோல் ஓடிக்கொண்டே இருக்கும் நாம் ஒரு முறை நின்று ஓய்வெடுக்கும்போது உலகின் அசைவுகள், பேச்சுகளை நிதானமாகக் கவனிக்கிறோம் என்கிறார். அதுதான் பொருத்தமானது.

சில சமயம் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டால், உளவியல் மருத்துவரை அணுக வேண்டியிருக்கும். அவர்கள் உங்களது மூளை எப்படி ஓய்வு எடுக்க வேண்டும் எனக் கூறுவார்.

வாழ்க்கை அற்புதமாகவும் கடினமாகவும், மாறி மாறி வரும். இவையெல்லாம் சாதாரணம், வழக்கமானது, சரியானது.

நம் வாழ்க்கையில் அற்புதமான கணங்களை அதிகமாக நேசியுங்கள். கடினமாக இருக்கும்போது சிந்தனைகளைச் செலுத்துங்கள். சாதாரணமான நாட்களில் அதற்கு விசுவாசமாக இருங்கள். இப்படித்தான் ஞானம் என்ற புதிய மொழியைக் கற்கிறோம். நம்மை நாமே செதுக்கிக் கொள்கிறோம். உண்மை எனக் கண்டதைப் புரிந்து கொள்கிறோம். எல்லாவற்றுக்கும் தீர்வு உண்டு. இருண்ட குகை வழியாகச் செல்லும்போது ஒளி தென்படத்தான் செய்யும். இருண்ட குகை என்பது நமது பார்வை அவ்வளவுதான்.

கட்டுரை ஆசிரியர்கள்
இருவரும் Fitness for Life
மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine
என்ற ஆங்கில நூல்களின்
எழுத்தாளர்கள்.

# நோ பார்க்கிங் போர்டுகளில் ரோட்டரி தகவல்கள்

ரோட்டரி செய்திக்குழு




ரோட்டரியின் நற்பெயரை பொதுமக்களின் இடையே அதிகரிக்க பரோடா சாயாஜிநகர் ரோட்டரி சங்கத்தால் பரோடாவில் உள்ள மற்ற ரோட்டரி சங்கங்களின் கூட்டுவிளைவோடு துவங்கப்பட்ட செயல் திட்டமாகும். பரோடா மெட்ரோ, பரோடா மெயின், பரோடா காஸ்மாபாலிடன், பரோடா சன்ரைஸ் மற்றும் பரோடா ஜவஹர் நகர் ஆகிய ரோட்டரி சங்கங்கள் இந்த செயல் திட்டத்தை முன்னெடுக்க கைகோர்த்துள்ளன.

ஸ்வச்ச பாரத் மற்றும் என்ட் போலியோ போன்ற முக்கியச் செய்திகளை நோ பார்க்கிங் போர்டுகளில் எழுதும் வேலையை சிந்தித்து துவக்கியது RC பரோடா சாயாஜிநகர் தான். இந்தக் கருத்து மற்றும் அதன் தாக்கம் நகரின் மற்ற சங்கங்களை ஈர்த்ததால், அவர்களும் இந்த பெரிய செயல்திட்டத்தில் சேர்ந்து கொண்டார்கள் என்று கூறுகிறார் RID 3060 சங்கத்தைச் சேர்ந்த DGE அனீஷ் ஷா.

இந்த சங்கங்கள் இதைப் போன்ற 1000 “நோ பார்க்கிங்“ போர்டுகளைத் தயார் செய்தனர்.

இந்த போர்டுகள் வங்கிகள், அரசு அலுவலகங்கள் போன்ற தனியார் இடங்கள் மற்றும் பல்வேறு பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. இந்த செயல்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட PR விளைவு குறைந்தது 4 முதல் 5 வருடங்கள் வரை நீடிக்கும் என்று எண்ணுகிறோம், மற்றும் அது ரோட்டரியின் பிராண்டை மேலும் வலுப்படுத்தும் என்றும் அவர் கூறினார்.■

## AKS Members from South Asia as of April 2019

| RID | Name | Rotary Club |
|---|---|---|
| 3141 | Nischal H Israni | Bombay North |
| 3141 | Amit Chandra and Archana Chandra | Bombay |
| 3141 | Vijaylaxmi Poddar | Bombay |
| 3141 | Taizoon Fakhruddin Khorakiwala and Edith Khorakiwala | Bombay Worli |
| 3141 | Kishorilal Jhunjhunwala | Mumbai North End |
| 3132 | Asa Singh and Jagdish Kaur | Aurangabad |
| 3150 | Ravindra Reddy Marri and Sarala Devi Marri | Hyderabad |
| 3190 | Ravishankar Dakoju and Paola Dakoju | Bangalore Orchards |
| 3150 | Uday S Pilani and Roopal Pilani | Hyderabad Deccan |
| 3000 | Rathinasamy Theenachandran and Vasanthi Theenachandran | Madurai Metro |
| 3281 | Abul Hasan M Sadeq and Saleha Sadeq | Dhaka Scholars |

*Source: RISAO*

# ஹரியா ரோட்டரி மருத்துவமனையில் மேம்படுத்தப்பட்ட வசதிகள்

ரோட்டரி செய்திக்குழு




PRIP *கல்யாண் பானர்ஜீ,* PDGs *ருச்சீர்ஜானி மற்றும் ஆஷிஷ் ராய் ஹரியா ரோட்டரி மருத்துவமனையில்.*

RC வாபி, RID 3060, சமீபத்தில் $63,771 மதிப்பில் ஹரியா ரோட்டரி மருத்துவ மனைக்கு மருத்துவ உபகரணங்களை வழங்கியது. ரோட்டரி அறக்கட்டளை நடத்தும் இந்த மருத்து வமனையின் தீவிர சிகிச்சை பிரிவிற்கு, 11 மானிட்டர்கள், செயற்கை சுவாச கருவி மற்றும் பச்சிளங் குழந்தைகளுக்கான செயற்கை சுவாச கருவியும், டிஃபைபிரிலேட்டர் கருவியும் வழங்கப்பட்டது.

TRF நிதியுதவியால் நடைப்பெற்ற இந்த திட்டப்பணிக்கு, RID 3142, RC மும்பை டவுண்டௌன் சீலேன்ட் சங்க உறுப்பினர் கிரிதர்லால் மோடியின் 30,000 டாலர்கள் டெர்ம் கிப்ட் மற்றும் கடந்த ஆண்டின் DDF 10,000 டாலர்கள் பயன்படுத்தப்பட்டது. நேபாளத்தில் இருக்கும் RID 3292-இன் RC பிராட்நகர் இதன் சர்வேதேச கூட்டாளி.

PRIP கல்யாண் பானர்ஜி இந்த உபகரணங்களை மருத்துவமனையின் அதிகாரிகளிடம் ஒப்படைத்தார், இந்த நிகழ்ச்சியில் PDG ருச்சிர் ஜானி, ஆஷிஷ்ராய், சங்கத் தலைவர் கேதன் பட்டேல் மற்றும் முன்னாள் தலைவர் பிரகாஷ் ஆகியோர் கலந்துக் கொண்டார்கள்.

இது தான் எங்கள் சங்கத்தின் முதல் உலகளாவிய மானியத் திட்டப்பணி, உணர்கிறோம் என்றும் கூறினார்.■

---

# ரோட்டரி E-சங்கம் நிறைவேற்றிய குடிநீர் திட்டம்



DG RVN *கண்ணன் பள்ளியில் குடிநீர் வசதியை துவக்கி வைக்கிறார்.*

சென்னையைச் சேர்ந்த E கிளப், RID 3232, உலகின் பல்வேறு பகுதிகளில் இருக்கும் அதன் உறுப்பினர்கள், இணையதளத்தில் சந்தித்துக் கொள்கிறார்கள். சங்கத்தின் இந்த ஆண்டு தலைவர் G வெங்கடேஷ், அமெரிக்காவில் வசிக்கிறார்.

இந்த சங்கம் RID 3000, மதுரைக்கு அருகே உள்ள தங்கலாச்சேரி கிராமத்தில் இருக்கும் பஞ்சாயத்து ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு, குடிநீர் வசதி செய்து கொடுத்தது. அந்த பள்ளியில் இருக்கும் ஆழ்துளை கிணறு மேலும் ஆழமாக்கப்பட்டு, தண்ணீர் டேங்க் மற்றும் மோட்டார் அறை கட்டித்தரப்பட்டது. RID 3000 DG RVN கண்ணன் அவர்களால் திறக்கப்பட்ட துவக்க விழாவில், சங்கத் தலைவர் வெங்கடேஷ், அமெரிக்காவில் இருந்து வந்து கலந்துக்கொண்டார். இத்திட்டத்தின் மொத்த மதிப்பு, ரூ.1 இலட்சம் தொகையை, துபாய், பாங்காக், மலேசியா, அமெரிக்கா மற்றும் சென்னையில் வசிக்கும் சங்க உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.■

# மும்பை, அல்மாத்தி ரொட்டேரியன்களின் சந்திப்பு

ரோட்டரி செய்திக்குழு

RC பாம்பே ஹேங்கிங் கார்டன் (RC BHG), RID 3141 சங்க உறுப்பினர்களுக்கு இது ஒரு பெருமைமிகுத் தருணம், DG சசிக்குமார் சர்மா தலைமையில் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 150 ரொட்டேரியன்கள் கஜகஸ்தான் நாட்டிற்கு சுற்றுலா செல்ல இந்த சங்கம் ஏற்பாடு செய்தது. எல்லாவற்றையும் விட, துருக்கி RID 2430 சங்கத்தின் ஒரு அங்கமான RC அல்மாத்தி சங்கத்துடன் இணைந்து ஒரு கூட்டத்தை நடத்தினர்.

RID 3141 சங்கம் செயல்படுத்தும் பல்வேறு திட்டப்பணிகள் மற்றும் சமூகர் முன்னேற்ற முயற்சிகளைப் பற்றி ஒரு சுருக்கமான விளக்கத்தை PDG ராகுல் திம்பாடியா அளித்தார். DG சர்மா ஒரு உலகளாவிய மானியத் திட்டப்பணியில் RC அல்மாத்தியுடன் இணைந்து, சுற்றுலா பயணிகளுக்கான துப்புரவு வசதிகளை தன் மாவட்டத்தில் மேம்படுத்துவதற்கான தன் விருப்பத்தை வெளிப்படுத்தினார். விருந்தினர் மற்றும் உபசரிக்கும் ரோட்டரி சங்கங்கள் தங்களின் கொடிகளை பலத்த கரகோஷத்துடன் பரிமாற்றம் செய்து கொண்டன.

DG சர்மாவும் அவரது சங்க உறுப்பினர்களும் பேசியவை அனைத்தும் ஒரே அலைவரிசையில் இருந்ததை RC அல்மாத்தி தலைவர் டோல்கின் அபில்தயேவா எடுத்துக் காட்டினார். அல்மாத்தியைச் சேர்ந்த இரண்டு ரோட்டராக்டர்களும் ரோட்டரி மற்றும் தோழமை குறித்து தங்களின் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டனர்.

இந்த வெளிநாட்டு சுற்றுலாவில் கலந்துகொண்டதற்கும், குறிப்பாக சுற்றுலாவிற்கான அனைத்து ஏற்பாடுகளைச் செய்த வழிநடத்தும் சங்கத்தைச் சேர்ந்த ரொட்டேரியன்கள் சமீர் மற்றும் சோனியா கர்னனி ஆகியோருக்கும் DGN சுனில் மேரா நன்றி தெரிவித்தார்.

**கண்ணுக்கு விருந்து**

இந்த மத்திய ஆசிய குடியரசு நாட்டில் சுற்றுப்பயணம் செய்கையில், எழில் கொஞ்சும் மலைப்பகுதியான கோக் டோப், அமெரிக்கா கோலோராடோ கிரான்ட் கேன்யான்ஸ் பள்ளத்தாக்கிற்குப் பிறகு இரண்டாவது மிக நீண்ட பள்ளத்தாக்கான சாரின் கேன்யான்ஸ் பள்ளத்தாக்கு, அலட்டா மலைத்தொடர்களுக்கு மத்தியில் உள்ள சியம்புலக் ஸ்கை ரிசார்ட்; ராஜாளி பறவை காட்சி, போன்றவற்றை மும்பை ரொட்டேரியன்கள் சுற்றிப்பார்த்தனர். RC அல்மாத்தியுடனான சந்திப்பிற்கு ஏற்பாடு செய்த ரொட்டேரியன் அம்ரிஷ் தஃப்தாரிக்கு நன்றிக் கடன்பட்டுள்ளோம், RID 3141 மற்றும் 2430 சங்கங்களுக்கு இடையேயான சந்திப்பு இதுதான் முதல்முறை என்று சொல்கிறார் RC பாம்பே ஹேங்கிங் கார்டன் சங்கத்தின் புதிய தலைவர் திலிப் ஷா.■



*DG சசி சர்மா மற்றும் அவர் மனைவி ரீடா சக ரோட்டரியினருடன் கஜகஸ்தானில்.*

# மதுரை கிராமங்களில் ரோட்டரியின் கைவண்ணம்

V முத்துக்குமரன்

மகிழ்ச்சியான கிராமங்கள் திட்டத்தின் கீழ் பல பிரத்தியேக நிகழ்வுகள் நடக்கிறது, RID 3000 சுமார் 665 கிராம குடும்பங்கள் பயன் பெறும் வகையில், கிராம அறிவுக்கூடம் (VKC) சுகாதார மையம், அங்கன்வாடி கட்டிடம் மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சியின் அங்கமாக குழந்தை பாராளுமன்றம் ஆகியவற்றை அமைத்துள்ளது.

இத்திட்டத்திற்காக TVS ஸ்ரீசக்ரா டயர்ஸ் தங்களது CSR அங்கமான ஆரோக்கியா வெல்ஃபேர் டிரஸ்ட் மூலம் 32,000 டாலர்களை நன்கொடையாக வழங்கி யுள்ளார்கள், TRF எங்களுடைய, இந்த கிராம திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியது, மேலும் பல்வேறு வசதிகளை செய்து தருவதற்காக தற்போது ரூபாய் 45.25 லட்சம் எங்களிடம் இருக்கிறது, என்கிறார் திட்டத்தின் ஆலோசகரும் RC மதுரை மிட்டவுனின் முன்னாள் தலைவருமான R ஸ்ரீனிவாசன். V மாணிக்கம்பட்டி, சுந்தகிரிபட்டி, வெள்ளாளம்பட்டி, கதாபட்டி ஆகிய நான்கு கிராமங்களில் பெண்கள் மேம்பாடு மற்றும் இளைஞர்களின் திறன் வளர்ப்பை கருத்தில் கொண்டு மருத்துவ முகாம்கள், திறன் வளர்க்கும் பயிற்சி வகுப்புகள் போன்ற பல்வேறு நிகழ்வுகள் நிகழ்த்தப்படுகிறது.



RID 3000 *தத்தெடுக்கப்பட்டுள்ள ஒரு கிராமத்தில் மாவட்ட கலெக்டர்* R *நடராஜனுடன்* DG RVN *கண்ணன்.*

மாணிக்கம்பட்டியில், மாணவர்கள் கற்பதற்கு சாதகமான சூழல், உடற்பயிற்சி, சிந்தனை மற்றும் அறிவாற்றல் பயிற்சிகள் நடத்த கிட்டத்தட்ட ரூ.10 லட்சம் மதிப்பில் VKC கட்டிடம் முடிக்கப்பட்ட பின் அதை நாங்கள் அரசாங்கத்திடம் ஒப்படைத்து விடுவோம். ஆனால், இளைஞர்களுக் கான வகுப்புகளை நாங்கள் நடத்துவோம், என்கிறார்.

முசுந்தகிரிபட்டியில், பொது கழிப்பறை மற்றும் சுகாதார மையம் கட்டப்பட்டு வருகிறது. மேலும், மற்றொரு கிராமத்தில் அங்கன்வாடி கட்டிடம் கட்டப்பட்டு அரசு அதிகாரிகளின் இறுதி ஆய்வுக்காக காத்திருக்கிறது.

## பெண்களுக்கு நடைமுறை வாழ்க்கைத் திறன்கள்

பயிற்சி பட்டறைகள் மற்றும் தொழில் பயிற்சி கள் மூலம் நான்கு கிராமங்களிலும் உள்ள கிராமப்புறப் பெண்களுக்கு, வங்கி கணக்கு திறப்பது, காப்பீட்டு திட்ட அணுகுமுறை, மேலும் ஊக்கத்தொகை பெறும் முறை மற்றும் தங்கள் நல்வாழ்விற்கு அரசு தரும் உரிமைகளைப் பெறுவது போன்ற நடைமுறை வாழ்க்கைத் திறன்கள் அங்கு கற்றுத் தரப்படுகிறது.

## குழந்தைகளின் பாராளுமன்றம்

இதுவரை 83 குழந்தைகள் இந்த பிரத்தியேகமான பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக சேர்ந்து இருக்கிறார்கள், மேலும் தங்களை வழிநடத்துவதற்காகவும், சுகாதாரம் மற்றும் சிறந்த நடைமுறைகளைக் கற்று கொடுப்பதற்காகவும் 88 முதியோர்களை தங்கள் கிராமங்களில் இருந்து தேர்வு செய்துள் ளார்கள். குழந்தைகள் சமூக பிரச்சனைகள் மற்றும் குறைகளை உத்தியோகபூர்வ கருத்துக் களத்திற்கு எடுத்து சென்றுள்ளார்கள்.

ஆரோக்கியமான மற்றும் நோயற்ற வாழ்வு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கிராமங்களில் உள்ள குழந்தைகளுக்கு இடையே சுகாதார படையணியை உருவாக்கியுள்ளோம், என்கிறார் ஸ்ரீனிவாசன்.■

# மணிப்புரி: தேவதையின் நாட்டியம்

சீதா ரத்னாக்கர்

*புராணம் என்பது அகநிலை, உள்ளுணர்வு, கலாசாரம் மற்றும் நம்பிக்கை.*

*— தேவதத் பட்டநாயக்*



மணிப்பூரின் பெரும்பான்மை மக்களைக் கொண்ட மேய்தியஸ் வடகிழக்குப் பகுதியின் அழகான 9 மலைகள் சூழ்ந்த பள்ளத்தாக்கில் வாழ்ந்து வரும் இனமாகும்.

மணிப்பூர் என்ற சொல்லுக்கு நகை ஜொலிக்கும் நிலம் என்பது பொருளாகும். மேய்தியஸ் இனத்தவர் இராமாயண, மகாபாரத காலத்தில் வாழ்ந்ததாகக் கருதப்படும் கந்தர்வர்களின் பரம்பரையில் வந்தவர்கள் என்று கூறிக் கொள்கிறார்கள். அதனால்தான் அவர்கள் வாழும் பகுதிக்கு கந்தர்வதேசம் என்ற பெயர் வந்தது. உஷை என அழைக்கப்படும் வேத காலத்து வைகறைத் தேவதைதான் அந்தப் பெண்களுக்கு நாட்டியக் கலையைக் கற்றுத் தந்தாளாம். இந்தக் கலை வாய்மொழியாகப் பழகப்படுகிறது. சிங்கேய்ரோல் (Chingkheirol) என்று போற்றிக் கொண்டாடப்படும் இந்தக் கலை தலைமுறை தலைமுறையாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. ஜகோய் (Jagoi) என அழைக்கப்படும் மணிப்புரி நாட்டியம் இந்தப் பகுதியின் செவ்வியல் நாட்டியமாகும் (Classical Dance). இந்தியாவின் எட்டு பெரிய செவ்வியல் நாட்டியங்களில் (Classical Dances) மணிப்புரி நாட்டியமும் ஒன்றாகும்.

மணிப்பூர் நாட்டியம் சமயம் மற்றும் ஆன்மிக விழுமியங்கள் கொண்டது. இதற்கான மூலம் பண்டைய சம்ஸ்கிருதத்தில் பரத முனியால் எழுதப்பட்ட நாட்டிய சாஸ்திரமாகும். மணிப்பூரில் அப்போதைய அரசர் சராய் ரோங்பா ஆட்சி செய்த 18ம் நூற்றாண்டில் ஆதிக்கம் செலுத்திய வைணவ மதத்தின் கருத்துகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டது இந்த நாட்டிய வகையாகும். அவருக்குப் பின்னால் வந்த கரீப் நிவாஸ் அரசர் சைதன்ய மகாபிரபு உருவாக்கிய கிருஷ்ண பக்தி வைணவத்தைத் தழுவினார். வங்காளத்தைச் சேர்ந்த சைதன்யர் ஆடல் பாடல் மூலம் கிருஷ்ண பக்தியைப் பரப்பி வைணவத்தை வளர்த்தார்.

மகாராஜா பாக்யசந்திரா கெளடியா வைஷ்ணவத்தைப் பின்பற்றினார். அப்போதுதான் மணிப்புரி நாட்டியத்தை முறைப்படி வகுத்து, தொகுத்து, ஆவணப்படுத்தினார். குமில் (Ku&mil) என அழைக்கப்படும் ஆடை அலங்கார வகைகளையும் அவர்தான் விரிவாக வடிவமைத்தார். அத்துடன், ஐந்து ராச லீலைகளில் வஸந்தராஸ், குஞ்ஜ ராஸ், மஹாராஸ் என்ற மூன்று வகைகளையும் அவர்தான் இயற்றினார். ஸ்ரீராமர், சிவபெருமான் எனப் பல்வேறு கடவுள்களை பற்றியதாக மணிப்புரி நாட்டியம் அமைக்கப்பட்டது.

மேய்தி இனத்தவர் லாய் ஹரோபா (Lai Haraoba) என்ற திருவிழாவைக் கொண்டாடுவார்கள். இது உமாங் லாய் எனப்படும் வன தேவதையைக் கொண்டாடும் விழா ஆகும். தேவர்கள் கோடைக்காலத்தில் பூமிக்கு வந்து மக்களை ஆசிர்வதித்து, வளம், அமைதி ஆகியவற்றை வழங்குவார்கள் என்று அவர்கள் நம்புகிறார்கள். லாய் ஹரோபா என்றால் கடவுளின் கருணைமழை என்பது பொருள். இந்தப் புவியுலகம் தோன்றியது, படைக்கப்பட்டது, அதன் பரிணாமம் ஆகிய புராண நிகழ்வுகளை சித்திரிக்கும் வகையில் இந்த விழா கொண்டாடப்படும். மணிப்பூர் மாநிலத்தின் கலாசாரத்தைப் பிரதிபலிப்பதாக அது அமையும். மந்திரங்கள், மண்ணின் இசை, நாட்டியம், சமூக விழுமியங்கள், பண்டைய பழக்க வழக்கங்கள் ஆகியவை ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து அற்புதமான நாட்டியமாக உருவாக்கப்பட்டுள்ளது.

திரைப்பட ஜாம்பவான் சத்யஜித் ராய், மணிப்புரி நாட்டியம் இந்த மண்ணிலிருந்து தோன்றியதால், தனது அற்புதமான சிறப்பை லாய் ஹரோபா பாரம்பரியத்துடன் யுகங்களைக் கடந்து வாழ்கிறது என்கிறார்.

மணிப்புரி நாட்டியத்தில் மிகவும் வசீகரமானது அதன் அழகான ஆடை அலங்காரம்தான். மணப்பெண்ணைப் போல் அலங்கரிக்கப்படும் பெண் கூடை போன்ற பாவாடையை அணிந்திருப்பர். பொன்,வெள்ளி என்று



உலோகங்களைப் போல் ஜொலிக்கும் வேலைப்பாடுகள் கொண்டு வண்ணமயமாக அமைந்திருக்கும் அந்த ஆடையில் சிறு சிறு கண்ணாடிகள் பொருத்தப்பட்டிருக்கும்.

மேலே, முகத்திரை போல மெல்லிய மேலங்கி சரிந்தோடும் வகையில் பூவைப் போல் அணிவிக்கப்படும். அது இந்து சமய சாஸ்திரங்களில் கூறப்பட்டதை சித்திரிக்கும் வகையில் மூன்று இடங்களில் சொருகப்பட்டிருக்கும். மேலே அணிந்திருக்கும் ரவிக்கை மென் பட்டு துணி வகையில் இருக்கும். மேலும் மெல்லிய துணியால் முக்காட்டைப் போல் அணிந்திருப்பர்.

மற்ற இந்திய பாரம்பரிய நாட்டியத்தைப் போல் மணிப்புரி நாட்டியக் கலைஞர்கள் காலில் மணிகளை அணிந்திருக்க மாட்டார்கள். ஆனால், முகம், கழுத்து, கைகள், கால்களில் ஜொலிக்கும் அணிகலன்களை அணிந்திருப்பார்கள். கலைஞர்கள் நாட்டியத்திற்கேற்ப அசையும் வகையில் மாலைகளை அணிந்திருப்பர்.

ஆண் நாட்டியக் கலைஞர்கள் வேட்டியைப் போன்ற ஆடை அணிந்திருப்பர். அதற்கு தோட்ரா அல்லது தோரா என்று பெயர். வேட்டியை பஞ்ச கச்சத்தைப் போல அணிந்திருப்பர். மணிப்பூரி நடனத்தில் லாசியா எனப்படும் பெண்களுக்கான நாட்டிய வகை நளினமானது. பாடல் நிறைந்தது. அத்துடன் ஆண்களின் தாண்டவ முறை நாட்டியமும் உண்டு. நாட்டியத்தின் அடிப்படை அசைவுகள் சாலி (Chali) அல்லது சாரி (Chari) என்று அழைக்கப்படுகின்றன.

மணிப்புரி நாட்டியத்தில் மிகவும் பிரபலமானது ராஸ லீலை. அது தாள ரஸக் (Tal Rasak), தண்டா ரஸக் (Danda Rasak), மண்டல் ரஸக் (Mandal Rasak) என்று மூன்று வகைப்படும். பாரம்பரியமாக குளிர்காலத்தில் மூன்று பவுர்ணமி நாட்களில் இக்கலை நிகழ்த்தப்படும். அதைப் போல் கோடைக் காலத்திலும் நிகழ்த்தப்படும். வஸந்த் ராஸ் ஹோலிப் பண்டிகையை ஒட்டி இளவேனில் காலத்தில் (வசந்த காலம்) நடத்தப்படும். மற்றவை தீபாவளி, அறுவடைத் திருநாள் ஆகிய பண்டிகைகளை ஒட்டி அமைந்திருக்கும். இந்த நாட்டியத்தில் பாடல்களும் ஆடல்களும் ராதைக்கும் கிருஷ்ணனுக்கும் இடையிலான காதலைச் சித்திரிக்கும். லலிதா, விஷாகா, சித்ரா, சம்பக்லதா, துங்கவித்யா, இந்துரேகா, ரங்கதேவி, சுதேவி ஆகிய கோபிகைகள் புடைசூழ இந்த நாட்டியம் அமையும்.

ஒவ்வொரு கோபிகைக்கும் தனித் தனிப் பாடல் உண்டு. பாடல்

*லாய் ஹரோபா நடனம் ஆடும் மணிப்புரி நடனக் கலைஞர்கள்.*



வரிகள் இலக்கிய அர்த்தமும், ஆன்மிகப் பொருளும் அமைக்கப்பட்டிருக்கும். பாடல்கள் சம்ஸ்கிருதம், மைதிலி, பிரிஜ் பாஷா மற்றும் இதர கிளைமொழிகளில் இயற்றப்பட்டிருக்கும். பாடல்கள் பெரும்பாலும் ஜெயதேவர், வித்யாபதி, கோவிந்தா, சண்டிதாஸ், ஞானதாஸ் ஆகியோரது கவிதைகளிலிருந்து கையாளப்படும்.

மணிப்புரி நாட்டியத்துக்குப் பின்னணி இசையில் வாய்ப்பாட்டு இருக்கும். புங், கர்தல் அல்லது சைம்பல் ஆகிய தோற்கருவிகள், பெனா எனப்படும் தந்திக் கருவி, ஒரு வகையான புல்லாங்குழல் ஆகியவை இடம்பெற்றிருக்கும். ஆண் கலைஞர்கள் புங் வாத்தியத்தை இசைத்தபடியே நாட்டியம் ஆடுவர். ஆண்கள் வேட்டி, தலைப்பாகை போல் அணிந்தபடி மத்தளம் போன்ற வாத்தியத்தை தோளில் அணிந்தபடி புங்சோலோம் என்ற நடனத்தை நிகழ்த்துவர். அதைப் போல் சைம்பல் என்ற பெரிய தாளத்தைத் தட்டியபடியே கர்தால் சோலோம் என்ற வகையும் நிகழ்த்தப்படும். இதைப் போல் பெண்கள் நாட்டியம் நிகழ்த்தினால், அது மண்டில்லா சோலம் என்று அழைக்கப்படுகிறது.

ஆண்கள் சிவ பெருமானின் தாண்டவ நாட்டியத்தை நிகழ்த்துவர். அது டஃப் சோலம் மற்றும் தோல் சோலம் என அழைக்கப்படுகிறது. கோப ரஸா என்ற நாட்டிய வகையை நிகழ்த்தும்போது, பசுக்களை மேய்த்தல் போன்ற அன்றாட வாழ்க்கை சித்திரிக்கப்படும். இது ஒருபுறம் இருக்க இதற்கு முற்றிலும் வேறான உத்தாட அகன்பா எனப்படும் பல்சுவை நாட்டிய வகை நிகழ்த்தப்படும். அதில் முழுத்திறன் வெளிப்படும் வகையில் கலைஞர்கள், விரைவாகவும், சுழன்றும், அமர்ந்த நிலையிலும் நாட்டியம் நிகழ்த்துவர்.

மணிப்புரி நாட்டியம் வடகிழக்கு மாநிலங்களைக் கடந்து நாடெங்கும் பரவியுள்ளது. கவியரசர் ரவீந்திர நாத் தாகூர் தான் உருவாக்கிய சாந்திநிகேதன் கல்வி நிறுவனத்தில் மணிப்புரி நாட்டியக் கலையை ஆசிரியர்களுக்குக் கற்பிக்குமாறு



*மணிப்புரி நடனக் கலைஞர் சோமா தாஸ் குப்தா.*

குரு புத்திமந்திரா சிங்கைக் கேட்டுக் கொண்டார். 1950ம் ஆண்டுகளில் ஜாவேரி சகோதரிகள் என அழைக்கப்படும் நயனா, ரஞ்சனா, சுவர்ணா, தர்ஷணா ஆகியோர் மணிப்புரி நாட்டியக் கலையை நாடு முழுவதும், உலகம் முழுவதும் எடுத்துச் சென்றனர். மணிப்பூர் மாநிலத் தலைநகர் இம்பாலில் உள்ள கோவிந்த் ஆலயத்தில் 1956ம் ஆண்டில் மணிப்புர் நாட்டியத்தை நடத்திய முதல் வெளி மாநிலக் கலைஞர்கள் ஆவர். அவர்கள் தங்களது குருநாதர்களான பிபின்சிங், கலாவதி தேவி ஆகியோருடன் இணைந்து மணிப்புரி நிருத்யாலயாவை இம்பால், மும்பை, கோல்கத்தா ஆகிய இடங்களில் 1972ல் தொடங்கினர்.


மணிப்பூரி நாட்டியக் கலைக் குடும்பத்தைச் சேர்ந்த குரு சங்கஜித் சிங் தனது மனைவி சாரு சிஜா மாத்தூருடன் இணைந்து மணிப்புரி நிருத்யாஸ்ரமத்தைத் தில்லியில் அமைத்தார். அவர்கள் தங்களது கலைக்குழுவுடன் இணைந்து ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் விரிவாகப் பயணம் செய்து மணிப்புரி நாட்டியத்தைப் பிரபலப்படுத்தினர்.

மணிப்புரி நாட்டியத்தின் பல்வகைத் திறன் கொண்ட நாட்டியப் பயிற்றுநர் சோமா தாஸ்குப்தா அமெரிக்காவில் ஹூஸ்டன் நகரில் மணிப்புரி நாட்டியக் கலையை 17 ஆண்டுகள் கற்பித்து வந்தார். தற்போது தான் நடத்தி வரும் திருப்தி நாட்டிய அகாடமியில் இளைய தலைமுறையினருக்கு நாட்டியம் கற்பித்து வருகிறார். கவியரசர் தாகூரின் பாடல்களுக்கு மணிப்புரி நாட்டிய வடிவம் கொடுத்து வருவது இவரது சிறப்பு.

அவரிடம் பேசியபோது, அமெரிக்காவில் பல இடங்களில் மணிப்புரி நாட்டியத்தை நிகழ்த்தியுள்ளேன். அது பெரிதும் வரவேற்கப் பட்டது. அந்த நாட்டியத்தைப் பார்த்து அமெரிக்கர்கள் என்னிடம் வந்து ஆர்வத்துடன் நாட்டியம் பற்றிக் கேட்கும்போது பெரிதும் உவகை கொள்கிறேன். இளைஞர்களுக்கு சுத்தமான பாரம்பரிய நாட்டியத்தைக் கற்பிக்க விரும்புகிறேன். மணிப்புரி நாட்டியத்துக்குத் தேவையான ஆடை அலங்காரங்களை மணிப்புரிலிருந்து கொண்டு வருவதுதான் சிரமமாக இருக்கிறது. இந்தியாவில் உள்ள

***மணிப்புரி நாட்டியத்தில் மிகவும் வசீகரமானது அதன் அழகான ஆடை அலங்காரம்தான்.***


பங்சோலம் ஆடும் கலைஞர்கள்.


சோமா தாஸ் குப்தா மணிப்புரி பாரம்பரிய போட்லோய் உடையில்.


மணிப்புரி கலைஞர்களை அழைத்து வந்து நாட்டிய நிகழ்ச்சி நடத்துவது என் கனவு. எனது குருநாதர் நிகழ்த்துவதைப் போல் ஆண்கள் நடத்தும் கோல் நாட்டியத்தை நிகழ்த்தவேண்டும் என்பது என் விருப்பம் என்றார்.

பரத நாட்டியம், குச்சிப்புடி, மோகினியாட்டம், ஒடிசி ஆகியவற்றைப் போல் மணிப்புரி நாட்டியத்தையும் ஓரளவு கற்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அதற்கெல்லாம் என் தாயார்தான் காரணம். செவ்வியல் நாட்டியத்தின் மீது மிகுந்த ஆர்வம் கொண்ட அவர்தான் பல்வேறு வகை நாட்டியக் கலைஞர்களை நாடு முழுவதும் கண்டறிந்து அவற்றைக் கற்பிக்க வழி செய்தார். அந்த வாய்ப்பு எனக்கு கலைமீதான மரியாதை, ஈர்ப்பு, படைப்புத் திறன் ஆகியவற்றுக்குப் பெரிதும் துணைபுரிந்தது. கலை என்பது மனிதனின் தனித்துவத்தின் அடர்த்தியான உணர்வின் வெளிப்பாடுதான் என்று அயர்லாந்து எழுத்தாளர், கவிஞர் ஆஸ்கர் ஒய்லிட் கூறியது பொருத்தமானது.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# சங்கத்தின் சேவை திட்டங்கள் செய்திகள், ரோட்டரி நியூஸ் இதழில் செய்தியாக வர வேண்டுமா?

ரோட்டரி நியூஸ், இந்த மண்டலத்தில் இருக்கும் சங்கங்களின் சேவை திட்டங்களை பற்றிய செய்திகளை தொடர்ந்து பிரசுரித்து வருகிறது. உங்கள் சங்கம்/மாவட்டம் உங்களது பகுதியில் வசிக்கும் மக்களின் வாழ்வை மேம்படுத்திய அல்லது மாற்றதை உருவாக்கிய சிறந்த திட்டங்களை எங்களுடன் பகிர்ந்துக் கொள்ளுங்கள்.




உங்கள் சங்கத்தின் திட்டங்களை பற்றி தெளிவாகவும் சுருக்கமாகவும் விவரித்து, நல்ல புகைப்படத்துடன் எங்களுக்கு அனுப்பக்கூடிய ஒரு நபரை உங்கள் சங்கத்தில் இனங்காணுங்கள். உங்கள் மொபைல் போனில் இருக்கும் போட்டோவாக இருந்தால் கூட, போட்டோ கேலரியில் இருந்து நேரடியாக எங்களுக்கு ஈமெயில் வாயிலாக மட்டுமே அனுப்ப வேண்டும், வாட்ஸ்ஆப் மூலம் அனுப்பும்போது புகைப்படங்களின் அளவு குறைவதோடு மட்டும் இல்லாமல் அதன் தரமும் குறைந்து விடுகிறது.

ரோட்டரி நியூஸ்கான உங்கள் திட்டங்களை சமர்ப்பிக்க தேவையானவை:

திட்டம் எப்படி உருவானது; திட்டத்தின் அவசியம்; திட்டத்தின் மதிப்பு மற்றும் அந்த தொகை எவ்வாறு திரட்டப்பட்டது; திட்டத்தை நிறைவேற்ற எதிர்கொண்ட சவால்கள்; திட்டம் எவ்வாறு நிறைவேற்றப்பட்டது; திட்டத்தின் பயனாளிகள்.

GML -இல் பிரசுரிக்கக் கூடிய மற்றும் தேசிய ரோட்டரி பத்திரிக்கையில் பிரசுரிக்கக்கூடிய திட்டங்களை நீங்கள் வேறுபடுத்திக் கொள்ள வேண்டும்.

உங்கள் சங்க திட்டங்களை கீழே இருக்கும் ஏதாவது ஒரு மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்: *rushbhagat@gmail.com*, or *rotarynewsmagazine@gmail.com*

# கார்ப்பரேட்களின் கூட்டுறவை RID 3190 கௌரவப்படுத்தியது

ரோட்டரி செய்திக்குழு



*குத்துசண்டை வீராங்கனை மேரிகோம் மற்றும் நிகழ்ச்சித் தலைவர் அபிஷேக் ரஞ்சன் ஓர் கார்ப்பரேட் பிரதிநிதிக்கு விருது வழங்குகின்றனர். DGசுரேஷ் ஹரி மற்றும் RC பெங்களூரு ஆர்ச்சர்ட்ஸ் தலைவர் D ரவிசங்கர் அவர்களும் உள்ளனர்.*

ரோட்டரியின் பல்வேறு சமுதாய வளர்ச்சி திட்டங்களுக்கு நன்கொடைகளை வழங்கிய கார்ப்பரேட் நிறுவனங்களின் கூட்டுறவுக்கு பாராட்டுகளைத் தெரிவிப்பதற்கு, பெங்களூரு FKCCI ஆடிட்டோரியத்தில் தொடர்ச்சியாக இரண்டாம் ஆண்டாக ரோட்டரி கர்நாடகா CSR மாநாடு மற்றும் விருதுகளை RID 3190 ஏற்பாடு செய்திருந்தது. DG சுரேஷ் ஹரி முன்னிலையில் எட்டு நிறுவனங்களுக்கான ரோட்டரி விருதுகளை ஒலிம்பிக் குத்துசண்டை வீராங்கனை மற்றும் ராஜ்யசபா MP மேரிகோம் வழங்கினார்.


RC பெங்களூர் ஜீவன்பீமாநகர் சங்கத் தலைவர் அனில் குமார் ராதாகிருஷ்ணன் இந்த நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

தனது உரையில், “கார்ப்பரேட்கள் வழங்கும் குறிப்பிடத்தக்க உதவி தனி நபர்களுக்கு மட்டுமல்லாமல் சமுதாயத்தில் மிகப்பெரிய அளவில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது’’ என்றார் மேரிகோம். தனது குத்துச் சண்டை வாழ்வை மேற்கோள் காட்டி, அவர்களின் தாராள மனப் பான்மையைப் பாராட்டினார். விளையாட்டுகள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு போட்டி நிறைந்த தாக மாறியுள்ளது என்றும் கூறினார்.

மாநாட்டு பிரதிநிதிகளிடையே RC பெங்களூர் ஆர்சார்ட்ஸ் தலைவர் D ரவிசங்கர் மற்றும் DGE Dr சமீர் ஹரியனி போன்றோரும் உரையாற்றினார்கள்.

திறன்வளர்ப்பு மற்றும் தொழில் முனைவு; இளைஞர்களுக்கு கல்வி; போன்றவை தொடர்பாக ஐந்து கலந்துரையாடல்கள் இம்மாநாட்டில் நடந்தது.

அடிப்படைக் கல்வி மற்றும் எழுத்தறிவு பிரிவில் SRF பவுண்டேஷனும், நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சை பிரிவில் ACC; நீர் மற்றும் துப்புரவுக்காக டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் மற்றும் HAL; வணிகம் மற்றும் சமூக வளர்ச்சிக்காக அல்ட்ராடெக் சிமெண்ட் போன்றவை விருது பெற்றது. விஷேசமான பாராட்டு விருது கேப்ஜெமினி டெக்னாலஜி சர்வீஸஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. ■



# RI போர்டின் புதிய பன்முகக் கோட்பாடு

RI தலைவர் பேரி ரஸின்

ரோட்டரியின் முக்கியத்துவங்களில் முதன்மையானது பன்முகத் தன்மை கொண்ட உறுப்பினர்களைக் கொண்டிருப்பது. அதுவும் சேவை புரியும் சமுதாயத்தின் பன்முகத்தைப் பிரதிபலிப்பதை உறுதிப்படுத்த வேண்டும். அதே சமயம் RI தலைமையில் போதிய அளவு பன்முகத் தன்மை இல்லாதது குறித்து விவாதிக்கப்பட்டு வருகிறது. உதாரணத்திற்கு, ரோட்டரியில் 22 சதவீதம் பேர் பெண்கள் என்ற நிலையில், அதே அளவு பெண்கள் தலைமைக்கு வருவதில்லை. இதை மாற்றலாம். பன்முகத் தன்மை, சமத்துவம், உள்ளடக்கிய கொள்கை ஆகியவற்றுக்கு ரோட்டரி இயக்குநர்களின் போர்டு ஒப்புதல் அளித்துள்ளது.

*மக்கள் ஒன்றிணைந்து நிலையான மாற்றத்தை ஏற்படுத்த செயல்படும் உலகுக்காகப் பாடுபடும் ஒரு சர்வதேச இணைப்பு அமைப்பான ரோட்டரி அமைப்பு பன்முகத் தன்மையை மதிக்கிறது, வயது, இனம், சாதி, மதம், திறமை, பாலின வேற்றுமை, பொருளாதார நிலை ஆகிய அனைத்து வேறுபாடுகளையும் கடந்து அனைத்துத் தரப்பு மக்களின் பங்களிப்பைப் போற்றுகிறது. பன்முகத் தன்மை கொண்ட, சமத்துவமான, உள்ளடக்கிய பண்பாடு கொண்ட தன்மையை ரோட்டரி வளர்த்தெடுக்கும். அதில் இதுவரை பிரதிநிதித்துவம் இல்லாதவர்கள் உறுப்பினர்களாகவும் தலைவர்களாகவும் செயல்படும் பெரிய வாய்ப்புகளைப் பெறுவர்.*

ரோட்டரி சங்கத்திலிருந்து ரோட்டரி தலைமையகம் வரையில் இதுதான் கருத்தாக இருக்கிறது.

ரோட்டரியின் உறுப்பினர்கள் எண்ணிக்கையிலும் ரோட்டரி தலைமைகளிலும் பெண்களுக்கான இடத்தை 2023ம் ஆண்டு ஜூன் மாதத்துக்குள் 30 சதவீதமாக உயர்த்துவது என்று ரோட்டரி இயக்குநர்களின் போர்டு இலக்கு நிர்ணயித்துள்ளது.

இந்த ஆண்டு சர்தேச சபையின் பயிற்சித் தலைவர் களாகவும் மண்டல தலைவர்களாகவும், RI கமிட்டி உறுப்பினர்களாகவும் அதிக அளவில் பெண்களை நியமித்ததன் மூலம் சாதனை எல்லைகளைத் தொட்டிருக்கிறோம். உள்ளூர் அளவில் ரோட்டரி சங்கங்களில் பெண் பிரதிநிதிகள் இல்லாத இடங்களுக்குப் பெண்களை நியமிப்பதற்கு ஊக்கமளிக்கலாம். பல வகைப்பட்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால், தலைமைப் பதவிகளிலும் போதிய பிரதிநிதிகள் எண்ணிக்கை அதிகரிக்கும்.

ரோட்டரி அமைப்புக்குப் புதிய எதிர்காலத்தை உருவாக்குவதற்கு இதுதான் சரியான தருணம். திறந்த அமைப்பாக, அனைத்தையும் உள்ளடக்கிய அமைப்பாக, அனைவருக்குமான அமைப்பாக, நல்லிணக்கத்துக்கான அனைவருக்கும் பயனளிக்கும் வகையிலான அமைப்பாக இயங்கும் வகையில் ரோட்டரியின் எதிர் காலத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு உரிய தருணம் வந்துவிட்டது.

© தி ரொட்டேரியன்

Rotary PEOPLE OF ACTION

# ரோட்டரி வேலைவாய்ப்பு முகாம்

கஜா புயல் பாதித்த திருவாரூர் மற்றும் கும்பகோணம் பகுதிகளில் வேலைவாய்ப்பு முகாமை DG S பிரையோன் உதவியுடன் RID 2981 ஏற்பாடு செய்தது. ஒட்டுமொத்தமாக 18,750 பேர் கலந்துகொண்ட நேர்காணலில் 7,500 பேருக்கு பணி நியமன உத்தரவுகள் வழங்கப்பட்டது.

முதல் வேலைவாய்ப்பு முகாம் திருவாரூர் நகரத்தில் நடைபெற்றது. 56 பன்னாட்டு நிறுவனங்கள் சுமார் 6,880 இளைஞர்களை நேர்காணல் செய்து 2,330 பேருக்கு உடனடியாக பணி நியமனக் கடிதங்களை வழங்கினர்.


DG S *பிரையோன் பணி நியமன கடிதம் வழங்குகிறார்.*

இரண்டாவது முகாமான கும்பகோணத்தில் சுமார் 11,900 பேர் கலந்துகொண்டனர். சுமார் 5,000 பேர் தங்களுக்கான பணி நியமன உத்தரவுகளைப் பெற்றனர்.

மாவட்ட பொதுச்செயலாளர் S ரமேஷ், திட்டப்பணி தலைவர் S D பூங்குன்றன் மற்றும் A G P கணேஷன், S பாலசுப்பிரமணியன் மற்றும் C வகுருநாதன் ஆகியோர் இந்த வெற்றிகரமான வேலைவாய்ப்பு முகாம்களை ஒருங்கிணைத்தனர்.■

# குறுஞ்செய்திகள்

## AR ரஹ்மான் இப்தார் உணவை கேன்ஸ்-விழாவில் உட்கொண்டார்



கிராமி மற்றும் ஆஸ்கார் வென்ற இசையமைப்பாளர் ரமலான் நோன்பை முடித்துக் கொண்டு தனது இப்தார் உணவை கேன்ஸ்-விழாவில் உட்கொண்டார். இந்தத் திரைப்பட விழாவில், இசைப் புயல் தான் அறிமுக இயக்குனராக பணிபுரியும் லே மஸ்க் என்ற இந்தியாவின் முதல் விர்சுவல் ரியாலிட்டி தொழில்நுட்ப திரைப்படத்தை விளம்பரப்படுத்த அங்கு வந்திருந்தார். அவர் இன்ஸ்டாகிராமில் கையில் ஒரு கிளாஸ் ஆப்பிள் ஜூஸ் பிடித்தபடி உள்ள புகைப்படத்தை வெளியிட்டார்.

## லட்சுமி என்ற இந்திய பெண் ICC போட்டியின் நடுவராவார்



இந்தியாவின் முன்னாள் கிரிக்கெட் வீராங்கனை G S லட்சுமி, சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ICC) சர்வதேச போட்டி நடுவர் பேனலில் முதல் பெண் நடுவராக பதவி ஏற்கிறார். 51 வயதான லட்சுமி முதன் முதலில் 2008–09 ஆம் ஆண்டு அதிகாரபூர்வமாக பெண்கள் உள்நாட்டு கிரிக்கெட்டிற்கு நடுவராக பணிபுரிந்தார் மேலும் மூன்று, பெண்கள் ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் மற்றும் மூன்று T20 சர்வதேசப் போட்டிகளிலும் நடுவராக இருந்தார். பின்னர் ஏப்ரல் 27-ஆம் தேதி ஓமன் மற்றும் நமீபியா இடையேயான ஆண்கள் ஒரு நாள் சர்வதேச போட்டிக்கு உலகிலேயே முதல் பெண் நடுவராக அதிகாரப்பூர்வமாக ஆஸ்திரேலியாவை சேர்ந்த கிளேர் போலோசக் பணிபுரிந்தார், அவரைத் தொடர்ந்து சர்வதேச போட்டிகளில் அதிகாரப்பூர்வ நடுவராக லட்சுமி பணிபுரிவார்.

## அருணாச்சல பிரதேசத்தில் புது வகையான பாம்பு இனம் கண்டறியப்பட்டுள்ளது

அருணாச்சல பிரதேசத்தில் உள்ள வெஸ்ட் காமெங் மாவட்டத்தில் புது வகை பாம்பு கண்டறியப்பட்டுள்ளது. இந்த சிவப்பான பழுப்பு நிற பாம்பு தனித்துவமான வெப்பத்தை உணரும் முறையை உடைய ஒரு விஷ பாம்பாகும், இது அசோக் கேப்டனின் தலைமையில் ஊர்வன பற்றி ஆராயும் அறிஞர்கள் குழுவினரால் கண்டுபிடிக்கபட்டது. டி.என்.ஏ. வரிசை முறைகளின் ஒப்பீட்டு பகுப்பாய்வு மற்றும் உருவவியல் அம்சங்களைப் பரிசோதித்ததில், இந்த வகையான பாம்பினம் இதற்கு முன்பு அறியப்படாத இனம் எனத் தெரியவந்தது.





## செர்ப்பா எவரெஸ்ட் மலை சிகரம் ஏறி சாதனை

செர்பா இனத்தை சேர்ந்த மலை ஏறுபவரான காமி ரீட்டா 24வது முறையாக எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி, அதிக முறை உலகின் உயரமான மலை சிகரத்தை வெற்றிகரமாக ஏறியதற்கான தனது முந்தைய சாதனையை முறியடித்தார். 49 வயதான ரீட்டா 1994 ஆம் ஆண்டு முதல் முறையாக எவரெஸ்ட் சிகரத்தை ஏறினார் மற்றும் அன்று முதல் இன்று வரை ஒவ்வொரு வருடமும் சிகரத்தை அடைகிறார்.



## சிறையில் ஒரு நாள்

சிறை வாழ்க்கை எப்படி இருக்கும் என்று யோசிக்கும் எவரும் தெலங்கானா சிறைகள் துறையின் பாரம்பரிய சிறைகள் அருங்காட்சியத்தின் ஒரு நூதன திட்டத்தைப் பயன்படுத்தலாம். இவ்வாறு மலேசியாவிலிருந்து ஒரு உணவக உரிமையாளர் மற்றும் பல் மருத்துவர் ஐதராபாதில் உள்ள இச்சிறைச்சாலையில் ஒரு நாள் தங்கி சிறை வாழ்க்கையை அனுபவித்தனர்.

ஒருங்கிணைப்பு: கிரண் ஜெஹரா; வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# நாசிக்கில் ரோட்டரியின் சுகாதார மேம்பாடு

ரோட்டரி செய்திக்குழு

நாசிக்கில் இருந்து 25 கிமீ தூரத்தில் உள்ள தலேகானில் உள்ள வித்யா பிரஷாலா உயர்நிலை பள்ளி மற்றும் ஜூனியர் கல்லூரியில் முப்பது கழிவறைகள், இரண்டு கைகழுவும் தொட்டிகளை RC நாசிக் ரோடு, RID 3030 சங்கம் தொடங்கிவைத்தது.



*வித்யா ப்ரஷாலா பள்ளி வளாகத்தில் சர்வதேச ரோட்டரி சங்கத்தினருடன் RC நாசிக் ரோடு உறுப்பினர்கள்.*

இந்த சங்கம், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த RC பாக்ஸ் ஹில் சென்ட்ரல், RID 9810; வர்ணாம்பூல் ஈஸ்ட், RID 9780; கோபார், RID 9670 மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த ஆமெஸ்பரி, RID 7930; மற்றும் கிளேடன், RID 7710 போன்ற சர்வதேச சங்கங்களுடன் இணைந்து திட்டப்பணியை செயல்படுத்தியது.

RIPR ஆக RID 3060 சங்கத்தின் மாவட்ட மாநாட்டுக்காக நாசிக்கில் இருந்த TRF அறங்காவலர் ஜூலியா ஃபெல்ப்ஸ், இந்த புதிய வசதிகளைத் திறந்து வைத்தார்.

ஜூலியாவுடன் சேர்ந்து, திட்டப்பணிக்காக இணைந்து செயல்படும் ஆஸ்திரேலிய சங்கங்களைச் சேர்ந்த ரொட்டேரியன்கள் ஸ்டீபன் மெக்கென்ஸி, PDG ஜெனிஃபர் கோபர்ன், ரோஜர் கோபர்ன், PDG பிரையன் மார்டின், PP டான் ஸ்வீனி, அனிதா ஸ்வீனி, மார்க் பல்லா மற்றும் அன்னி பல்லா ஆகியோருடன் RID 3060 DG பிங்கி பட்டேல் அவர்களும் இந்த திறப்புவிழாவில் கலந்து கொண்டனர்.

இப்பள்ளியில் 1,200 மாணவ மாணவிகள் படிக்கிறார்கள், இவர்கள் அனைவரும் 17 கிராமங்களில் இருந்து சுமார் 6 கிமீ தூரம் நடந்து அல்லது சைக்களில் வந்து படிக்கிறார்கள். PDG தத்தாத்ரேயா தேஷ்முக் மற்றும் DGE ராஜேந்திர பாம்ரே ஆகியோரும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். ■

---

## வாக்களிப்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது



மக்களைத் தேர்தலில் பொதுமக்கள் வாக்களிப்பதை ஊக்கப்படுத்த, உல்லாஸ்நகர் ரோட்டரி சங்கம், RID 3142, பெட் ஆக்ஸ்போர்ட் பள்ளியுடன் இணைந்து, விரலை காட்டுங்கள், தள்ளுபடி/பரிசு பெறுங்கள் என்ற, ஒரு விழிப்புணர்வு பிரச்சாரத்தை நடத்தியது. 20 முன்னணி வர்த்தக நிறுவனங்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, அந்த நிறுவனங்கள், வாக்களித்த குடிமக்களை ஊக்குவிக்க தள்ளுபடி அல்லது பரிசுகளை வழங்கினார்கள்.

“நாங்கள் வாட்ஸ்ஆப், ஃபேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் வழியாக இந்த திட்டத்தை தீவிரமாக பிரச்சாரம் செய்தோம் மற்றும் நகரம் முழுவதும் துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்தோம். முக்கிய இடங்களில் பேனர்கள் கட்டப்பட்டது. இவை எல்லாம் எங்களது பிரச்சாரத்தை மிகவும் பிரபலம் ஆக்கியது,” என்று சங்கத் தலைவர் தினேஷ் டண்டாலியா தெரிவித்தார்.

குறிப்பிடத்தக்க வகையில் 48.1% மக்கள் வாக்களித்தது, ரொட்டேரியன்களுக்கு மிகவும் மகிழ்ச்சியளித்தது, கடந்த 25 ஆண்டுகளில் இது தான் அதிகபட்ச வாக்களிப்பு சதவிகிதமாக இருக்கக்கூடும் என்றார். ■

# ரோட்டரி செய்தித்துளிகள்



RID 3012, *விருது மழையில் நனைந்தது.* PDG *ஷரத் ஜெயின்* TRF*ன்* Citation for Meritorius Service *விருது பெற்றார்; சதீஸ் குப்தா,* RC *டில்லி ரிவர்ஸைட், ரோட்டரியின் சுயநலமற்ற விருதால் கௌரவிக்கப்பட்டார் மற்றும்* RC *கௌஸம்பியை சார்ந்த சுரேந்திர மிஸ்ராவிற்கு, போலியோ இல்லா உலகிற்கான பிராந்திய சேவை விருது வழங்கப்பட்டது.*



RID 3240 DG *சயந்தன் குப்தா அவர்களுக்கு, இந்தியாவில் இருக்கும் பங்களாதேஷ் உயர் ஆணையாளர் திரு. சையத் முஸாம் அலி அவர்களால், புது தில்லியில் மருத்துவ துறையில் அவரது சேவையை அங்கீகரித்து, மானவ் சேவா சம்மான் விருது வழங்கப்பட்டது.*



*ஜெய்ப்பூர் ரோட்டரி சங்கம் ,* RID 3054, *பெண்கள் கல்வி மற்றும் தன்மேம்பாடு பெறுதல் ஆகியவற்றை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நகரில் பெண்கள் மட்டுமே பங்குபெற்ற ஒரு சைக்கிள் பேரணியை நடத்தி, இந்த ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தை அனுசரித்தது. இந்த பேரணியை, ராஜஸ்தான் மாநில பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் மம்தா பூபேஷ் மற்றும் சபாநாயகர் சுமித்ரா சிங் ஆகியோர் கொடி அசைத்து துவக்கி வைத்தார்கள்.*

# இது நாட்டியத்தின் வரலாறு

சந்தியா ராவ்

*இது தமிழகத்தில் நாட்டியம் வளர்த்த தேவதாசிகளின் கதை*

என் தாயாரும் அவளது அத்தை மகளும் 1970ம் ஆண்டுகளில் சென்னையில் பல கச்சேரி, நாட்டிய நிகழ்ச்சிகளுக்குச் செல்வது வழக்கம். அப்படி பார்த்த போது, நேரில் கண்ட நிகழ்ச்சியை விவரித்தார்.

இந்தியாவின் மிகச் சிறந்த நாட்டியக் கலைஞரான பாலசரஸ்வதி ஒரு முறை மியூசிக் அகாடெமியில் பரத நாட்டிய நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்தார். அப்போது, தனக்குப் பின்னணியாக மிருதங்கம் வாசித்தவர் மீது அவருக்குத் திருப்தியில்லை. உடனே, அவரை மாற்றிவிட்டு வேறு ஆளை வாசிக்கச் சொல்லுங்கள் என்று கேட்டுக் கொண்டாராம். பிறகு, அவரது விருப்பத்திற்கு ஏற்ற நபரையே மிருதங்கம் வாசிக்க வைத்தார். இதற்குள் அரை மணி நேரம் ஆகிவிட்டது. அந்த நேரத்தில், மேடையில் பாடகர் புள்ளிமானைப் பற்றிப் பாடியபோது, அதற்கேற்ப பாலசரஸ்வதி பல்வேறு முகபாவங்கள், அபிநயங்கள், முத்திரைகள் எல்லாம் விவரித்திருக்கிறார்.


அவரது வாழ்க்கையும் கலையும் என்ற தலைப்பில் பாலசரஸ்வதியின் வாழ்க்கை வரலாற்றை அவரது மருமகன் டக்ளஸ் நைட் எழுதியுள்ளார். அதில் இந்த நிகழ்வு இடம்பெறவில்லை. ஆனால், அதில் பாலசரஸ்வதியின் பாட்டி வீணை தனம்மாளின் வாழ்க்கைக் குறிப்புகள், அவரோடு பாலசரஸ்வதி வாழ்ந்தது ஆகியவை இடம்பெற்றுள்ளன. அந்த வாழ்க்கை வரலாற்று நூலில் சில சுவையான தகவல்களைப் பார்க்கலாம்.

சென்னை ஜார்ஜ் டவுனில் வீணை தனம்மாள் வசித்து வந்தார். வெள்ளிக்கிழமை மாலையில் நடைபெறும் அவரது வீணை இசைக் கேட்பதற்காக இசைக் கலைஞர்கள், பிரமுகர்கள், இசை ஆர்வலர்கள் என ஏராளமானோர் கூடிவிடுவார்கள்.

பாலசரஸ்வதி சிறுமியாக இருந்த காலத்தில் யாரோ ஒருவர் அவரை அறிமுகம் செய்தபோது, “வீணை தனம்மாளின் பேத்தி” என்று அறிமுகப்படுத்தியுள்ளனர். இதை அறிந்த வீணை தனம்மாள், அதெப்படி உன்னை என்னுடைய பேத்தி என்று சொல்லலாம்? என்று பாலசரஸ்வதியைத் தூண்டிவிட்டார். அப்போது, பாலசரஸ்வதி, இனிமேல், என்னை வீணை தனம்மாளின் பேத்தி என்று சொல்லாமல், வீணை தனம்மாளை பாலசரஸ்வதியின் பாட்டி என்று குறிப்பிடும்படி வைக்கிறேன் என்று பாட்டியிடம் உறுதி அளித்தார். அதற்கான நாளும் வந்தது.

தஞ்சாவூரைச் சேர்ந்த பாலசரஸ்வதி தேவதாசி குலத்தைச் சார்ந்தவர். தேவதாசியர் ஆலயத்துக்குச் சேவை புரிய அர்ப்பணிக்கப் படுபவர்கள் ஆவர்.

ஒரு காலத்தில் தேவதாசிகள் சமூகத்தில் வளமாகவும் வலிமையாகவும் இருந்தனர். பிரிட்டிஷ் வருகையை அடுத்து சமுதாயத்தில் ஏற்பட்ட பல மாறுதல்களில் தேவதாசி முறையும் மறைந்து விட்டது. அதன் மூலம் பெண்களைத் தங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் இழிநிலையும் மாறத் தொடங்கியது.




ருக்மணி தேவி வாழ்க்கை வரலாற்றை லீலா சாம்சன் எழுதியிருக்கிறார். ருக்மணி தேவி: ஒரு வாழ்க்கை (Rukmini Devi: A Life) என்ற அந்த நூலில் தேவதாசிகள் ஆலயப் பணிகளில் ஈடுபட்டு தனிப்பட்ட வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள அரும்பாடு பட்டிருக்கிறார்கள். நாட்டியக் கலையில் அவர்கள் தீவிரமாகப் பயிற்சி எடுத்துக் கொண்டனர். பல தேவதாசிகள் நாட்டிய, இசைக் கலைகளுக்கு ஏராளமான படைப்புகளை வழங்கினர். துரதிர்ஷ்டவசமாக அவற்றில் பெரும்பாலானவை காணவில்லை. தேவதாசி சமூகத்தினர் மீதான எண்ணம் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் மெல்ல மெல்ல மறையத் தொடங்கியது. அப்போதுதான் அவர்கள் முழுமையான நாட்டியக் கலைஞர்கள் என்ற அளவிலேயே பார்க்கப்பட்டனர் என்று எழுதுகிறார் லீலா சாம்சன்.

பாலசரஸ்வதி ரசிகமணி T K சிதம்பர நாத முதலியார் வீட்டில் நாட்டியமாடியபோது, அவருக்கு 14 வயது இருந்திருக்கும். அதே சமயம் ருக்மணி அருண்டேல் 28 வயதுடையவர். ருக்மணி தேவி உயர்சாதி வகுப்பைச் சேர்ந்தவர். அப்போதே பிரிட்டிஷ்காரரான அருண்டேலை திருமணம் செய்து கொண்டவர். அருண்டேல் ருக்மணியை விட 25 வயது மூத்தவர் என்கிறார் லீலா சாம்சன்.

ருக்மணி பால்லரினா அன்னா பவ்லோவாவின் நாட்டியத்தால் கவரப்பட்டார். பிறகு சதிர் ஆட்டம் அல்லது சின்னமேளம் என்ற பாரம்பரிய தேவதாசிகளின் கலையினால் கவரப்பட்டார். அதையடுத்து, சென்னையில் ஒவ்வொரு தேவதாசி வீட்டுக்கும் சென்று நாட்டிய ஆசிரியர்களைச் சந்தித்தார். பாலசரஸ்வதியின் தாயார் ஜெயம்மாளிடம் இசை கற்றுக் கொண்டார். நாட்டிய பாவத்தை பாலசரஸ்வதியிடம் கற்றார். இறுதியில் வீணை தனம்மாளின் நெருங்கிய தோழியான மயிலாப்பூர் கௌரி அம்மாளைச் சந்தித்தார். கச்சாலீஸ்வரர் ஆலயத்தில் தேவதாசியாகப் பணியாற்றிய கௌரி அம்மாள் அபிநயத்தில் மிகத் தேர்ந்தவர். அவரிடம் நடனம் கற்றார்.

அதன் பின் ருக்மணி தேவி பிரம்மஞான சபையில் (Theosophical Society) நாட்டிய நிகழ்ச்சியை

நடத்தினார். அங்கேயே நாட்டியம், இசை, கலைக்காக ஒரு பள்ளியை நிறுவினார். அது தான் இன்று ஆலமரத்தைப் போல் விரிந்து பரந்துள்ள கலாக்ஷேத்ரா. அது வரை பரத நாட்டியத்தை தேவதாசி குலத்தினர் மட்டுமே கற்றுவந்த நிலையை உடைத்து, அனைத்து சாதி யினரும் பரத நாட்டியக் கலையைக் கற்கச் செய்தார்.

டக்ளஸ் நைட், லீலா சாம்சன் ஆகியோரது இரு நூல்களிலும் ஏராளமான நிகழ்ச்சிகள் மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளன. அவை சமூக, பொருளாதார, நிகழ்கலைகள் ஆகியவற்றின் வரலாற்றைப் பிரதிபலிக்கின்றன.

இந்தத் தருணத்தில் டாக்டர் முத்துலட்சுமியையும் குறிப்பிட வேண்டும். அவர் தேவதாசியின் மகள் ஆவார். ஆண்களுக்கான கல்லூரியில் படிப்பதற்குச் சேர்ந்த முதல் பெண், சட்டப் பேரவையில் இடம்பெற்ற முதல் பெண், சென்னையில் புற்றுநோய் மருத்துவமனையை நிறுவியவர்.


தேவதாசிகளுக்கு விலைமாதர் என்று திணிக்கப்பட்ட முத்திரையை உடைத் தெறிந்த சட்டம் நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப் படுவதற்கு அவர் தான் மூல காரணம்.

எழுத்தாளர் ஸ்ரீவித்யா நடராஜன் எழுதிய The Undoing Dance என்ற நாவல் பாலசரஸ்வதி, ருக்மணி தேவி ஆகியோர் பாரம்பரியத்தைக் குறிப்பிட்டு அமைந்துள்ளது. படிப்பதற்கு மிகவும் சுவையான நாவல் அது.

மூன்று தலைமுறைப் பெண்களைப் பற்றியது. ராஜாயி, கல்யாணி, ஹேமா ஆகிய மூன்று பெண்களும் பாலா சங்கர் என்பவரும் பேசுவைதப் போல் அமைந்துள்ளது நாவல். இவர்களில் பாலாசங்கர் உயர்சாதியைச் சேர்ந்தவர். ஆனால், தேவதாசியினர் மீது அனுதாபம் மிக்கவர். ஆனால், அவரது தாயார் விஜயா அவர்களை வெறுத்து ஒதுக்குகிறார்.




பாலாசங்கரின் முதல் மனைவி இறந்துவிட்டதால், கல்யாணி அவருக்கு இரண்டாவது மனைவி ஆகிறார். பாலா சங்கருக்கு முதல் மனைவி மூலம் ஹேமா என்ற பெண் குழந்தை உண்டு. கல்யாணி நாட்டியம் ஆட விரும்பினாலும் அந்த வாய்ப்பு மறுக்கப்படுகிறது. இந்த முரண்பாடு களை மகள் ஹேமா உணர்கிறாள். இவர் களிடையில் ஒரு காலத்தில் தேவதாசியாக இருந்த ராஜாயி ஆலயத்தின் வாசலில் பூ கட்டி விற்கிறார். இப்படி நாவலில் ஏராளமான சுவையான நிகழ்வுகள் இருக்கின்றன. கதாபாத்திரங்களின் வாழ்க்கையில் நேரும் திருப்பங்கள் சுவையானவை. அவர்களின் வாழ்க்கை ரகசியங்கள், தியாகங்கள், அரசியல் செல்வாக்கும் சமூக அழுத்தங்களும் நாட்டிய உலகில் செலுத்தும் அதிகாரம் என பல நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. நாவலின் மையப் பொருள் நாட்டியம்தான்.




நூலாசிரியர் தி இந்து ஆங்கில நாளேட்டுக்கு 2018ம் ஆண்டு டிசம்பரில் அளித்த பேட்டியில், சிந்தனைக்குரிய கேள்வியை எழுப்பியுள்ளார். அதில் அவர் கூறியதாவது:

எந்த நோக்கமோ பெண்கள் ருக்மணி அருண்டேல், முத்துலட்சுமி ரெட்டி ஆகியோரைப் போல் தங்களுக்கே உரிய வகையில் சக்தி வாய்ந்தவர்கள், முற்போக்கானவர்கள். இசைவேளாளர் (தேவதாசி) என்ற சமுதாயத்தின் நிலையையே உயர்த்தியவர்கள்.

தேவதாசி பரம்பரை மீதான கறையைத் துடைக்காவிட்டால், கலாசார தேசீயம் என்ற தனது திட்டத்தில் பரத நாட்டியக் கலைக்கு உரிய இடம் கிடைக்காமல் போய்விடும் என்று ருக்மணி அருண்டேல் திடமாக நம்பினார். அத்துடன் சில நடைமுறைகளால் தேவதாசிகள் உடல்நலம் பாதிக்கப்படுவது கவலைப்பட்டார். அவர்களுக்கு எதிர்பாராமல் நேரும் பால்வினை நோய்கள் அவர்கள் பெற்றெடுக்கும் குழந்தைகளையும் தாக்கக் கூடும் என்று கவலைப்பட்டார். அவர்களை இதிலிருந்து மீட்டெடுக்க திருமணம் சரியான வழி என்று ருக்மணி தேவி கருதினார்.

விலைமாதர்கள் குறித்த விவாதங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. சில சமுதாயங்களில் பாலியல் தொழிலாகக் கருதப்பட்டு அங்கீகரிக்கப்படும் நிலை மெல்ல மெல்ல அதிகரித்துக் கொண்டு வரும் இந்த காலத்திலும் இது குறித்த விவாதம் நடக்கிறது. The Undoing Dance நாவலில் வருவதைப் போல் எல்லாவற்றுக்கும் மறு பக்கம் உள்ளது.

இந்த இரு வாழ்க்கை வரலாற்றிலும் ஏராளமான புகைப் படங்கள் இருக்கின்றன. அவற்றில் கவனத்தைக் கவர்வது, 1937ம் ஆண்டு எடுக்கப்பட்ட இரு பெண்களின் படங்கள்.

கோடுபோட்ட பைஜாமாக்களை அணிந்தபடி, நெற்றியில் குங்குமப் பொட்டு அணியாமல், உயரமான ஒரு பெண்ணும், சற்று குனிந்த பெண்ணும் நிற்கிறார்கள். ஒரு பெண் வாயில் சிகரெட், மற்றவர் கையில் சிகரெட். ஏதோ ஒரு புகைப்படத்துக்காக போஸ் கொடுப்பது தெரிகிறது. அவர்கள் யார் தெரியுமா? தஞ்சாவூர் பாலசரஸ்வதியும், மதுரை சண்முகவடிவு சுப்புலட்சுமியும். அந்தப் படம் ஆயிரம் விஷயங்களைச் சொல்கிறது.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.




RC **தஞ்சாவூர் காஸ்மோஸ்** — D 2981
கஜா புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.6.5 இலட்ச மதிப்புள்ள நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டது, இவர்கள் திருத்துறைப்பூண்டி தாலுகாவைச் சேர்ந்த 10 கிராமங்களில் உள்ள 18 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதற்கான நிவாரண நிதியை ஜப்பான் தமிழ் சங்கம் வழங்கியது.

RC **விழுப்புரம்** — RID 2982
RCC விராட்டிகுப்பம் மற்றும் ஸ்ரீ வெங்கடாசலபதி பாலிடெக்னிக் கல்லூரியைச் சேர்ந்த ரோட்டராக்ட் சங்கத்துடன் இணைந்து ரோட்ரி டே அனுசரிக்கப்பட்டது, இதில் ஏரிக்கரை சாலமேடு கிராமத்தில் சுமார் 25,000 பனை மரக்கன்றுகள் நடப்பட்டது. AG M மணிகண்டன் மற்றும் திட்டப்பணித் தலைவர் M செந்தில்குமார் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.





RC **வைசாக் கபில்ஸ்** — RID 3020
ஜில்லா பரிஷத் உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு கடற்படை வசதி மற்றும் திறன்வளர்ப்பு மையத்தில் ஒரு கல்விச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டது.

RC **பொன் புதுப்பட்டி** — RID 3000
பொன்னமராவதி ஸ்ரீ துர்கா மருத்துவமனை மற்றும் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை உடன் இணைந்து ஒரு நீரழிவு சார்ந்த கண் மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது, இதில் சுமார் 200 நோயாளிகளுக்கு கண்நோய்களுக்கான பரிசோதனை செய்யப்பட்டது. ஒரு பொது மருத்துவ முகாமும் ஏற்பாடு செய்யப்பட்டது, இதில் 600-க்கும் அதிகமானோர் பயனடைந்தனர்.



# சங்க சேவைகள்

**RC சந்திரபூர் — RID 3030**

சந்திரபூர் ஜீனியஸ் என்ற ஒரு பொதுஅறிவுப் போட்டியில் இந்த மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 30 பள்ளிகள் பங்கெடுத்தன. வெற்றி பெற்ற அணிகளுக்கு ரொக்கப்பரிசுகள் மற்றும் கேடயங்கள் வழங்கப்பட்டது. மாபெரும் இறுதிப்போட்டியில் சுமார் 1,000-க்கும் அதிகமான மாணவர்கள் பங்கெடுத்தனர்.




**RC பூஜ் வால்சிட்டி — RID 3054**

பூஜ் நகரத்தில் ரோட்டரியைப் பிரபலப்படுத்த பல்வேறு உள்ளூர் அணிகளுக்கிடையே ஒரு இரவுநேர கிரிக்கெட் போட்டித்தொடர் ஏற்பாடு செய்யப்பட்டது.



**RC தூலே ஃபெமினா — RID 3060**

தூலே பேருந்துநிலையத்தில் பேருந்து ஓட்டுனர் மற்றும் நடத்துனர்களுக்கு ஒரு மாபெரும் மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. சுமார் 250 ஓட்டுனர் மற்றும் நடத்துனர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டது.



**RC ஹோசியார்பூர் நார்த் — RID 3070**

சாலைப்பாதுகாப்பு விழிப்புணர்வை உருவாக்கும் ஒரு வித்தியாசமான திட்டப்பணியில், எமதர்மன் பரபரப்பான சாலையில் தோன்றி மோட்டார்சைக்கிள் ஓட்டுபவர்களை ஹெல்மெட் அணியவும் கார் ஓட்டுபவர்களை சீட் பெல்ட் அணியவும் வலியுறுத்தினார், மேலும் சாலை விதிகளைக் கடைபிடித்தவர்களுக்கு ரோஜாக்களையும் வழங்கினார்.



**RC யமுனாநகர் ரிவேரா — RID 3080**

உலகளாவிய மானியத் திட்டப்பணியில் ஆஸ்திரேலியா RC வக்கா வக்கா RID 9700 (Wagga Wagga) சங்கத்துடன் இணைந்து கண் மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு 1,000-க்கும் அதிகமான நோயாளிகள் பயன் பெற்றனர். 300 பேருக்கு கண்புரை அறுவை சிகிச்சை செய்ய அடையாளம் காணப்பட்டது. இச்சங்கத்தின் கண் தான மையம் மூலம் 10 வருடங்களில் 370 கண்களை சேகரித்துள்ளது.



**RC பதிந்தா கன்டோன்மென்ட்** — RID 3090

அப்பு சொசைட்டி பள்ளி மாணவர்களுக்கு ஷீ, சாக்ஸ் மற்றும் ஜெர்ஸிக்களை சங்கத்தினர் வழங்கினர். இந்த செயல்பாட்டிற்கு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ரொட்டேரியன்களுக்கு நன்றி பாராட்டினர்.



**RC பிரோஸாபாத்** — RID 3110

இந்த நகரத்தில் உள்ள கைலாதேவி கோவிலில் நலிவடைந்த குடும்பத்தினருக்கு உணவு வழங்கப்பட்டது. சங்கத் தலைவர் சந்தோஷ் அகர்வால், மற்றும் லட்சுமிகாந்த் பன்சால் இத்திட்டப்பணியில் முனைப்புடன் கலந்துகொண்டனர்.



**RC பாம்பே குயின்சிட்டி** — RID 3141

லோவர் பேரலில் ஒரு மாபெரும் மூன்று நாள் மருத்துவமுகாம் ஏற்பாடு செய்யப்பட்டது, இதில் 3,000-க்கு அதிகமானோருக்கு பல்வேறு நோய்களுக்கான பரிசோதனை செய்யப்பட்டது. இந்த முகாமை DG சசிகுமார் சர்மா தொடங்கிவைத்தார், இது 2008ம் ஆண்டிலிருந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.




**RC உடுப்பி மணிபால்** — RID 3182

மனவளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கான ஸ்பந்தனா சிறப்புப் பள்ளியில் கண் மருத்துவமுகாமும், மதிய உணவும் வழங்கப்பட்டது. விடுதிக்கு ஒரு இரும்பு அலமாரியை இந்த சங்கம் நன்கொடை அளித்தது.



**RC நாகர்கோவில்** — RID 3212

கன்னியாகுமரியில் பெண்களுக்கான ஹாக்கி தொடரில் பதினோரு அணிகள் கலந்துகொண்டன. இதை DG K ராஜகோபாலன் தொடங்கிவைத்தார். இதில் வெற்றி பெற்றவர்கள் மாநில அளவிலான போட்டிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



# சங்க சேவைகள்

**RC வாணியம்பாடி மிட்டவுன்** — RID 3231
நெக்குந்தி கிராமத்தைச் சேர்ந்த அரசு உயர் நிலைப்பள்ளியில் உள்ள இன்டராக்ட் சங்கத்துடன் இணைந்து அறிவியல் கண்காட்சி மூலம் மாணவர்கள் பல்வேறு கருத்தாக்கங்களில் தங்களின் அறிவுத்திறனை வெளிப்படுத்தினர்.



**RC சென்னை கோஸ்டல்** — RID 3232
நலிவடைந்த 100 சலவைத் தொழிலாளிகளுக்கு LPG அயன் பாக்ஸ் வழங்கப்பட்டது, ரூ.14 இலட்ச மதிப்புள்ள இந்த திட்டப்பணிக்கு ரொட்டேரியன்கள் ராம் மற்றும் ராஜீவ் குப்தா நிதியுதவி செய்தனர். கௌரவ விருந்தினராக DG பாபு பேரம் கலந்து கொண்டார்.






**RC ராஞ்சி மிட்டவுன்** — RID 3250
ஜார்க்கண்ட் ஆயுதக்காவல் படையைச் சேர்ந்த பெண் காவலர்களுக்கு நாப்கின் பேடுகள் வழங்கும் ஒரு இயந்திரம் வழங்கப்பட்டது. சுத்தம் மற்றும் சுகாதாரம் குறித்த முக்கியத்துவத்தை காவலர்களுக்கு உணர்த்தினார், சங்கத் தலைவர் சுனிதா வத்வா.



**RC ஜபல்பூர் எக்ஸலென்ஸ்** — RID 3261
அரசு பள்ளி மாணவர்களுக்கு சுமார் 200 ஜோடி ஷூக்களை சங்க உறுப்பினர்கள் வழங்கினர். இந்த அறிவார்ந்த செயல்பாட்டிற்காக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ரொட்டேரியன்களுக்கு நன்றி பாராட்டினர்.



**RC பேலிகஞ் அப்டவுன்** — RID 3291
“உஷ்நோதா” என்ற ஒரு சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு, நலிவடைந்த கிராமப்புற மக்கள் சுமார் 200 பேருக்கு போர்வைகள் வழங்கப்பட்டது. அந்த பகுதியில் ரோட்டரி பற்றிய ஒரு நல்ல அபிப்பிராயத்தை இந்தத் திட்டப்பணி உருவாக்கியது.


ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்
வடிவமைப்பு: L குணசேகரன்

# Subscribe NOW!

## Annual Subscription (India)

| Print version | e-Version |
|---|---|
| ₹420/- | ₹360/- |

(with effect from July 2019)




## for Rotary News Print Version & e- Version

## For the Rotary year 2019 – 2020

Print version ☐ e- Version ☐

| | English | Hindi | Tamil |
|---|---|---|---|
| No. of Copies | | | |

For every new member the pro-rata is ₹35 a month.

Please attach the TYPED list of individual members with their complete address, PIN code, Mobile number and e-mail ID. Intimate language preference (English/Hindi/Tamil) against each member's name. Please do not send the Semi-annual Report for address list.

**As concerned citizens of the world, those of you who are alarmed at the degradation of the environment and slaughter of trees, kindly opt for our e-Version.**

Rotary Club of ........................................ RI District ..............................

Name of the President/Secretary ........................................................................

Address ........................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

City ........................................ State ........................................ PIN ☐☐☐☐☐☐

STD Code .............................. Phone: Off. .............................. Res. ..............................

Mobile ........................................E-mail ........................................

Cheque/DD No. .............................. Dated .............................. for Rs. ..............................

Drawn on ........................................................................................................

in favour of "ROTARY NEWS TRUST" is enclosed.

Date: President/Secretary

Mail this form to:

Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008.
Tamil Nadu, India. Ph: 044 4214 5666, e-mail: rotarynews@rosaonline.org

# Subscription norms

1. Subscription is for the Rotary year (July to June).
2. **It is mandatory for every Rotarian to subscribe to a Rotary magazine.**
3. The annual subscription for print version is `420 per member.
4. Subscription for the full year must be sent in July, in the prescribed form.
5. Those joining after July can pay only for the remaining Rotary year at `35 an issue.
6. Subscription account of the club with *Rotary News* is a running account and does not cease at the end of June every year.
7. Names of all members, with their complete postal address with **PIN CODE,** mobile number and e-mail ID must be typed and sent along with the form and DD/cheques payable at par.
8. Copies of Semi Annual Report **SHOULD NOT** be sent as address list.
9. Language preference (English, Hindi and Tamil) should be stated alongside member's name.
10. **Members, please ensure that your name is included in the Subcribers' list that your club sends us. Often, names of members who have paid their subscription, are left out from the club list.**
11. Clubs must inform *Rotary News* about reduction in number of members, if any, before or in May. Please help reduce wastage of copies.
12. Clubs are liable to pay for the number of magazines we despatch according to the list available at Rotary News Trust.
13. Unpaid dues of the club will be shown as outstanding against the club. Any payment received subsequently will be adjusted against earlier dues.
14. **Clubs with subscription arrears will be notified to RI and may face possible suspension.**
15. We are in the process of tallying our subscriber list with RI membership from India.
16. If you want to switch to *The Rotarian*, please do so. But inform us **immediately** to avoid receipt of *Rotary News*. Or else your club will have to pay for it.

# பச்சிளங்குழந்தைகளுக்கு பராமரிப்பு அளிக்கும் ரோட்டரி

V முத்துக்குமரன்

1995 ஆம் ஆண்டில் ரோட்டரி சென்ட்ரல்-டிடிகே-வி.எச்.எஸ் இரத்த வங்கி அமைக்கும்போது, ரோட்டரி, VHS மருத்துவமனை சென்னையுடன் ஒரு ஒப்பந்தம் செய்துள்ளது. அது இன்னும் இவான்ஸ்டனில் ரோட்டரி போர்டினால் நிலையான செயல்திட்டத் திற்கான மாதிரி மற்றும் வெற்றிகரமான கூட்டமைப்பாக மேற்கோள் காட்டப்படுகிறது என்றார் PRID P T பிரபாகர்.

1991 ஆம் ஆண்டு பெங்களூரில் அவரது மாமா PT கஸ்தூரி நிறுவிய ரோட்டரி TTK இரத்த வங்கியினால் பிரபாகர் உந்தப்பட்டு, மீண்டும் TTK வளாகத்தில் ஒரு இரத்த வங்கி மூலம் VHS குழுமத்துடன் ஒரு வலுவான கூட்டணியை உருவாக்கினார். நான் உறுப்பினராக இருக்கும் RC மெட்ராஸ் சென்ட்ரல் ரோட்டரி சங்கம், நிலம், உபகரணங்கள் மற்றும் இதர வசதிகளை வழங்கி இருந்தாலும், மருத்துவமனை, ஊழியர்களையும் நிபுணத்துவத்தையும் வழங்கி உதவியது. வருடாந்திர இயக்க செலவான ரூ.50 இலட்சத்தை, TTK நிறுவனம் வழங்குகிறது.'' RID 3232வின் RC மெட்ராஸ் மெட்ரோவால் அபிமன்யு பிளாக்கில் உள்ள மகப்பேறு மற்றும் குழந்தைகள் சுகாதாரத் துறைக்கு வழங்கப்பட்ட 5 நவீன தொழில்நுட்ப பச்சிளங்குழந்தை பராமரிப்பு கருவிகள் மற்றும் ஆம்புலன்ஸ் சேவையை அர்ப்பணித்து, அங்கிருந்த ரொட்டேரியன்கள், மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவர்களுக்கு உரையாற்றினார். இரத்த வங்கி மூலம் வருடாந்திரம் 12,000 யூனிட்டுகள் இரத்தம் மாற்றீடு செய்யப்படுகிறது மற்றும் VHS மருத்துவமனையை நிறுவிய சமூக ஆர்வலரான Dr K S சஞ்சீவி அவர் கொள்கைக்கு ஏற்றார் போல் வாழ்கிறார். ரொட்டேரியன்கள் ரமண ஷெட்டி, திலீப் பஜாஜ் மற்றும் VHS மருத்துவமனை செயலாளர் Dr. S சுரேஷ் ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார் பிரபாகர்.

GK அறக்கட்டளையின் ரமண ஷெட்டியால் ரூ.5 கோடி நிதியளிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட அபிமன்யு பிளாக், 2017ம் ஆண்டு மார்ச் மாதத்தில் PRIP கல்யாண் பானர்ஜியால் திறந்து வைக்கப்பட்டது. 2015-16 ஆம் ஆண்டு 158,000 டாலர்கள் செலவில் நடைபெற்ற குளோபல் கிராண்ட் திட்டத்திற்கு, பஜாஜ் அவரது குடும்ப அறக்கட்டளையான உஷா K ஜாலி அறக்கட்டளை மூலம் 100,000 டாலர்களை வழங்கினார். இதன் மூலம் மகப்பேறு மற்றும் நியோனேட்டல் பிளாக்கிற்கு மருத்துவக் கருவிகள் மற்றும் ஃபர்னீச்சர்கள் வாங்க முடிந்தது.

VHS *மருத்துவமனையில்* PRID PT *பிரபாகர்;* RC *மெட்ராஸ் மெட்ரோ பொருளாளர் ராதாகிருஷ்ணன்,* SPM *சிவக்குமார்,* PDG PT *ராம்குமார், வினோத் சரோகி, சங்கத்தலைவர் சுந்தர் நடராஜன்,* T *ரவிச்சந்திரன்,* VHS *செயலாளர்* S *சுரேஷ், திலிப்பஜாஜ்,* DG *பாபு பேரம், ரமண ஷெட்டி, ரோமா பஜாஜ் மற்றும்* DRFC *சுசித்ரா ஸாகர்.*



DG பாபு பேரம் உரையாற்றுகையில் RC மெட்ராஸ் மெட்ரோவின் 50க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பல ஆண்டுகளாக சமூக செயல் திட்டங்களில் சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள் மற்றும் வெகு சீக்கிரம் அவர்களின் TRF பங்களிப்பு மில்லியன் டாலர்களைத் தொட்டுவிடும் என்று கூறினார். அந்த சங்கம், இது வரை அறக்கட்டளைக்கு 900,000 டாலர்களை வழங்கி இருக்கிறது.

### குளோபல் பார்ட்னர் தேடுவது

புதிதாக துவக்கப்பட்ட நியோநேட்டல் பிளாக்கிற்கு பஜாஜ் முன்வந்து அவரின் குடும்ப அறக்கட்டளையின் மூலம் $31,000 டெர்ம் கிப்ட் வழங்கினார். ஆனால் கருவியின் விலை அதிகமானதால் நாங்கள் ஒரு குளோபல் கிராண்ட் பார்ட்னரைத் தேட வேண்டியிருந்தது என்று PP T ரவிச்சந்திரன் கூறினார்.

இந்த சூழ்நிலையில், 2010 ஆம் ஆண்டு GSE குழுத் தலைவராக அவர் கலிபோர்னியாவில் உள்ள சென்டரல் வேலி பகுதிக்கு விஜயம் செய்த போது தொழில் தொடர்பாக ஒரு உறவை எற்படுத்திக் கொண்ட ரே காபரோஸ் தான் RID 5220 இன் கவர்னர் என அறிந்தார். மேலும் நான் GSE குழுவில் சென்ற போது என்னுடைய ஹோஸ்டாக இருந்த PDG டேவ் மான்டூத், அந்த மாவட்டத்தின் குளோபல் கிராண்ட் கமிஷனின் உறுப்பினர் என அறிந்தபோது, நான் மிகவும் ஆச்சரியமடைந்தேன்.

இரண்டு மணிநேரத்திற்குள், "இந்த திட்டத்தில் பங்கேற்க விருப்பம் தெரிவித்து, மான்டூத்" மின்னஞ்சல் ஒன்றை அனுப்பினார். குவாத்தமாலா, பிலிப்பைன்ஸ் மற்றும் மங்கோலியா ஆகிய நாடுகளில் இதே போன்ற திட்டங்களை அவர்கள் செய்து வருகின்றனர். இப்படித்தான் RC எச்காலோன், இந்த திட்டத்திற்கு 5,000 டாலர்களை வழங்கியது, அதே நேரத்தில் RC மெட்ராஸ் மெட்ரோ, கூட்டாக $1,900 ஏற்பாடு செய்தது மற்றும் TRF 4,800 டாலர்களை வழங்கி, இந்த திட்டத்தின் மொத்த மதிப்பை 43,000 டாலர்களாக உயர்த்தியது.

சங்கத்தின் ப்ரெசிடென்ட் சுந்தர் நடராஜன் PRID பிரபாகர், DG பேரம், நன்கொடையாளர்கள் பஜாஜ், ரமணா ஷெட்டி மற்றும் மற்ற ரோட்டரி உறுப்பினர்களை Dr. K S சஞ்சீவி மண்டபத்தில் நடைபெற்ற துவக்க விழாவில் வரவேற்றார்.

### பச்சிளங்குழந்தை குழந்தைகளுக்கு இலவச பரிசோதனை

பச்சிளங்குழந்தைகளுக்கு இருக்கும் குறைபாடுகளை கண்டுபிடிக்க, VHS இலவசமாக பரிசோதனை செய்யும் என்று Dr. சுரேஷ் கூறினார். சமீப காலங்களில் பச்சிளங்குழந்தை பிறந்த மற்றும் குழந்தை பராமரிப்புக்கான மருத்துவ செலவுகளை சமாளிக்க முடியாத சில கர்ப்பிணி பெண்கள் கருக்கலைப்பு செய்துகொள்கிறார்கள், இது மிகவும் துரதிஷ்டவசமானது.■

---

Rotary PEOPLE OF ACTION

# கொல்கத்தாவில் ஆதரவற்ற குழந்தைகளுக்கு அறுசுவை உணவு



DG *முகுல் சின்ஹா மற்றும்* RC *ரபீந்திர ஸரோபர் தலைவர் ரித்விக் கங்கூலி நிர்மலா சிஷீ பவனில்.*

கொல்கத்தா நகரத்தில் அறக்கட்டளை மிஷினரிகளால் நடத்தப்படும் நிர்மலா சிஷு பவனில் பெற்றோர்களால் கைவிடப்பட்ட 20 குழந்தைகள் இருக்கிறார்கள், RC ரவீந்திர சரோபர் மற்றும் RC கல்கத்தா விக்டோரியா மற்றும் RID 3291 சங்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் அறுசுவை உணவினை ஏற்பாடு செய்தனர்.

இச்சங்கத்தின் வழக்கமான சேவைப்பணிகளில் ஒரு அங்கமாக இந்நிகழ்ச்சி நடந்தது, இதில் ரோட்டரி ஏற்பாடு செய்திருந்த அறுசுவையான உணவினை ஆறு மற்றும் அதற்கு குறைவாக உள்ள குழந்தைகள் ருசித்து சாப்பிட்டனர்.''அவர்கள் தங்களின் குடும்பத்தினராலும் ஒரு பெற்றோராலும் கைவிடப்பட்டவர்கள் அல்லது அனாதையாக இருப்பவர்கள், எனவே அவர்களுக்கு ஆதரவும் அரவணைப்பும் தேவை,'' என்று சொல்கிறார் RC ரவீந்திர சரோபர் சங்கத்தைச் சேர்ந்த ரித்விக் கங்குலி.

ரொட்டேரியன்களும் பால் பவுடர், துணிமணிகள், உணவுப்பொருட்கள் மற்றும் குழந்தைகளுக்கு விளையாட்டு பொம்மைகளையும் நன்கொடையளித்தனர். DG முகுல் சின்ஹா ரோட்டரியின் இந்த முயற்சிகளைப் பாராட்டினார். சிஷு பவனில் நடந்த இந்தத் திட்டப்பணியின் மொத்த மதிப்பு சுமார் ரூ.40,000. ■

**ரோட்டரி நியூஸ் ஆண்டு சந்தா செலுத்தும் வழிகள்:**

*இப்போது நீங்கள்* ரோட்டரி நியூஸ் ஆண்டு சந்தாவை *ஆன்லைன் மூலமும் செலுத்தலாம். எங்கள் வங்கி விவரம்:*

Bank : HDFC Bank
SB Account

Branch : Egmore, Chennai

A/c Name : Rotary News Trust

A/c No. : 50100213133460

IFSC Code : HDFC0003820

*ஆன்லைனில் பணம் செலுத்தியப் பின், உங்கள் சங்கப்பெயர், சங்கத் தலைவர்/செயலாளர் பெயர், பணம் செலுத்திய தேதி, எவ்வளவு செலுத்தினீர்கள் மற்றும்* UTR *எண் இவற்றை மறக்காமல் எங்களுக்கு இமெயில் செய்து விடுங்கள்.*

*சந்தாவை உங்கள் வங்கியில் காசோலை அல்லது ரொக்கமாக கட்டினால் உங்கள் சங்கப் பெயரை மட்டும் அங்கு குறிப்பிடுங்கள்.* “Rotary club of” *என்பதை தவிர்க்கவும்.*

# Rotary at a glance

Rotarians : 1,228,117

Clubs : 36,005

Districts : 538

*Rotaractors : 167,007

Clubs : 10,038

*Interactors : 555,266

Clubs : 24,142

RCC : 10,409

**Estimated*

As on May 14, 2019


## Membership Summary

As on May 1, 2019

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians | Rotaract Clubs | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 114 | 4,695 | 211 | 41 | 233 | 205 |
| 2982 | 68 | 3,117 | 164 | 69 | 117 | 53 |
| 3000 | 131 | 5,506 | 540 | 233 | 686 | 203 |
| 3011 | 82 | 3,506 | 746 | 47 | 117 | 25 |
| 3012 | 91 | 3,626 | 816 | 57 | 132 | 56 |
| 3020 | 77 | 4,087 | 228 | 56 | 467 | 349 |
| 3030 | 92 | 4,981 | 625 | 81 | 326 | 195 |
| 3040 | 95 | 2,130 | 241 | 33 | 138 | 142 |
| 3053 | 69 | 3,088 | 545 | 10 | 57 | 96 |
| 3054 | 128 | 6,336 | 1,114 | 77 | 325 | 475 |
| 3060 | 103 | 4,369 | 572 | 59 | 128 | 139 |
| 3070 | 103 | 3,173 | 344 | 47 | 164 | 58 |
| 3080 | 82 | 3,480 | 304 | 77 | 226 | 109 |
| 3090 | 79 | 2,014 | 64 | 36 | 39 | 122 |
| 3100 | 78 | 1,932 | 118 | 12 | 78 | 146 |
| 3110 | 116 | 3,874 | 317 | 30 | 52 | 104 |
| 3120 | 76 | 3,246 | 397 | 31 | 63 | 52 |
| 3131 | 132 | 5,564 | 1,244 | 95 | 315 | 90 |
| 3132 | 101 | 4,014 | 436 | 39 | 217 | 151 |
| 3141 | 96 | 5,708 | 1,366 | 112 | 274 | 84 |
| 3142 | 95 | 3,524 | 677 | 77 | 205 | 64 |
| 3150 | 95 | 3,620 | 370 | 61 | 249 | 109 |
| 3160 | 75 | 2,627 | 162 | 28 | 48 | 82 |
| 3170 | 126 | 5,730 | 633 | 59 | 351 | 165 |
| 3181 | 84 | 3,788 | 367 | 57 | 276 | 115 |
| 3182 | 85 | 3,414 | 257 | 32 | 282 | 96 |
| 3190 | 128 | 5,146 | 696 | 126 | 372 | 52 |
| 3201 | 145 | 5,504 | 367 | 96 | 141 | 49 |
| 3202 | 131 | 5,107 | 258 | 79 | 448 | 47 |
| 3211 | 140 | 4,531 | 294 | 8 | 98 | 129 |
| 3212 | 99 | 4,125 | 329 | 96 | 300 | 142 |
| 3231 | 83 | 3,543 | 345 | 50 | 217 | 306 |
| 3232 | 120 | 5,077 | 832 | 118 | 352 | 83 |
| 3240 | 89 | 3,153 | 405 | 49 | 181 | 171 |
| 3250 | 102 | 3,928 | 688 | 62 | 217 | 178 |
| 3261 | 73 | 2,660 | 349 | 11 | 112 | 43 |
| 3262 | 92 | 3,451 | 423 | 38 | 77 | 77 |
| 3291 | 147 | 3,748 | 734 | 84 | 137 | 604 |
| **India Total** | **3,822** | **151,122** | **18,578** | **2,373** | **8,217** | **5,366** |
| 3220 | 72 | 2,038 | 289 | 77 | 215 | 73 |
| 3271 | 89 | 1,569 | 263 | 55 | 19 | 16 |
| 3272 | 148 | 2,316 | 386 | 51 | 40 | 40 |
| 3281 | 211 | 5,903 | 880 | 224 | 94 | 189 |
| 3282 | 148 | 4,112 | 405 | 126 | 50 | 43 |
| 3292 | 117 | 4,653 | 721 | 123 | 133 | 113 |
| **S Asia Total** | **4,607** | **171,713** | **21,522** | **3,029** | **8,768** | **5,840** |

*Source: RI South Asia Office*

# On the racks





## The Hybrid Diet

Author : **Patrick Holford and Jerome Burne**
Publisher : **Hachette India**
Pages : **383; `499**

This book shows you how to make the best use of glucose (which comes from carbohydrates in fruit and vegetables) and ketones (which are made in the body from fat) when you need them.

In their quest to discover the perfect diet, leading health journalist Jerome Burne and nutrition expert Patrick Holford, have explored latest cutting-edge science and put together a plan that is sound, simple and delicious — one that is based on how your body works best.

Recent research has shown that a diet that is very low in carbs and high in good fats is effective for weight loss, can counteract many diseases and will enhance athletic performance and endurance. The drawback is that it is difficult to stick to such a diet as most people love carbs. But as The *Hybrid Diet* demonstrates, we don't need to choose.





## Magical Women

Author : **Sukanya Venkatraghavan**
Publisher : **Hachette India**
Pages : **215; `399**

Here is a compelling collection of short stories that speak of love, rage, rebellion, choices and chances . *Magical Women* brings together some of the strongest female voices in contemporary Indian writing. The stories combine astounding imagination with superlative craft to intrigue and delight readers in equal measure.

A weaver is initiated into the ancient art of bringing a universe into existence; a demon hunter encounters an unlikely opponent; four goddesses engage in a cosmic brawl; a graphic designer duels with a dark secret involving a mysterious tattoo; a defiant *chudail* (witch) makes a shocking announcement at a kitty party; a puppet seeking adventure discovers who she really is; and finally, a young woman's resolute choice leads her to haunt 'Death' across millennia. With lots of emotion, fantasy and mystery, the stories have a gripping narrative.




## Toilet Warrior

Author : **Mark Balla**
Publisher : **Notion Press**
Pages : **223; `499**

During a business trip to India in 2012, Mark Balla, member of RC Box Hill Central, RID 9810, Australia, struck a friendship with two youngsters in Dharavi, one of the largest slums in the world. He was surprised to see that girls stayed away from a Dharavi school for want of toilets and decided to build exclusive toilets for girl students in India.

*Toilet Warrior* is his journey from Queenstown in Australia to India and how Rotary and the World Toilet Organisation helped him transform the lives of 30,000 girls. Highly inspiring, witty, and cleverly narrated, the book tells the story of his awakening and its impact. In the *Final Word,* PRID Sushil Gupta says, "I hope the readers will enjoy reading this real story, a story of how one man can change society."

When you buy this book through *www.operationtoilets.org.au*, you will be making a contribution to projects that will change the lives of some of the most underprivileged people in the world.

Compiled by Kiran Zehra
Designed by Krishnapratheesh S

LBW

# மேற்கத்திய இசைக்கு கொரியாவில் வரவேற்பு!

TCA ஸ்ரீநிவாச ராகவன்

நான் ஆறு ஆண்டுகளுக்கு முன் ஓய்வு பெற்றேன். ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் பேராசிரியரான என் மனைவி கொரியா நாட்டில் சில ஆய்வு நடத்துவதற்குத் திட்டமிட்டாள். நானும் அவளுடன் சென்றேன். என் மனைவி டி.வி.யில் கொரிய நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசிப்பாள். கொரிய மொழி தொடர்கள் மிகச் சிறப்பாக இருக்கும் என்று கூறுவாள்.

இந்தியாவில் நெட்ஃப்ளிக்ஸ் (Netflix) இணைய சேவை வந்தப்பின். என் மனைவி மீண்டும் கொரிய நிகழ்ச்சிகளைப் பார்க்க ஆரம்பித்தால். நானும் அவளோடு சேர்ந்து பார்க்க முடிந்தது. அதில் என்ன ஆச்சரியம் என்றால், சப் டைட்டிலில் மொழிபெயர்ப்பு மிகவும் கச்சிதமாக இருக்கும். அதன் அர்த்தம் மிகச் சரியாக இருக்கும்.

கடந்த இரு ஆண்டுகளாக இரண்டு டஜன் கொரிய தொடர் களைப் பார்த்து ரசித்திருப்போம். கதைக் கரு எளிமையாகவும் பிசிறு இல்லா மலும் இருக்கும். திரைக்கதை அழகாக வடிவமைக்கப்பட்டிருக்கும். எடிட்டிங் மிகச் சிறந்ததாக இருக்கும். ஒரு காட்சி 3 நிமிடத்துக்கு மேல் இருக்காது. இதனால், ஒவ்வொரு காட்சித் தொகுப்பும் அழகாக நகரும். பின்னணி இசையும் பொருத்தமாக அமைந்திருக்கும். ஒளியமைப்பு நன்றாக இருப்பதால், நடிகர்களின் நடிப்புத் திறனும் ஜொலிக்கும். காரணம், 90 சத வீதம் படப்பிடிப்பு குளோஸ் அப் காட்சி களாக இருக்கும். நடிகர்களும் கச்சி தமாக நடிக்கவேண்டும் என்று உணர்ந்துள்ளனர். காரணம், சின்னத்திரைப் போட்டி கடுமையானது. சம்பளமும் குறைவு.

கொரிய மொழி பொழுதுபோக்கு தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் சீரியல் அடிப்படையிலானவை. மேற்கத்திய பாரம்பரிய இசை கொண்டவை. மனித உறவுகளின் சிக்கல்களை மையமாகக் கொண்டு நிகழ்ச்சிகள் அமையும். ஆனால், மேற்கத்திய பாரம்பரிய இசையின் (Western Classical Music) பின்னணியில், இசைக் கலைஞர்களைக் கொண்டு நிகழ்ச்சிகள், தொடர்கள் உருவாக்கப் படும். தி பீதோவன் வைரஸ் (The Beethoven Virus) என்ற விருது பெற்ற நிகழ்ச்சி குறிப்பிடத் தக்கது. இது 18 எபிசோடுகளைக் கொண்டது. ஒவ்வொன்றும் ஒரு மணி நேரம் ஓடும். எளிதில் பாடக்கூடிய வகையில் உள்ள கான்டிபில் (Cantabile) என்ற இத்தாலிய இசை, ரகசிய உறவு (Secret Affair), ஐந்து விரல்கள் (Five Fingers), ஸ்பிரிங் வால்ட்ஸ் (Spring Waltz) ஆகியவை குறிப்பிடத் தக்கவை. ரகசிய உறவு பியானோ இசைக் கலைஞர் தனது ஜூனியர் மீது கால் கொள்வது தொடர்பானது. ஐந்து விரல்கள் ஒரு பியானோ கலைஞருக்கு உறவின் மீதான கோபத்தைச் சித்திரிக்கும். ஸ்பிரிங் வால்ட்ஸ் இன்னொரு பியானோ இசைக் கலைஞர் பற்றியது.


இத்தொடர்களைத் தொலைக் காட்சியில் பார்க்கும்போது பீதோவன், மொஸார்ட், ஹைடன், பாச் போன்ற இசை மேதைகளின் இசை எப்படி கொரியாவுக்கும் பொருந்துகிறது என்று வியப்படைய நேர்கிறது.

மேற்கத்திய இசை கொரியாவுக்கு 19ம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மிஷனரி மூலம் வந்தது. 1910ம் ஆண்டு கொரியாவை ஜப்பான் ஆக்கிரமித்து காலனியாதிக்கம் செலுத்தியபோது, மேற்கத்திய இசை இன்னொரு அலையை வீசியது. அப்போது, மேட்டுக் குடியினர் அதைப் பின்பற்றினர்.

ஓர் உண்மைக் கதையின் அடிப்படையில் அமைந்த மரணத்தின் பாடல் (Hymn of Death) என்ற புகழ்பெற்ற தொலைக்காட்சி தொடர் இவற்றையெல்லாம் சித்திரிக்கிறது. 1947ம் ஆண்டில் ஜப்பானியர்களை அமெரிக்கர்கள் துரத்தியடித்தனர். எதிர்பாராமல் 1948ம் ஆண்டில் ஜான் S கிம் என்ற இசைக்கலைஞர் சியோல் ஃபில்ஹார்மனிக் (Seoul Philharmonic) என்ற இசைக் குழுவை தொடங்கினார்.

ஒரு திறந்த வெளிஅரங்கில் அவர் பீதோவான் இசையை இசைக்கும் நிகழ்ச்சி ஒன்றைக் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இன்றைக்கு, ஜப்பான், சீனாவுடன் கொரியாவும் மேற்கத்திய பாரம்பரிய இசைக்கு தாராளமாக நிதியுதவி செய்கிறது. இப்போது மேலை நாடுகளில் இசைக் குழுக்கள் பொது இடங்களில் திடீரென்று கூடி இசை நடத்தி பணம் திரட்டிவிட்டு கலைந்துவிடும் போக்கு அதிகரிக்கிறது.

மேற்கத்திய இசை மேலை நாடுகளிலிருந்து கீழை நாடுகளில் குடிபுகுந்துவிட்டது.■


ALOHA
ROTARY
Discover the true spirit of aloha with people of action from all over the world at the 2020 Rotary International Convention in Honolulu, Hawaii, USA, 6-10 June 2020.
Take advantage of the limited-time registration rate of US$395* from 1 to 5 June.
Register at riconvention.org.
*Registration must be paid in full between 1 and 5 June 2019 to receive the US$395 rate.
Rotary
HONOLULU
HAWAII 2020

Regn. No. – TN/CCN/677/2019–2021
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019–2021
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372

Total number of pages in this monthly issue, including cover, 84. Price: `35
Rotary News Tamil published on 1st of every month

ADVT

Rotary
District 3012

BE THE INSPIRATION
R.I. THEME 2018-19

## ROTARY DISTRICT 3012 GLOBAL GRANT PROJECT

# ROTARY VARDAN CT SCAN MACHINE

**Inaugurated by Dr. SUBHASH JAIN AKS**

**DISTRICT GOVERNOR 2018-19, R.I. DISTRICT 3012**

in the Presence of **Dignitaries & District Team Members** on **Sunday, 19th May 2019**
at **Vardan Multispeciality Hospital,** Meerut Road NH-38 (Opp. Guldhar) Ghaziabad (U.P.)



**DR. SUBHASH JAIN AKS**
District Governor 2018-19









